FOR FAVOUR OF REVIEW

# என் குருநாதர் பாரதியார்


ஆசிரியர்

ரா. கனகலிங்கம்

புதுச்சேரி



வெளியீடு :

சக்தி காரியாலயம், சென்னை

*

விநியோகம் :

நவ பாரதி பிரசுராலயம் லிமிடெட்

திருநெல்வேலி & சென்னை

Printed at Thompson & Co., Ltd., Madras, (P. I. C. No. M. S. 15) &
Published by Shakti Karyalayam, Madras, M. S. 202—
. (8-10-1947)—2000 Copies.

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| | பதிப்புரை | பக்கம் | 5 |
| | அன்புத் திறவுகோல் | ... | 9 |
| 1 | குரு தரிசனம் | ... | 23 |
| 2 | பாரதியார் பிரசங்கம் | ... | 31 |
| 3 | பிரசங்கத்திற்குப் பரிசு | ... | 38 |
| 4 | உபநயனம் செய்வித்தார் | ... | 44 |
| 5 | உப்பளம் தேசமுத்துமாரி | ... | 52 |
| 6 | பிரெஞ்சு வாத்தியார் | ... | 60 |
| 7 | இதயக் கோவிலில் ஹரிஜனப் பிரவேசம் | ... | 67 |
| 8 | பாரதியாரின் ஸமதர்மம் | ... | 74 |
| 9 | நிகழ்ச்சிக் கதம்பம் | ... | 80 |
| 10 | என் வீட்டில் பாரதியார் | ... | 94 |
| 11 | புதுவையில் பிரிந்து சென்னையில் சந்திப்பு | ... | 101 |
| 12 | தீர்க்கதரிசி | ... | 108 |
| 13 | கோவில் யானையும் குருநாதரும் | ... | 115 |
| 14 | குருநாதரின் மறைவு | ... | 119 |


14-படங்கள்

# பதிப்புரை

நான் திருவனந்தபுரத்தில் வக்கிலாகச் சில காலம் இருந்தேன். ஆனால் தமிழ் நூல்களை வாசித்துக்கொண்டிருப்பதுதான் பெரும்பாலும் எனக்கு வேலை. எனக்கு உற்ற துணையாக இருந்தவர்கள் ஸ்ரீ கே. ஜி. சங்கர அய்யரவர்களும் கவிமணி ஸ்ரீ. தேசிகவிநாயகம் பிள்ளையவர்களும் ஆவர். ஒவ்வொரு நாளும் மாலையில் புத்தன் சந்தையிலுள்ள சைவப்பிரகாச சபையில் நானும் வேறு சில நண்பர்களுமாகக் கூடிக் காலம் போக்குவது வழக்கம். ஞாயிற்றுக்கிழமைகளில் திருக்குறள் ஆராய்ச்சி நடைபெற்றுவரும். இந்தக் காலங்களில் ஆராய்ச்சி நடப்பதற்குப் பதிலாக, அடிக்கடி வாதப் பிரதிவாதங்களும், ஒரு சில சமயங்களில் வாதம் முற்றிச் சண்டை சச்சரவுகளுங்கூட நிகழும்.

*1918*-ம் வருஷம் நவம்பர் மாதம் ஒரு ஞாயிற்றுக் கிழமை; சுமார் 3 மணி இருக்கும். சைவப்பிரகாச சபையில் நானும் நண்பர்களுமாக வழக்கம்போல் திருக்குறள் ஆராய்ச்சி நடத்தக் கூடியிருந்தோம். வந்து சேரவேண்டியவர்களை எதிர்பார்த்து எதிர்பார்த்துச் சிறிது சலிப்புற்றோம். யாரேனும் வருகிறார்களா என்று வாசற்படியில் நின்று நான் எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தேன். மாலைப் பொழுதாயினும், வெயில் கடுமையாய்த்தான் இருந்தது.

அப்போது வாசல் நடையை அடுத்துள்ள பெரிய தெருவில் ஒருவர் போய்க்கொண்டிருந்தார். சுமார் முப்பத்தைந்து வயது இருக்கலாம்; கம்பீரமான தோற்றம்; நடுத்தரமான உயரம்; வீரபுருஷனுக் குரியதோர் நடை; ஆவலுடன் எங்கும் கூர்ந்து கவனிக்கும் அஞ்சாத பார்வை; புருஷ லக்ஷணமான மீசை.

வீதியில் போய்க்கொண்டிருந்தவர் 'சைவப் பிரகாச சபை' என்று தமிழில் எழுதித் தொங்கவிட்ட பலகையையும் அங்கே நின்றுகொண்டிருந்த ஒரு சிலரையும் பார்த்தார். மலையாளத் தலைநகரில் எங்கும் மலையாள மொழியிலேயே இடங்கள் தெருக்கள் முதலியவற்றின் பெயர்கள் எழுதப்பட்டிருக்க, நகரின் மத்தியில் தமிழெழுத்துக்கள் காணப்பட்டமை அவருக்கு ஆச்சரியத்தையும் குதூகலத்தையும் விளைவித்திருக்க வேண்டும். திடீரெனச் சபையினுள்ளே புகுந்தார். அங்கே நின்றுகொண்டிருந்த என்னை நோக்கித் தாம் யாரென்று தெரியுமா என்று கேட்டார். பாரதியாரா யிருக்கலாமோ என்று சந்தேகித்தேன். ஆனாலும் திருவனந்தபுரத்திற்கு வரக் காரணமில்லையே என்று நான் நினைத்து, 'தெரியவில்லையே' என்று சிறிதுவருத்தத்துடன் சொன்னேன். தாமே 'சுப்பிரமணிய பாரதி'—என்று தெரிவித்தார்.

எனது நெல்லை நண்பர்களுள் ஸ்ரீ. வ. வேதநாயகம் பிள்ளையவர்களும், ஸ்ரீ. சோமசுந்தர பாரதியாரவர்களும், ஸ்ரீ. பி. ஸ்ரீ. ஆசார்யா அவர்களும் என்னிடத்தில் சுப்பிரமணிய பாரதியின் அபாரமான கவித்வ சக்தியை அடிக்கடி பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். பாரதியின் உயிர்த் தத்துவம் நிரம்பிய பாடல்களை நானும் வாசித்து இன்புற்றிருக்கிறேன். ஆனால் அன்றுதான் அவரை நேரிற் சந்தித்தது.

இன்னாரென்று தெரிந்ததும், எனக்கு இன்னது செய்வதென்று புரியவில்லை. சிறிது நேரம் தயங்கி நின்றேன். பிறகு உள்ளே அழைத்துச் சென்று உபசரித்தேன். அங்கே கூடியிருந்தவர்களுக்கு அறிமுகஞ் செய்வித்தேன். அவர்களில் ஒரு சிலருக்கே பாரதியைக் குறித்துத் தெரியும்; தெரிந்த விஷயமும் அவர் அரசாங்கத்தாரின் கவனத்திற் குரிய ஸர்க்கார்-விரோதி என்பது ஒன்றுதான். அவருடைய பலதிறப்பட்ட கவித்திறனும், அவருடைய பாடல்களும், மலைக்கு அப்பாலுள்ள அந்தப் பிரதேசத்தில் அக்காலத்தில் அவ்வளவாகத் தெரியாது.

பேசிக்கொண்டிருக்கும்போது ஒரு சிறு சம்பவம் நிகழ்ந்தது. பாரதியாருக்குத் தாகம் அதிகமாயிருக்கிறதென்பதைக் குறிப்பால் உணர்ந்தேன். உடனே 'ஐஸ்' இட்டு ஆரஞ்சுநீர் கொண்டுவரும்படியாக ஒருவனை அனுப்பினேன். இதைத் தெரிந்துகொண்டு, 'தண்ணீர் போதுமானது' என்று அவர் கூறினார். அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் பிராமணர்கள் அல்லரென்று சொன்னேன். பாரதி கண்ணில் தோன்றிய ஓர் அபூர்வமான ஜோதி என்னை வாட்டிற்று. தாம் அவ்வாறான சாதி வேறுபாடுகளைப் பாராட்டுவதில்லையென்று சிறிது கடுமையாக எனக்குத் தெரிவித்தார்.

பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே

என்றும்,

எல்லோரும் ஒன்றென்னும் காலம் வந்ததே

என்றும் அவர் தமது சுதந்திரப் பள்ளிற் பாடியுள்ளமை எனக்கு ஞாபகத்திற்கு வந்தது. முடிவில், நான் கொண்டுவரச் சொன்ன பானத்தையே உண்டு தாகசாந்தி செய்துகொண்டார்.

அவருடைய பாடல்களை அவர் பாடிக் கேட்க வேண்டுமென்ற ஆவல் எனக்கு அதிகமாயிருந்தது. அந்த ஆவலை நிறைவேற்றிக்கொள்ள இது தக்க சமயமென்று எண்ணினேன்.

சின்னஞ் சிறு கிளியே-கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே
என்னைக் கலிதீர்த்தே—உலகில்
ஏற்றம் புரிய வந்தாய்

என்று தொடங்கும் பாடல்களைப் பாடும்படி கேட்டுக்கொண்டேன். பாரதியார் கண்கள் ஒரு நிமிஷம் மூடுண்டன. முகத்திலே புதியதொரு பொலிவு. அன்பு ததும்பும் சாரீரத்தில் பாடத் தொடங்கி எங்களைப் பரவசமாக்கினார்.

பின்னர் 'ஊழிக் கூத்து'ப் பாடலைப் பாடும்படி வேண்டினேன். இப்பொழுது நீண்ட நேரம் அவர் கண்

கள் மூடியிருந்தன; முகத்திலே ஒரு துடிதுடிப்பு; சரீரம் முழுவதிலும் ஒரு வேகம். 'வெடிபடும் அண்டத் திடிபல தாளம்போட' என்ற சொற்கள் கம்பீரத்தோடு வெளி வந்தன. ஒவ்வொரு சொல்லும், ஒவ்வோர் அடியும், அவரது ஆத்ம சக்தியினின்று பொருளும் ஆற்றலும் பெற்று, எங்கள் மனக்கண்முன் கூத்தாடின. உலகம் தகர்வது, ஊழி முடிவது: ஒன்றொன்றும் கண்முன் நிகழ் வது போலவே இருந்தது. பாட்டின் பொருளோடு ஒன்று பட்டு லயித்து அவர் பாடும்போது, அவர் கண்கள் சுழன்றன. கருவிழிகள் மேலேறி மறையத் தொடங்கின. 'ஊழிக் கூத்தில் அகப்பட்டுவிட்டோம்!' என்ற பீதி எங் களுக்கும் உண்டாயிற்று. சங்கீதத்தின் ஆற்றலை நான் அன்று உணர்ந்தது போல் ஒருநாளும் உணர்ந்ததில்லை.

இதற்கப்புறம் வெகு நேரம் பாரதியார் தங்கவில்லை. அவர் ஒரு பிரசங்கம் செய்வதற்கு இணங்கும்படி வேண்டினேன். ஏற்பாடு செய்தால், ஒத்துக்கொள்ளலா மென்று எனக்குக் கூறினார். ஏற்பாடுசெய்து கொண்டு அவருக்கு அறிவிப்பதாகச் சொன்னேன். ஸ்ரீ. கே. ஜி. சேஷையரவர்கள் வீட்டில் தாம் இருப்பதாகவும், மறுநாள் திருவனந்தபுரத்தை விட்டுப் புறப்படத் தீர்மானித்திருப் பதாகவும் தெரிவித்துச் சென்றார்.

பிரசங்கம் ஏற்பாடு செய்வதற்கு என் நண்பர்களோடு கலந்தேன். அவர்களில் பெரும்பாலோர் உத்தியோகஸ் தர்களானபடியால் இணங்கவில்லை. அவருள் ஒருவர் எங்களைத் தெருவில் நிறுத்திக்கொண்டு, பிரசங்கத்தைப் பற்றி ஒரு நீண்ட பிரசங்கம் செய்து முடித்தார். வெகு காலமாக அவருக்குப் பேச வசதி கிடைக்கவில்லை. அன்று தமது ஆத்திரத்தை யெல்லாம் தீர்த்துக் கொண்டார். பிரசங்கததிற்கு ஏற்பாடு செய்ய முடியவில்லை யென் பதைப் பாரதியாருக்குத் தெரிவித்துவிட்டேன்.

இதற்கு அப்புறம் பாரதியைக் காணும் பேறு எனக்கு வாய்க்கவில்லை. ஆனால் அவருடைய திருமுகத்தை என் கண்கள் மறக்கவில்லை. கம்பீரமும் ஆண்மையும் அன்பும் நிரம்பிய அவருடைய சாரீரத்தை என் செவிகள் மறக்க

வில்லை. அவருடைய பாடல்களை என் மனம் என்றேனும் மறக்குமா?

நான் பாரதியாரைச் சந்தித்த வைபவம் பற்றி முன்னர் ஒரு முறை ('லோகோபகாரி': 7—9—40) எழுதி யுள்ளேன். ஒரு தடவை பார்த்த எனக்கு இவ்வளவு உணர்ச்சி தோன்றி விட்டது. பாரதியாரோடு நீண்ட காலமாகத் தினந்தோறும் தொடர்பு கொண்டிருந்து, அவருடைய பெருமையை உணர்ந்து, தினந்தோறும் அவரை மனத்தில் பூஜித்துவந்த இந்நூலாசிரியர் உள்ளத்தில் எவ்வகையான உணர்ச்சி தோன்றியிருக்கவேண்டும் என்பதை நம்மால் அளவிட முடியுமா?

நண்பர் திரு. கனகலிங்கம் குருபக்தியால் உளங்கனிந்து எழுதியது 'குருநாதர் பாரதியார்' என்ற இந்நூல். பாரதியை உள்ளபடி உணரவேண்டுமாயின், இந்நூலைத் தமிழ்மகன் ஒவ்வொருவனும் படிக்கவேண்டும். இந்நூலிற்காணும் செய்திகளை அறியாதவன் பாரதியின் பாடல்களை உணர்ந்தவனாகான்.

ஆழ்ந்த ஆத்மாநுபவத்திலிருந்துதான் பாரதியின் கவிதைகள் தோன்றின என்ற உண்மையையும் இந்நூல் புலப்படுத்துகிறது. பாரதியைப் பற்றிய இவ் வாழ்க்கைவரலாறு புதியதோர் அநுபவத்தை நமக்குத் தரவல்லது என உறுதியாய் நம்புகிறேன்.

சென்னை
25—9—47

**எஸ். வையாபுரிப் பிள்ளை**

# அன்புத் திறவுகோல்

**ம**னிதவர்க்கத்தைத் திருத்திவிடவேண்டும், உலகம் உய்ய வழி கண்டுபிடிக்க வேண்டும் என்ற பெருநோக்குடன் ஆறு சீர்திருத்தக்காரர்கள் ஒரு மகாநாடு கூடிப் பேசினார்கள். அந்த மகாநாட்டுக்கு அவர்களைத் தவிர வேறு ஒருவரும் வரவில்லை. அவர்களில் ஒருவர் தலைமை தாங்கினார். ஒவ்வொருவராக எழுந்து நின்று மக்கள் உய்யக் கருணை கூர்ந்து வழிகாட்டினார்கள். 'உடைமை ஒழிக!' என்றார் ஒருவர். 'விவாகம் வீழ்க!' என்றார் இரண்டாமவர். மூன்றாமவர், 'சட்டம் சாய்க!' என்றார். 'சடங்கு மாய்க!' என்றார் புரோகித மறுப்பாளர். ஐந்தாமவரோ, 'கடவுளையே ஒழித்துத்தான் உலகம் திருந்த வேண்டும்!' என்று கர்ஜித்தார். 'மனித வர்க்கத்தையே ஒழித்துவிட வேண்டியதுதான்!' என்றார் உலகம் உய்யத் தலைமை தாங்கிய பெரியார். இது விபரீதப் புரட்சிமார்க்கம்.

பாரதியாரும் உண்மையான புரட்சி வீரர்தான். பாரதி மண்டபக் கல் நாட்டு விழாவில் ராஜாஜி தாம் புதுவையில் கண்ட பாரதியாரைக் குறித்துப் பேசுகையில், அங்கே அவர் வீட்டில் தாம் விருந்துண்டதாகவும், உண்ட பிறகு சம்பாஷணையினிடையே அவர் ஜாதியை அறிந்துகொள்ள விரும்பியதாகவும் குறிப்பிட்டார். பாரதியார் தாம் பிராம்மணர் என்றதும் ராஜாஜி சிறிது திகைத்து, 'பூணூலைக் காணோமே!' என்று சொன்னாராம். அதற்குப் பாரதியார், 'அதை ஏன் பிரமாதப் படுத்துகிறீர்கள்?' என்று பதில் சொல்லிவிட்டாராம். அதே பாரதியார், அதே புதுவையில், ஹரிஜன வகுப்பினரான இந் நூலாசிரியருக்குப் பூணூல் அணிவித்தார்! 'பாரதியார் திரு. கனகலிங்கத்தைப் பிராம்மணனாக்கிவிட்ட

தாக ஊரெல்லாம் பிரமாதப்பட வேண்டுமென்றும் விரும்பினார். அந்த உபநயன ஸம்ஸ்காரம் நடைபெறும் போது பாரதியாரும் பூணூல் அணிந்துகொண்டிருந்தார். பூணூலை எடுத்துவிட வேண்டாமென்று திரு. கனகலிங்கத்திற்கு எச்சரிக்கை செய்துவிட்டு, அவர் போனபின்பு தம்முடைய பூணூலை எடுத்துவிட்டாராம். இது பாரதியாரின் புரட்சிமார்க்கம். புரிந்துகொள்வது கொஞ்சம் சிரமம்தான்—இல்லையா?

பாரதியாரின் கொள்கைகளைத் தெரிந்துகொள்வதற்குப் பாரதியாரின் பாடல்களை ஓதி ஓதி உணர்ந்து கொள்ளவேண்டும். 'இப் பாடல்களைக் கேட்டால் செத்த சவமும் உயிர் பெற்றெழும்!' என்று நீதிபதி சங்கர நாயர் சொன்னதை டாக்டர் ராஜன் எட்டயபுரத்தில் ஞாபகப்படுத்தினார். அத்தகைய பாடல்களையும் கொள்கைகளையும் உள்ளவாறு தெரிந்துகொள்வதற்குத் திரு. கனகலிங்கம் எழுதிய இந்நூலும் தக்க உதவி புரியும் என்று நினைக்கிறேன்.

* * *

தமிழ் இலக்கிய சரித்திரத்திலே ஒரு புதுயுகத்தின் ஆரம்பத்தில் தோன்றியவர் பாரதியார். ஆங்கில இலக்கியத்தின் கூட்டுறவினாலும், தேசியப் பேரியக்கத்தினாலும் இந்தியா முழுவதும் ஒரு புதிய இலக்கிய மறுமலர்ச்சி மண்டியெழுந்த காலத்தில், பாரதியார் நம் நாட்டிலே கவிதைத் துறையில் மட்டுமல்ல, பலவேறு நவீன இலக்கியத் துறைகளிலும், அரசியல் சமூகம் முதலான துறைகளிலும தம் உள்ளொளியாலும் எழுத்து—வன்மையினாலும் வேகத்தினாலும் ஒரு பெருவழி காட்டியிருக்கிறார். இம் மறுமலர்ச்சி-யுகத்தைப் 'பாரதி யுகம்' என்று சிறப்பித்துப் பேசலாம்.

பக்தியை விதைத்துத் தமிழை வளர்த்து நாட்டை வாழ்வித்த ஆழ்வார்-நாயன்மார்களைப் போல், பாரதியார் தேசபக்தியை விதைத்துத் தமிழை மறுபோகமாய்ச் செழித்து வளரச்செய்து, தமிழர்களுக்குப் புதியதோர் ஆனந்த சுதந்திர வாழ்விற்கும் வழிகாட்டுகிறார். இவரை நாம் தேசியகவி என்று சிறப்பித்துப் பேசுகிறோம். இத்

தேசியகவி தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் ஒருங்கே விடுதலை தேடித்தந்தவர். இவர் பாடல்களைத் 'தேச-உபநிஷதம்' என்றும், 'அரசியல்-கீதை' என்றும் போற்றுகிறோம்.

இந்தத் தேச-உபநிஷதத்தின் புதிய புதிய சிந்தனைகளோடு பழைய, காலங்கண்ட, இந்து தத்துவத்தின் சாரமான சிந்தனைச் சுடர்களையும், தொன்றுதொட்டு வரும் தமிழ் நாகரிகப் பண்பாடுகளையும் பார்க்கிறோம். அகில இந்தியாவின் ஆன்மா தமிழகத்தின் ஆன்மாவாகவும் இக்கவிஞருக்குக் காட்சி தந்தது: ஆம், தமிழ்த் தெய்வமும் பாரத அன்னையும் இவருடைய பராசக்தி தானே? இந்தத் தேசிய கவி—பராசக்தியின் இந்த ஆஸ்தான கவி—தமிழன்னையின் புதுமைப் புரட்சிக் கவி—வருங்காலத் தமிழக அமைப்பிற்கு வழிகாட்டும் தீர்க்கதரிசியாகவும் திகழ்கின்றார்.

வேதகாலம் தொட்டுப் பக்தர்களும் சித்தர்களும் ஞானிகளும் மூழ்கித் திளைத்த ஆன்ம ஒளிக் கடலில் இத் தேசிய கவியும் மூழ்கித் திளைத்தவர்; எனினும் புரட்சிக் கவிஞர். வேதப் பெருமை பாடிய வாயால் ரஷ்யப் புரட்சியையும் பாராட்டிப் பொதுவுடைமையின் வெற்றியையும் பாடுகிறார். ஆகவே இவரது புரட்சி-மனப்பான்மையில் தெய்வ பக்திக்கும் சமய ஞானத்திற்கும் அஹிம்ஸா தர்மத்திற்கும் இடமுண்டு—எல்லா மதங்களுக்கும் பொதுவான, சக்திமயமான, புரட்சிகரமான விளைவுகளோடுகூடிய-ஞானபக்திக்கும் இடமுண்டு. காளியும் கண்ணனும் முருகனும், அல்லாவும் கிறிஸ்துவும் ஹரிஜனங்களின் தேசமுத்துமாரியும் இவருக்கு ஒரே தெய்வத்தின் பல பெயர்களே. எத்தனையோ தெய்வ வழிபாடுகளுக்கிடையே பிற்காலத் தமிழர்கள் மறந்துவிட்ட சுதந்திர தேவிக்கு இவர் தனிச் சிங்காதனமிட்டுப் பராசக்தியின் அதி முக்கிய அம்சமாகப் பாடியிருக்கிறார். சுதந்திர தேவியின் அருள் பெறுதவர்கள் பாவிகள் என்கிறார். அரசியல்-சுதந்திரமற்ற பாவ பூமியில் புதிய புதிய கலைகளும் காவியங்களும் தோன்றுவதற்கு வழியில்லை, எனவே தமிழிலக்கியமும் க்ஷீணகதியுற்றுப் பாலை

வனமாகிவிட்டது என்பதை உணர்த்தும் பாரதியார், சுதந்திர வெறிகொண்டு தமிழிலக்கியத்திற்குப் புத்துயிர் அளித்தார்.

எல்லாரும் ஓர்குலம்,
எல்லாரும் ஓரினம்,
எல்லாரும் இந்தியா மக்கள்,
எல்லாரும் ஓர்நிறை,
எல்லாரும் ஓர்விலை

என்ற சுதந்திரக் கனவு நனவாகும்போது புதுமைத் தமிழிலக்கியமும் புதுமைத் தமிழகமும் உலகத்திற்கே ஒரு புதுமையாக வளர்ந்தோங்கும் என்பது திண்ணம்.

நாலுதிசையும் ஸ்வாதந்தர்ய நாதம் எழுகவே!
நரகமொத்த அடிமைவாழ்வு நைந்து
கழிகவே!

என்று பாடிய பாரதியாரின் சுதந்திர உணர்ச்சி அரசியலில் மட்டுமல்ல, சமுதாயத்திலும் புரட்சிகரமாக வெளிப்பட்டது. ஆண்களோடு பெண்களுக்கும் சரிநிகர் சமானமாக விடுதலை வேண்டியவர் பலவேறு வகுப்பினருக்கும், முக்கியமாக ஹரிஜனங்களுக்கு உடனே விடுதலை வேண்டினர். வறுமையிலிருந்தும் அச்சத்திலிருந்தும் விடுதலை வேண்டினர், கருத்துச் சுதந்திரம், மதசுதந்திரம் முதலான சகல சுதந்திரங்களும் வேண்டினர். இவர் கவிதையைத் தமிழ்ப் பெருமக்களின் அழியாத—அட்லாண்டிக் மகாசமுத்திரத்திலும் கரைந்து போகாத—சுதந்திர மகா சாஸனம் என்று சொல்லவேண்டும். இத்தகைய மகா சாஸனத்தை நமக்கு அளித்த பாரதியாரின் மகத்தான மனப்பண்பையும் ஆத்மசக்தியையும் பாரதியம் எனலாம்.

பாரதியத்தை நன்கு புரிந்துகொள்வதற்கு இவர் கவிதையும், அக் கவிதையிலே இவர் வெளியிடும் ஆத்ம சரித்திரமும் தக்க துணையாகும். எனினும் பாரதியாரின் வாழ்க்கை வரலாறுகளையும் இயன்றவரையில் தெரிந்து கொள்வது நலம். பாரதியாரின் வாழ்க்கை ஸாராம்சத்

தில் உணர்ச்சிக் களஞ்சியமான ஓர் உன்னதக் கவிதையாகத்தான் இருந்திருக்க வேண்டும். அந்தக் கவிதை-வாழ்வை உய்த்துணரவைக்கும் சில நிகழ்ச்சிகளையும் குணசித்திரங்களையும் ஆசிரியர் வ. ரா. எழுதியுள்ள 'மகாகவி பாரதியார்' என்ற நூலிலே காணலாம். பாரதியாரின் மனைவி செல்லம்மா பாரதி பெயரால் வெளி வந்திருக்கும் 'பாரதியார் சரித்திர'த்திலும் சில ரஸமான நிகழ்ச்சிகளைக் காணலாம். பாரதியாரின் முழுமேதையையும் ஜீவ சொரூபத்தையும் தெரிந்துகொள்வதற்கு, மேலே சொன்ன-வாழ்க்கை வரலாறுகளுடன், திரு. ரா. கனகலிங்கத்தின் 'என் குருநாதர்—பாரதியா'ரையும் தெரிந்து கொள்ள வேண்டியதுதான்.

• ஹரிஜனங்களுக்கு ஆலயப் பிரவேசத்துடன் நம் மக்கள் இதயப் பிரவேசமும் அளிக்கவேண்டும் என்பதை வற்புறுத்தி ஹரிஜனப் பிரசினையை முக்கியமான தேசியப் பிரசினை ஆக்கியவர் மகாத்மா காந்தி என்பதை அறியாதார் இல்லை. ஆனால், காந்தியடிகளுக்கு முன்பே இத்துறையில் பெருவழி காட்டியவர் பாரதியார் என்பதைத் தமிழர்களும் நன்றாக அறிந்துகொள்ளவில்லை.

*1917*-ம் ஆண்டில் பாரதியார் வெளியிட்ட ஒரு கட்டுரையில் ஹரிஜனங்களுக்கு 'நியாயம் செலுத்த வேண்டியது நம்முடைய முதற் கடமை' என்பதை வற்புறுத்தியிருக்கிறார். பட்டணத்து ஹரிஜனங்களைக் குறித்துப் பாரதியார் பேசவில்லை—கிராமங்களில் உள்ள ஹரிஜனங்களையே குறிப்பிடுகிறார்:

'அவர்களையெல்லாம் ஒன்றுதிரட்டு. உடனே விபூதி, நாமத்தைப் பூசு. பள்ளிக்கூடம் வைத்துக் கொடு. கிணறு வெட்டிக் கொடு......ஸமத்துவம் கொண்டாடு. நான் நெடுங்காலமாகச் சொல்லி வருகிறேன். அவர்களையெல்லாம் ஒன்றுசேர்த்து இந்துதர்மத்தை நிலைக்கச் செய்யுங்கள். நம்முடைய பலத்தைச் சிதறவிடாதேயுங்கள். மடாதிபதிகளே! நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களே! இந்த விஷயத்தில் நீங்கள் பணத்தை வாரிச் செலவிடுங்கள். இது நல்ல பயன் தரக்கூடிய கைங்

கரியம். தெய்வத்தின் கருணைக்குப் பாத்திரமான கைங்கரியம்.

'நமக்கு மண் உழுது நெல் அறுத்துக் கொடுக்கிற ஜாதியாரை நாம் நேர்மையாய் நடத்த வேண்டாமா?'

திரு. கனகலிங்கம் தமது நூலில் குறிப்பிடும் திரு. நாகலிங்கம் என்ற வள்ளுவப் பண்டாரத்தை அக் கட்டுரையில் பாரதியார் சிறப்பாய்க் குறிப்பிடுகிறார். "எனக்கும் ஒரு வள்ளுவப் பையனுக்கும் சிநேகம். அவனுடைய கோவில் - அம்மன் மீது நான் பாட்டுக் கட்டிக் கொடுத்தேன். (இதுதான் 'தேசமுத்து மாரி பாட்டு.') அவன் அடிக்கடி எங்கள் வீட்டுக்கும் வருவதுண்டு.' பாரதியார் முகமுகமாய்ப் பேசுவது போல் அமைந்திருக்கும் இந்த மூன்று வாக்கியங்களிலும் பாரதியாருக்கு ஹரிஜனங்கள் மீதுள்ள இதய பாசம் அப்படியே நன்கு புலனாகிறதல்லவா? இவற்றின் பொருளாழத்தையும், அந்த உள்ளத்தின் ஆழத்திலிருந்து பொங்கி வந்த அன்பின் வேகத்தையும் உணர்ந்துகொள்வதற்கு ஸ்ரீ கனகலிங்கம் இந் நூலில் வெளியிட்டிருக்கும் குறிப்புக்கள் மிகவும் அவசியமானவை என்பது என் கருத்து.

பறையருக்கும் புலையருக்கும்
தீயருக்கும் விடுதலை,
பரவரோடு மறவருக்கும்
குறவருக்கும் விடுதலை

என்ற விடுதலை-முரசின் இடிமுழக்கம் உள்ளபடி விளங்கும், இந் நூலைப் படித்தவர்களுக்கு.

திரு. கனகலிங்கம் 'பொன்வால் நரி' என்ற தலைப் பெயருடன் பாரதியார் வெளியிட்ட ஒரு சிறு ஆங்கிலக் கட்டுக் கதைப் புத்தகத்தைக் குறிப்பிடுகிறார். அது இன்னதென்பது பலருக்கும் தெரியாது, தெரியவேண்டிய அவசியமும் இல்லை. இப்போது உலகப் பிரசித்தி பெற்றிருக்கும் திரு. ஜே. கிருஷ்ணமூர்த்தி என்ற பெருஞ் சிந்தனையாளர் இளைஞராய் இருந்த காலம் அது. அவ

ருக்கும் அவரது சகோதரருக்கும் ஓர் உன்னதப் பயிற்சி அளிக்கும் தனிப் பொறுப்பை டாக்டர் பெஸன்ட் அம்மையும் திரு. லெட்பீட்டரும் ஏற்றுக் கொண்டிருந் தார்கள். ஆனால் பிள்ளைகளைத் தம்மிடம் திருப்பி அனுப்பிவிட வேண்டும் என்று தந்தையார் சிலர் போதனைக்கு இணங்கிக் கோர்ட்டில் வியாச்சியம் தொடுத் தார். அந்த வழக்கில் டாக்டர் பெஸன்டுக்கு விரோத மாக டாக்டர் நஞ்சுண்ட ராவ், டாக்டர் நாயர் முதலான வர்கள் பெருமுயற்சி செய்து வந்தனர். ஸர் ஸி. பி. ராமசாமிஐயர்—பின்னாளில் பெஸன்ட் அம்மைக்கு வலக் கரம் போல் உதவியவர்—அம்மையாருக்கு எதிரி வக்கீ லாக ஆஜரானார். 'ஹிந்து' பத்திரிகையில் வழக்கின் விவரங்கள் பத்தி பத்தியாக வெளியிடப்பட்டன. நாட்டின் சில பகுதிகளில் பெஸன்ட்-துவேஷம் அதிகரித் திருந்தது. அந்தப் பகைமை யுணர்ச்சி-வெள்ளத்தில் புதுவை மக்களும், புதுவையிலிருந்த பாரதியாரும் அகப் பட்டுக் கொண்டனர் சிறிது காலம். அந்நிலையில் எழுதிய கதைதான் 'பொன்வால் நரி'.

கதைப் போக்கும் விவரங்களும் பாரதியாரின் மேதைக்குச் சிறிதும் பொருத்தமானவையல்ல. ஆனால், அழகான ஆங்கிலத்தில் கதை எழுதப்பட்டிருந்தது. பாரதியார் இச் சிறு புத்தகத்தை 1913—14-ல் எழுதி யிருக்க வேண்டும். அப்போது அவர் அரவிந்தர் ஆசிர மத்திற்கு அடிக்கடி போவார். கையெழுத்துப் பிரதியாக இருந்த கதைப் புத்தகத்தை ஒருநாள் எடுத்துக் கொண்டு போய் அரவிந்தருக்கு வாசித்துக் காட்டி னராம். அரவிந்தருக்கும் அந்நாளில் டாக்டர் பெஸன்ட் என்றால் அவ்வளவாகப் பிடிக்காது. பாரதியாரின் அருமையான ஆங்கிலத்தை அரவிந்தரும் பாராட்டி னராம். டாக்டர் நஞ்சுண்ட ராவ் அந்தப் புத்தகத்தில் 500 பிரதிகளுக்கு வி. பி. ஆர்டர் அனுப்பி வாங்கிக் கொண்டாராம். புத்தகத்திற்கு விலை அணா ஒன்றே!

பி. ஏ., எம்., ஏ. பட்டங்கள் பெற்றவர்களில் சிலரும் பெஸன்ட்-துவேஷத்தை முன்னிட்டு அப் புத்தகத்தைக்

கொண்டாடிப் பாராட்டுக் கடிதங்கள் அனுப்பினார்களாம். அதற்குள் பாரதியாரின் மனநிலை மாறிவிட்டது. பெஸன்ட் அம்மையின் பொன்னான உள்ளத்தை உள்ளபடி அறிந்துகொண்டார். குறித்த கடிதங்களில் ஒன்றை அவர் மனவேதனையுடன் வாசித்துக் கொண்டிருக்கையில், திரு. குவளைக் கிருஷ்ணமாசாரியார் என்ற நண்பர் பாரதியாரைப் பார்க்கப் போயிருந்தார். 'அது என்ன ஐயா கடிதம்?' என்று மெள்ளக் கேட்டார். பாரதியாருக்கு ஒரே ஆங்காரம்' அக் கடிதம் எழுதியவர் மீது. 'போகச் சொல்லு விதவைப் பசங்களை! நான் என்னுடைய தாய்மொழியில் என் முழு மூளையையுமே கசக்கிப் பிழிந்து "பாஞ்சாலி சபதம்" பாடியிருக்கிறேன். அது நன்றாக இருக்கிறது என்று ஒரு கடிதமும் எனக்கு வரவில்லை. அதை நீ ஒருவன்தான் வாசிக்கிறாய்!' என்று நொந்து கொண்டாடினாராம் பாரதியார்.

'குவளைக் கண்ணன்' என்று பாரதியாரால் பாராட்டப் பெற்ற திரு. கிருஷ்ணமாசாரியார் புதுச்சேரியிலிருந்து திருவல்லிக்கேணிக்கு வந்து தங்கியிருந்த காலத்தில் மேலேசொன்ன நிகழ்ச்சியைத் திருவல்லிக்கேணியில் நான் குடியிருந்த வீட்டில் என்னுடன் உரையாடிக்கொண்டிருக்கும்போது நேரிலே தெரிவித்தார்; ஒரு தமிழ்ப் பத்திரிகையிலும் வெளியிட்டார்.

'காமன்வீல்,' 'நியூ இந்தியா' என்ற பத்திரிகைகள் மூலமாக டாக்டர் பெஸன்ட் தேசப் பெரும்பணி புரிந்து 'ஹோம்ரூல்' இயக்கம் ஆரம்பித்து இந்தியாவுக்குத்தேசிய ஆக்கம் தேட முயன்றதும், அந்த 'எரிமலைப் பிரசாரம்' கண்டு பாரதியாரும் பெஸன்ட்-பக்தர்களில் ஒருவரானார். பாரதியாரின் பாடல்களில் சிலவற்றைப் பிரம்மஞான சங்கத்தைச் சார்ந்த ரஸிகசிகாமணி டாக்டர் கஸின்ஸ் பெரிதும் பாராட்டி ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார்.

குவளைக்கண்ணனை நான் தெரிந்துகொண்ட காலத்தில் திரு. கனகலிங்கத்தைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. நான் கலாசாலை-மாணாக்கனாக இருந்த காலத்திலேயே என் பக்திவிசுவாசத்திற்குப் பாத்திரமாகிவிட்ட 'இந்தியா' பத்திராதிபரைக் கவிஞராகவும் தெரிந்து

கொண்டேன், அந்தப் பத்திரிகை மூலமாகவே. தேசபக்த வீரர் சிதம்பரம் பிள்ளையின் வழக்கை நேரில் கண்டு கவனித்த எனக்கு, அவருக்கும் கலெக்டருக்கும் சம்வாதமாகப் பாரதியார் 'நந்தன் சரித்திரக் கீர்த்தனை' மெட்டில் பாடியிருந்த பாடல்கள் பாரதியாரை ஓரளவில் கவிஞரென்று அறிமுகப்படுத்திவிட்டது. 'செந்தமிழ் நாடெனும் போதினிலே,' 'வந்தே மாதரம் என்போம்' முதலான தேசியப் பாடல்கள் ஒரு புதிய தேசிய கவிதையின் உதயத்தை அறிவித்தன. எனினும், 'பாஞ்சாலி சபத'த்தைப் பார்த்தபோதுதான், 'தமிழ் இலக்கிய வானத்தில் உண்மையாகவே ஒரு புதிய மேதை உதயமாகிவிட்டது!' என்று தெரியவந்தது.

'பாஞ்சாலி சபத'த்தை முதன் முதல் தூத்துக்குடியில் திரு. சோமசுந்தர பாரதியாரின்—இப்போது நாவலர், அப்போது வழக்கறிஞர்—வீட்டிலே படிக்க நேர்ந்தது. நாவலர் திரு. சோமசுந்தர பாரதியாரும், வழக்கறிஞர் திரு. வ. வேதநாயகம் பிள்ளையும் பாரதியாரின் பிள்ளைப் பிராயத் தோழர்கள். அவர்களுடன் 'பாஞ்சாலி சபத'த்தின் முதல் பாகத்தைப் படித்துப் பார்த்தேன்.

'ஓம் எனப் பெரியோர்கள்' என்ற அந்த ஆரம்பமே எனக்குப் பிடிக்கவில்லை. 'ஏதோ பழைய கர்நாடகம்; திருநெல்வேலிச் சீமையில் அகத்தியர் தொடக்கமாக வாழையடி வாழையாய் வந்துகொண்டிருக்கும் புலமைத் திறத்தில் இதுவும் ஒன்று!' என்று எண்ணினேன். அப்போது முதல் பாகம்தான் வெளிவந்திருந்தது. பக்கங்களைப் புரட்டிக்கொண் டிருக்கும்போது,

ஆதிப் பரம்பொருள் நாரணன்—தெளி
வாகிய பாற்கடல் மீதிலே—நல்ல
ஜோதிப் பணுமுடி ஆயிரம்—கொண்ட
தொல்லறி வென்னுமோர் பாம்பின்மேல்—ஒரு
போதத் துயில்கொளும் நாயகன்—கலை
போந்து புவிமிசைத் தோன்றினன்

என்ற பகுதியை வாசித்ததும், 'பாட்டு எவ்வளவு மனோரம்மியமாக வருகிறது!' என்று வியந்தேன். மேலும் படித்

துக்கொண்டே போனேன். 'பாரதியாருக்குக் கிருஷ்ண பக்தியுண்டு, வாக்கு அழகாக வந்திருக்கிறது' என்று நண்பர்களான வேதநாயகம் பிள்ளையும் சோமசுந்தர பாரதியாரும் ஒப்புக்கொண்டனர். எனினும், பாரதியார் புதுச்சேரியிலிருந்து திருநெல்வேலிக்குத் திரும்பி வந்த பின்பு, நேரிலே 'பாஞ்சாலி சபத'த்தின் பிற்பகுதியைப் பாடக் கேட்டுத்தான், அந்த 'இதிகாசத் துணுக்'கின் அருமை பெருமையும், பொதுவாகப் பாரதியாரின் கவிதைப் பெருமையும் எனக்கு உள்ளபடி தெரிய வந்தன. பாரதியாரைத் தேசபக்த வீரராக ஏற்கெனவே போற்றிவந்த எனக்கு அவர் சிறந்த இலக்கிய வீரர் என்பதும் பின்னர் நன்கு புலனாயிற்று.

பாரதியார் புதுவையிலிருந்து திருநெல்வேலி ஜில்லாவுக்கு வந்த பின்புதான் எனக்குப் பாரதியாரிடம் நல்ல பரிசயம். திருநெல்வேலி வண்ணார்பேட்டையில் வழக்கறிஞர் திரு.வ. வேதநாயகம் பிள்ளை இல்லத்திலும், திருநெல்வேலியிலுள்ள எட்டையபுரம் பங்களாவிலும், தாமிரபருணி ஆற்றுமணல் வெளியிலும் பாரதியார் கம்பீரமாய்த் தம் பாடல்களைப் பாடுவதைப் பலதடவை கேட்டிருக்கிறேன். அவருடன் பலமுறை அரசியல்-சமுதாயப் பிரசினைகளைக் குறித்துச் சம்பாஷித்திருக்கிறேன். இலக்கிய வீரரான பாரதியார் 'புரட்சிக்கனல் கக்கும் ஓர் எரிமலை' என்பதை நன்கு உணர்ந்துகொண்டிருக்கிறேன். என் இதயபீடத்தில் ஏறிக்கொண்ட பாரதியாரின் அந்த ஜீவக்கனல்-வடிவை மேலும் தெளிவாகக் காட்டியவர் குவளைக்கண்ணன் என்ற கிருஷ்ணமாசாரியார்.

அந்த வடிவத்தின் முழு ஒளியையும் தெளிவாகத் தெரிந்துகொள்வதற்குப் பாரதியார் ஹரிஜனப் பிரசினை விஷயமாகக் கொண்டிருந்த அதிதீவிர உணர்ச்சிகளையும் அபிப்பிராயங்களையும் அறிந்துகொள்ள வேண்டியதும் அவசியமாகும் என்பதை ஏற்கெனவே ஒருவாறு உணர்ந்திருந்தேன். திரு. கனகலிங்கம் என்னிடம் கொடுத்த கையெழுத்துப் பிரதியைப் படித்துப் பார்த்த பின்பு என் அபிப்பிராயம் உறுதிப்பட்டது. ஹரிஜனப்

பிரசினையில் பாரதியாருக்குள்ள ஆத்திரத்தை மட்டுமா, அந்த மகத்தான இதயத் தவிப்பையும் துடிப்பையும் வெளியிட்டிருக்கிறார் கனகலிங்கம் என்பதை அறிந்து கொண்டதும், 'இதை வெளியிட்டு மறுவேலை பார்க்க வேண்டும்' என்ற ஆத்திரம் எனக்கு ஏற்பட்டது.

திரு. குவளைக் கிருஷ்ணமாசாரியார்—'கண்ணன் என் வேலைக்காரன்' என்ற தலைப்பெயரால் பாரதி பாடிய பெரியார்—மதங்கொண்ட திருவல்லிக்கேணிக் கோவில் யானையிடமிருந்து பாரதியாரைக் காப்பாற்றிய வீரர்—என்னைச் சந்திக்கும் போதெல்லாம் கதை கதையாகப் பாரதியாரைக் குறித்துப் பலவேறு நிகழ்ச்சிகளையும் வெளியிட்ட வண்ணமாய் இருப்பார். அந்தச் சம்பாஷணைத் துணுக்குகளிலே நான் கண்ட பாரதியாரின் 'ஆன்ம ஆகிருதி' கனகலிங்கத்தின் பேனா முனையில் எப்படியோ பிரத்தியட்சமாகிவிட்டதாக உணர்ந்துகொண்டேன்.

பாரதியார் பாரத ஜாதியை—தமிழ் ஜாதியை—ஒன்றாக்க முயன்றார். அந்த முயற்சிக்கு, ஹரிஜனங்கள் மற்றவர்களோடு இரண்டறக் கலந்துவிட வேண்டும் என்று அபிப்பிராயப்பட்டார்:

> 'கங்கையிலே வந்துசேரும் வாய்க்கால்களெல்லாம் கங்கையாக மாறிவிடும். பாரத தேசத்தில் வந்து குடியேறித் தலைமுறை தலைமுறையாக இங்கு வாழ்பவர்களெல்லாம் நமது ஜனக் கூட்டத்தைச் சேர்ந்தவராகின்றனர். பாரத பூமியிலே பிறந்து வளர்ந்து இதையே சரணாகக் கொண்ட மனிதர்களையெல்லாம் பாரத ஜாதியிலே சேர்த்துக் கணக்கிடவேண்டும். இது ஒரே ஜாதி, பிரிக்க முடியாதது, அழிவில்லாதது.'

பாரதியாருடைய இந்த வாக்கின் முழுப்பொருளையும் உணர்ந்துகொள்வதற்கு இந்நூல் வாயிலாகத் திரு. கனகலிங்கம் தமிழர்களுக்குப் பேருதவி செய்திருக்கிறார்.

> 'ஜாதி பேதங்கள் பிரயோஜனமில்லை என்று தெரிந்ததா?......நல்லது; வாருங்கள் கோடிக்கணக்காக, சமத்துவ நெறியிலே பாய்ந்துவிடுவோம். பழைய கட்டுகளை லட்சக்கணக்கான மக்கள் கூடி நின்று தகர்ப்

போம்!........ஊண், உடை, பெண் கொடுக்கல் முதலிய விஷயங்களில் மூடத்தனமான கட்டுப்பாடுகளும் விதிகளும் தடைகளும் இருப்பதில் யாதொரு பிரயோஜனமும் கிடையாது........சகல மனிதரும் சகோதரர், மனிதவர்க்கம் ஓர் உயிர்.'

இவ்வாறு முழங்குகிறது பாரதி-முரசு.

பாரதியாருக்கு உண்மையான இந்தியாவும் உண்மையான தமிழ்நாடும் ஆரிய பூமியும் அல்ல, திராவிட ராஜ்யமும் அல்ல:

'நமது வேதம், நமது சாஸ்திரம், பாஷைகள், நமது சிற்பம், நமது சங்கீதம், நமது நாட்டியம், நமது தொழில் முறைகள், நமது கோபுரங்கள், நமது மண்டபங்கள், நமது குடிசைகள்—இவை அனைத்துக்கும் பொதுப் பெயர் ஆரிய சம்பத்து. காளிதாஸன் செய்த சாகுந்தல நாடகம், ஹிந்தி பாஷையிலே துளஸிதாஸர் செய்திருக்கும் ராமாயணம், கம்பராமாயணம், சிலப்பதிகாரம், திருக்குறள், ஆண்டாள் திருமொழி (இவை பாரதியார் 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க'ப் படித்த நூல்கள்) இவை அனைத்துக்கும் பொதுப் பெயர் ஆரிய சம்பத்து. தஞ்சைப் பெரியகோயில், திருமலை நாயக்கர் மஹால், தியாகய்யர் கீர்த்தனங்கள், எல்லோராவின் குகைக் கோயில், ஆக்ராவிலுள்ள தாஜ்மஹால், சரபசாஸ்திரியின் புல்லாங்குழல்—இவை அனைத்துக்கும் பொதுப் பெயர் ஆரிய சம்பத்து.'

என்று முரசு கொட்டுகிறவருக்கு, ஆரியனாவது திராவிடனாவது? இந்த மகத்தான சம்பத்தே பாரதியாரின் இந்தியா—பாரதியாரின் தமிழ்வீடு. இவ்வீட்டிலே, தம்பிகளான ஹரிஜனங்களிடம் அண்ணன்மார் விசேஷ அன்பு காட்டவேண்டும் என்பது பாரதி மதம், பாரதியம்.

'ஒரு புதுக் கட்டுப்பாடு செய்து கொள்வோமே, அந்தக் கட்டுப்பாடு யாதெனில்—ஒருவருக்கொருவர் மனத்தாலும் தீங்கு நினைப்பதில்லை; ஒருவருக்கொருவர் பயப்படுவதில்லை. மானிடரே! இந்த விரதம் எடுத்துக் கொள்ளுங்கள். இது பிழைக்கும் வழி. தெருவில் நடக்கும்போதே முன்பின் தெரியாத மனிதர்கூட ஒருவருக்கொருவர் கோபம், அல்லது அவமதிப்பு, அல்லது

பயத்தோடு பார்த்துக் கொள்கிறார்கள். (சாதித்திமிர் உள்ள இந்துக்களும் ஹரிஜனங்களும் நடந்து கொண்ட மாதிரி இது; நிறத்திமிருடன் கூடிய வெள்ளையரும் மற்றவரும் நடந்துகொண்ட மாதிரியும் இது தான்.) மனிதனுக்கு மனிதன் இயற்கையில் விரோதம் என்ற நிலையில் உங்களுடைய மூடத்தனமான மனுஷ்ய நாகரிகம் வந்துசேர்ந்திருக்கிறது. இதைமாற்றி அன்பை மூலாதாரமாக்க வேண்டும்.'

இந்தப் பாரதிவாக்கை அரசியல்-சுதந்திரம் பெற்ற தமிழர் விரைவில் அமைத்துக்கொள்ள வேண்டிய ஒரு புதுவாழ்வு-இயக்கத்திற்கு அஸ்திவாரக்கல் என்று சொல்லலாம்.

இந்த அஸ்திவாரத்திலே உறுதியான கட்டடமாக அமையவேண்டும் நமது தமிழர் புதுவாழ்வு-இயக்கம். பாரதியத்தைத் துணையாகக் கொண்டால், கட்டடத்தைப் புதுமையாகவும், பெருமையாகவும், அழகாகவும், உறுதியாகவும் கட்டி வாழலாம். இத்தகைய பாரதியத்திற்கு அருமையான திறவுகோலாகத் திரு. கனகலிங்கத்தின் இந்நூலை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இவ்வாசிரியர் பேனாவீரர் அல்லர்; எனினும் வாழ்க்கைச் சித்திரங்களையும் குணசித்திரங்களையும் நம் கண்முன் கொண்டு வந்து காட்டிவிடுகிறார். நமது இதய அரங்கத்தையே புதுவையாகக் கொண்டு பாரதியார் அங்கும் இங்கும் நடமாடக் காண்கிறோம். கோபுரம்போல நிமிர்ந்து நிற்கும் அந்த நிலையையும் வீரவிழியையும் பார்க்கிறோம்: அந்த வீர வெண்கல மணிக்குரலையும் கேட்கிறோம்.

பரந்த இலக்கியக் கல்வியும் வழக்கமான எழுத்து வன்மையும் இல்லாமலே இவ்வாசிரியர் செய்திருக்கும் அற்புதத்திற்குக் காரணம்தான் என்ன? அந்த மகத்தான குருபக்திதானா?

'உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளிஉண் டாகும்'

என்ற குருநாதரின் வாக்கிற்கு இந்தச் சீடரும் ஒரு சாட்சிதான் என்று எனக்குத் தோன்றுகிறது.

இந்நூலை வாசிக்கும்போது, வார்த்தைகளா கண் முன் வருகின்றன? இவருடைய குருநாதரையே நாமும் கண்டு, இவரைப்போலவே பரவசமடைகிறோம். புலமையாவது படாடோபமாவது திரைபோட்டு மறைத்து விடாததால், உள்ளது உள்ளபடியே காணும் பேறு பெறுகிறோம்.

வாழ்க பாரதி,
வாழ்க கனகலிங்கம்,
வாழ்க பாரதி-பக்தி!

'அச்வின்ஸ்'
தேனாம்பேட்டை
சென்னை
5—10—47.

பி. ஸ்ரீ.





திரு. வேதாசலம் சகோ்
—பக்கம் 95 பார்க்கவும்



திரு. நாராயணசா்மி உபாத்தியாயர்
—பக்கம் 37 பார்க்கவும்



ாரதியாரிடம் உடற்ப்யிற்சி காட்டின
ாண்டோ திரு. கிருஷ்ணசாமி நாயுடு



திரு. ஜேம்ஸ் ஸாமுவேல்
—பக்கம் 32 பார்க்கவும்

# அத்தியாயம் 1

## குரு தரிசனம்

சில ஊர்களைச் சிவனடியார் பாடிய ஸ்தலங்களென்றும், சில ஊர்களை ஆழ்வார்கள் பாடிய ஸ்தலங்களென்றும் சொல்வது போல், 'பாண்டிச்சேரி' என்ற புதுச்சேரியைப் பாரதியார் பாடிய ஸ்தலம் என்று இவ்வூர் வாசிகளாகிய நாங்கள் பெருமையுடன் சொல்லிக் கொள்கிறோம். புதுச்சேரியைச் சுருக்கமாகப் 'புதுவை' என்றும் சொல்வதுண்டு.

செந்தமிழ்த் தென்புதுவை
என்னும் திருநகர்

என்று புதுச்சேரியைப் பாரதியாரின் 'குயில்' குதூகலமாய்ப் பாடியிருக்கிறது.

பல ஆண்டுகளாகப் பாரதியார் புதுச்சேரியில் வசித்து வந்தார்; மதில் இல்லாத சிறையில், விலங்கில்லாத கைதிபோலத்தான் காலம்கழித்து வந்தார். அக்காலத்திலேயே இவர், எத்தனையோ சொந்தத் துன்பங்களுக்கு இடையிலும், தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் துன்பங்களைக் குறித்து விசேஷ அனுதாபம் காட்டி வந்தார். இவ் வகுப்பைச் சேர்ந்த என்னிடம் இவருக்கு அலாதி அபிமானம். பாரதியாரின் அக்காலத்து வாழ்க்கை வரலாறுகளை அறிந்தவர்களாயும், அந்நாளில் இவருக்கு நண்பர்களாயும் இருந்த சிறு கூட்டத்தில் சிறியேனையும்

சேர்த்துப் பேசுவதுண்டு. அவர்களில் ஒருவரும், இப்போதும் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டிருப்பவருமாகிய நண்பர் ஒருவர், 'செந்தமிழ்ப் புதுவையில் ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதியாருக்குத் துணையாயிருந்த பல நண்பர்களில் ஹரிஜன குலத்தைச் சேர்ந்த ரா. கனகலிங்கமும் ஒருவர்' என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், நான் பாரதியாரை நண்பராக எண்ணத் துணியவில்லை, பாக்கிய வசத்தால் கிடைத்த குருநாதர் என்றே நாளிதுவரையும் நம்பி வந்திருக்கிறேன்.

சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்—1907-ம் வருஷம் என்று ஞாபகம்—பாரதியார் அன்றைய சென்னைச் சர்க்காரின் பல அடக்குமுறைகளிலிருந்து தமது ஞானபுத்திரியாகிய 'இந்தியா' பத்திரிகையைக் காப்பாற்றி வளர்க்கவேண்டும் என்ற கவலையோடு புதுச்சேரிக்கு வந்து அப்பத்திரிகையை நடத்திவந்தபோது, எனக்கு வயது சுமார் பதினேழு இருக்கும். கல்வே கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். என் பள்ளித் தோழர்களில் ஒருவரான திரு. ராயல் ரெட்டி என்பவர் 'இந்தியா' ஆபீஸில் வேலை பார்த்துவந்தார். அவருடைய உதவியால் வாரம் தவறாமல் அப்பத்திரிகை எனக்கு வாசிக்கக் கிடைத்தது. அதைப் படிக்கப் படிக்க அந்தப் பத்திரிகையில் எனக்கு ஒரே மோகம் ஏற்பட்டது. பாரதியார்மீது எனக்குப் பக்தி ஏற்பட்டதற்கு அப்பத்திரிகைதான் முதலாவது காரணம்.

சில சமயங்களில் காலைவேளையில் பத்திரிகை பார்க்கப் பாரதியார் வீட்டுக்கும் போய்வரத் தொடங்கினேன். அங்கே 'சுதேசமித்திரன்' முதலான வேறு பத்திரிகைகளும் படிக்கலானேன்.

பிறகு தினந்தோறும் அந்த வழக்கத்தை மேற்கொண்டு அங்கே போய்வரலானேன். முதல் முதல் பாரதியாரைப் பார்த்ததுமே என் பக்தி குருபக்தியாகிவிட்டது.

'வீரத் திருவிழிப் பார்வையும்' என்று முருகன் பாட்டு ஒன்றைத் தொடங்குகிறார் சுப்பிரமணிய பாரதியார். அந்தமாதிரி வீரத் திருவிழிகள் (இரண்டு தான், பன்னிரண்டு இல்லை!) முதல் முதல் என்னை நோக்கியதும், நான் பணிந்து கை கூப்பினேன். அவர் ஒன்றும் பேசவில்லை. தலையை அசைத்து உட்காரும்படியாகக் கையால் சைகை காட்டினார். 'தட்சிணாமூர்த்தி மௌனமாகவே ஏதோ உபதேசம் செய்துவிட்டார் சீடர்களுக்கு!' என்கிறார்களே, அந்த மாதிரி ஏதோ உபதேசத்தைப் பெற்றுவிட்டது போலத் தோன்றியது அடியேனுக்கும்.

இப்படிப் பல தினங்களாக நடந்துவந்தது. அதே 'வீரத் திருவிழிப் பார்வை' பார்ப்பதும், அடியேன் கை கூப்புவதும், அவர் சைகை காட்டி அமரச்செய்வதும், உட்கார்ந்த பின்பும் உரையாடாமல் தமக்கு வந்திருக்கும் பத்திரிகைகளையோ, தமது 'இந்தியா' பத்திரிகையையோ ஒருமை யுள்ளத்துடன் பார்த்துக்கொண்டிருப்பதும் — இவ்விதமாகவே நாள்தோறும் நடைபெற்று வந்தன. இவரது அருமைப் புதல்வி—இப்போது ஸ்ரீமதி சகுந்தலை அம்மாள், அப்போது 'பாப்பா'—காலைச் சிற்றுண்டி கொண்டுவரும் போதுதான்—அதுவும், முன்னே கொண்டுவந்து வைக்கும் போது தான்—பாரதியார் என் பக்கமாகப் பத்திரிகையைப் போடுவார்.

பத்திரிகையைப் புரட்டி நான் வாசிக்க முயலும் போதே, 'இந்தா, இதைப் பிடி!' என்ற குரலுடன்

தோசையும் தொடர்ந்து வரும்! அதில் மிளகாய்ப் பொடியோ, உப்பிட்டு உலர்த்திய மாங்காய்த் துண்டோ உபகரணமாக இருக்கும். முதல் முதல் வாங்கி உண்ணக் கூசினேன். ஆனால் அந்த வீரத் திருவிழிகளை நோக்கியதும், 'வேண்டாம் என்றால் கோபிப்பாரோ?' என்று வாங்கி உண்டேன். நாளடைவில், அந்தத் தோசையைப் பிரசாதம் போல் வாங்கி, அமுதமாக உண்டு வந்தேன். காப்பியும் கொடுப்பார் இவ்விதமாக எத்தனையோ தடவை நான் பாரதியாருடன் காலைச் சிற்றுண்டி சாப்பிட்டிருக்கிறேன்.

காலை உணவுக்குப் பின், வெற்றிலை போட்டுக் கொள்வார். எழுதும் வேலை இருக்கும் போது அதிலே ஒருமை யுள்ளத்துடன் ஈடுபடுவார். அந்த வேலை இல்லாத தினங்களும் உண்டு. அப்போது தங்கம்மாள், சகுந்தலை அம்மாள் என்ற இரண்டு அருமைப் புதல்வியருடனும் உத்ஸாகமாகப் பாடிய வண்ணம் பொழுது போக்குவார். இவர் சொற்படியே அப்புதல்வியர் பாடுவதில் குதூகலமாக ஈடுபடுவார்கள். மூவரில் ஒருவரும் சலித்துப் போவது கிடையாது.

முதல் முதல் பாரதியார் புதுவை ஈசுவரன் கோவில் தெருவில் திரு. மு. இராஜாபாதரின் இல்லத்திற்கு அடுத்த ஒரு சிறு வீட்டில் குடியிருந்தார். பிறகு அவ்வீட்டைக் காலி செய்து, அதே வீதியில் 28-ம் எண்ணுள்ள ஒரு மாடி வீட்டில் குடியேறினார். அது ஒரு செட்டியாருக்குச் சொந்தம். அவர் பெயர் ஐயாக்கண்ணுச் செட்டியார். அவர் குள்ளமாக இருப்பார். தயாளகுணம் உள்ளவர்.

அவர் பாரதியாரிடம் குடிக்கூலி கேட்பதே விநோதமாக இருக்கும். சந்தடி செய்யாமல் அடி

மேல் அடிவைத்து வருவார். வீட்டுக்குள்ளே வந்து பாரதியாரை உற்று நோக்குவார். வாய் திறந்து வாடகை கேட்கமாட்டார். மௌனமான அந்தச் சைகையை அறிந்துகொண்டே பாரதியார் பணம் கொடுத்துவிடுவார்—ஆம், பணம் கையில் இருந்தால்! ஆனால், இப்படி அடிக்கடி நிகழ்வதில்லை. பணம் இல்லாவிட்டால், பாரதியார் செட்டியாரைப் பார்த்து, 'செட்டியாரே! இன்னும் வந்து சேர்ந்த பாடில்லை. ஒருவாரம் கழித்து வாருங்கள்!' என்று சொல்வார். பாரதியாரின் இல்வாழ்க்கைதான் செட்டியாருக்குத் தெரியுமே, குடிக்கூலிக்காக மன்றாடாமல் மெள்ள நழுவிவிடுவார். இவரைப் பாரதியார் வேடிக்கையாக 'விளக்கெண்ணெய்ச் செட்டியார்' என்று அழைப்பதுண்டு. இந்த விநோதப் பெயரால் ஐயாக்கண்ணுச் செட்டியாரும் இலக்கியப் பிரசித்தி பெற்றுவிட்டார்!

புதுவையில் பாரதியார் பட்ட கஷ்டங்களே ஒரு பாரதமாகும். கட்டுரை, கவிதை எழுதவேண்டியிருக்கும்: வெள்ளைக் காகிதம் இராது, கையில் காசும் இராது. அப்படித் தவிக்கும் சமயங்களில் பழைய 'ஹிந்து' 'சுதேசமித்திரன்' பத்திரிகைகள் உதவி செய்யும்! அவற்றைக் கட்டாகக் கட்டிக் கொடுத்து, அதை மளிகைக் கடையில் விற்று வெள்ளைக் காகிதம், 'ரிலீப் நிப்' முதலியவைகளை வாங்கிவரச் சொல்வார். வந்ததும், வழக்கம்போல எழுத்து வேலை நடக்கும்.

இத்தகைய வறுமைத் துன்பம் பாரதியாரை விட்டு அகலவேயில்லை, இவர் புதுவையை விட்டுப் போகும்வரையில். வறுமையை நோக்கி ஒரு தமிழ்ப் புலவர், 'நீங்கா நிழல் போல நீ என்னை விட்டு நீங்குவதேயில்லை!' என்று பாடியிருக்கிறாரல்லவா? அது போலத்தான் பாரதியாரின் நிலையும். ஆனால், வறு

மைப்பட்ட மற்றப் புலவர்களின் மனநிலைக்கும் பாரதியாரின் மனநிலைக்கும் மிகுந்த வித்தியாசம் உண்டு. பாரதியாருக்குப் பராசக்திமீது பக்தி அதிகம். இதனால் இவர் மகிழ்ச்சியுடனேயே இருந்தார். இவரது மனைவியார் ஸ்ரீமதி செல்லம்மாளும் வறுமை கருதி வெறுப்புற்று இருந்ததில்லை. பணக் கவலையால் என் குருநாதராவது, அம்மையாராவது வெறுப்புற்றிருந்ததை நான் சிறிதும் கண்டதில்லை.

பாரதியாருக்குத் தேசபக்தியும் தெய்வபக்தியும் ஒன்றே. பராசக்தியே பாரதமாதாவாகவும் காட்சியளித்தாள். ஆகவே தேசக் கவலையிலும் உலகக் கவலையிலும் மூழ்கித் தம் கவலையை மறந்திருக்கும்படி பாரதியாருக்கு, உலக மாதாவாகவும் தேச மாதாவாகவும் விளங்கிய பராசக்தி கிருபைசெய்து பாலித்தாள் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. இத்தகைய பெரும் பக்திமானாகிய பாரதியார் எனக்குத் தேசபக்தராக மட்டும் தோன்றவில்லை, வெறும் பத்திரிகாசிரியராக மட்டும் தோன்றவில்லை, வாழ்க்கைக்கே வழி காட்டக் கூடிய ஒரு பெரியாராக—குருதேவராகக் காட்சியளித்தார்.

ஆனால், பாரதியாரின் பெருமையை அந்நாளில் புதுவை நகர் உணர்ந்துகொள்ளவில்லை. அக்காலத்தில் பத்திரிகைகளைப் புதுவைப் பொதுஜனங்களில் பலரும் வாசித்து வரவில்லை. அதிலும், தமிழ்ப் பத்திரிகை என்றால் வேப்பிலைக் கஷாயந்தான்! அதிலும், பாரதியாரின் 'இந்தியா' பத்திரிகை அரசியல் துறையிலும் சமூகத் துறையிலும் புரட்சிகரமான கொள்கைகளை வெளியிட்டு வந்ததால், அதையும் தீண்டாத இனத்தைச் சேர்ந்ததுபோல் செல்வரும் செல்வாக்குள்ளவர்களும் கருதிவிட்டனர்.

புதுவைத் தமிழர்கள் பாரதியாரைத் தங்களில் ஒருவர் என்றுகூட எண்ணியதில்லை. ஆனால், பாரதியாரையும், அவரைப்போல் புதுவைக்கு வந்திருந்தவர்களையும் 'சுதேசிகள்' என்பார்கள்! 'சுதேசிகள்' என்றால் 'நம்மவர்' என்ற பொருளில் அல்ல; 'பிரிட்டிஷ் அரசாங்கத்தில் கலகமோ, குழப்பமோ செய்து ஓடி வந்தவர்கள்' என்ற ஒரு புதுமைப் பொருளையும் புதுவை வாசிகள் அளித்துவிட்டார்கள். அக்காலத்தில் பிரிட்டிஷ் இந்தியாவில் நடைபெற்ற அரசியல் கிளர்ச்சியைச் 'சுதேசிக் கலகம்' என்று பேசிக்கொண்டார்கள்.

பாரதியாரின் பெருமையை ஒருவாறு அறிந்தவர்களுக்கும், அவரோடு பழகவும் சம்பாஷிக்கவும் துணிவு கிடையாது. போலீஸ்-பயம் ஒரு பெருங் காரணம். பிரிட்டிஷ் இரகசியப் போலீஸ் (சி.ஐ.டி.) காரர்களின் கண்காணிப்பில் இருந்தார்கள் பாரதியார் போன்ற தேசபக்தர்களும், அரவிந்த ஆசிரம வாசிகளும். இவர்களுடன் சம்பாஷித்தவர்களும், இவர்களுடைய விடுதிகளுக்குச் சென்றவர்களும் கூட, சி. ஐ. டி.களின் சர்வவல்லமையுள்ள கூரிய கடாட்சத்திற்கு இலக்காயினர்! ஆகவே, பாரதியாரின் தேசபக்தியைப் பாராட்டி இவரிடம் பக்தி விசுவாசம் கொண்டவர்களும், இவரைக் கண்டும் காணுமல் போய்விடுவார்கள். இந் நிலையிலும், இவரோடு நான் நெருங்கிப் பழகத் துணிந்ததற்குக் காரணம் பயம் அறியாத இளமையில் பதிந்துவிட்ட குருபக்திதான்.

இத்தகைய பக்தியினுல்தான் இவருடைய நடை உடை பாவனைகளைக் கண்டும் நான் விகற்பமான உணர்ச்சி கொண்டதில்லை. மற்றவர்களுக்கோ, இவருடைய தோற்றமே விநோதமாகவோ, வெறுப்பாகவோ இருந்திருக்க வேண்டும். ஈசுவரன் தரும

ராஜா கோவில் வீதியில், திறந்த மேல்மாடியிலே, சூரியன் உச்சியிலிருக்கும்போது, உடலின் மேற்பாகத்தில் ஆடையில்லாமல், தலைமுடி அலைய, ஏதோ ஆவேசம் கொண்டவரைப் போல் இவர் காட்சியளிப்பதுண்டு. பார்த்தவர்கள், 'ஏதோ சக்தி பூஜை செய்கிறவர்' என்பார்கள். பலருக்கு அத்தோற்றமும், ஆட்டமும், ஓட்டமும், குதிப்பும், கை நீட்டல்களும் வேடிக்கையாகவும் தோன்றும். எனக்கு மட்டும் குருபக்தி அதிகரித்து, இவரிடம் உபதேசம் பெறவேண்டும் என்ற ஆசையை விளைத்தது.

## அத்தியாயம் 2

# பாரதியார் பிரசங்கம்

பாரதியார் வீட்டுக்கு அடிக்கடி போவதுடன், கடற்கரை ரஸ்தாவில் உலாவும்போதும் நான் இவரை அடிக்கடி சந்திப்பது வழக்கம். குருநாதரைக் கண்டதுமே, இரும்பைக் காந்தம் இழுப்பதுபோல் இவருடைய பேரன்பு என்னை வசீகரித்தது. ஆனல், அந்த ஆரம்பகாலத்தில் இவருடைய தோற்றம்—அந்த முறுக்கிய மீசையும், மார்பை முன் தள்ளி நிற்கும் கம்பீர நிலையும், குதித்து நடக்கும் குதூகலமும், அன்பையும் கருணையையும் ஆழத்திலே கொண்டு ஜொலித்த வீரத் திருவிழிகளின் பார்வையும், என்னை அணுகவொட்டாமல் சிறிது தூரத்திலே கூசி நிற்கச் செய்துவிட்டன.

எனினும், 'எப்படியாவது இப்பெரியாருடன் வார்த்தையாட வேண்டும்; இவர் கருணைக்கு இலக்காகவேண்டும்' என்ற ஆசை என் சங்கோசத்துடன் போராடியது. ஒருவாறு நெஞ்சு துணிந்து நான் பழக விரும்பியபோது, இரகசியப் போலீஸாரின் பயமும் குறுக்கிட்டது. ஆகவே, நெடுநாள்வரை தூரதரிசனத்துடன் திருப்தி அடையவேண்டியதாயிற்று. கடைசியாக, ஆசை அச்சத்தையும் கூச்சத்தையும் ஜயித்துவிட்டது.

1912-ம் ஆண்டில் 'ப்ரொக்ரெஸிவ் யூனியன் கிரிக்கட் கிளப்' (Progressive Union Cricket Club) என்ற சங்கத்தின் ஆண்டுவிழா நடைபெறுவதற்கு

ஒரு வாரத்திற்குமுன், அவ்விழாவில் நடைபெற வேண்டிய நிகழ்ச்சிகளைக் குறித்து ஆலோசிக்க ஒரு கூட்டம் கூடியது. உறுப்பினர் பலரும் பல வேறு ஆலோசனைகளை வெளியிட்டார்கள். கடைசியாகப் பாரதியாரைக் கொண்டு விழாவில் ஒரு சொற்பொழிவு நடத்துவது நலம் என்று ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இவ்விஷயமாகப் பாரதியாரைக் கண்டு பேச வேண்டுமென்று ஒரு தினத்தை உறுப்பினர் குறிப்பிட்டனர். அதற்கு இணங்க மேற்படி 'கிளப்'பின் நிர்வாகத் தலைவரான அடைக்கல நாதன் அர்லோக், ஜேம்ஸ் ஸாமுவேல், அந்துவேன் அர்லோக் ஆகிய மூவரும் நானும் பாரதியார் வீட்டை நோக்கிச் சென்றோம். எங்களில் ஜேம்ஸ் ஸாமுவேல் பின்னளில் பாரதியார் பாடும் போது பிடில் வாசிக்கலானார்: அவ்வளவு பழக்கம் நாளடைவில ஏற்பட்டது. அந்துவேன் அர்லோக் பாரதியாரின் பிரெஞ்சு வாத்தியாராகி, பிரெஞ்சு சுதந்திர கீதத்தில் பாரதியாருக்குப் பெரு விருப்பம் ஏற்படக் காரணமானார்.

வீட்டின் கதவு உட்புறம் தாழிட்டிருந்தது. மெள்ளக் கதவைத் தட்டினேன். உடனே, 'யார்?' என்று ஓர் உரத்த சப்தம் உள்ளிருந்து கம்பீரமாகக் கேட்டது.

எங்களுக்கு ஒன்றும் பதில் சொல்லத் தோன்றவில்லை. சற்று நேரம் தயங்கி நின்றோம். மறுபடியும் நான் தட்டினேன். 'யார் அங்கே ?' என்று மறுபடியும் ஒரு சப்தத்துடன் கதவு படீரென்று திறந்தது. நெற்றியில் குங்குமப் பொட்டும் முறுக்கிய மீசையுமாகப் பாரதியார் வெளிப்பட்டார். நாங்கள் கைகூப்பி வணங்கியதும், அவர் பதில்

நமஸ்காரம் செய்து, 'எங்கே வந்தீர்கள்?' என்று கேட்டார்.

நாங்கள் கொஞ்சம் சாவகாசமாகப் பேசி, வந்த காரியத்தைத் தெரிவிக்க விரும்பினோம். எனவே நான், 'ஒரு காரணத்தை முன்னிட்டுத் தங்கள் உதவியை நாடி இங்கு வந்திருக்கிறோம்' என்றேன் அவரும், 'அப்படியானால் உள்ளே வாருங்கள்' என்றார். நாங்கள் தொடர்ந்து சென்றதும், ஒரு சிறு அறையைக் காட்டி, 'இங்கே உட்கார்ந்திருங்கள், இதோ வந்துவிடுகிறேன்' என்று சொல்லிவிட்டு, உள்ளே போனார். அந்தச் சிறு அறையின் நிலைமையைத்தான் பாரதியார் தமது குயில்-பாட்டின் இறுதியில் உள்ளது உள்ளபடியே படம் பிடித்துக் காட்டுகிறார்:

> சூழ்ந்திருக்கும் பண்டைச்
> சுவடி, எழுதுகோல்,
> பத்திரிகைக் கூட்டம்,
> பழம்பாய்—வரிசையெல்லாம்
> ஒத்திருக்க, 'நாம் வீட்டில்
> உள்ளோம்!' என உணர்ந்தேன்.

எங்கே பார்த்தாலும் துண்டுக் காகிதங்களும், அன்று வந்த 'ஹிந்து,' 'சுதேசமித்திரன்' பத்திரிகைகளும் குழப்பமான கூட்டமாய்க் கிடந்தன. ஒரு மூலையில், குயில்-பாட்டில் வர்ணிக்கப்படாத கறுப்புச் சட்டையும், பெஞ்சியின்மேல் ஒரு வீணையும் இருந்தன.

நாங்கள் தரையில் உட்கார்ந்தபடியே மௌனமாக ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தோம். சற்று நேரத்தில் வாய் நிறைய வெற்றிலை போட்டுக்கொண்டு பாரதியார் வந்து எங்கள்முன் உட்கார்ந்தார். உட்கார்ந்து தலையைக் கம்பீரமாக

நிமிர்த்தி, 'எங்கே வந்தீர்கள்?' என்று முன் கேட்ட வினவையே—அந்தக் கம்பீரமான தோரணையில் அல்ல—இப்போது வினயமாக வினவினர். நாங்கள், 'எங்கள் "கிளப்"பின் ஆண்டுவிழாக் கொண்டாட்டம் ஒரு வாரத்தில் கொண்டாடப் போகிறோம். அன்று தாங்கள் கருணை கூர்ந்து ஒரு சொற்பொழிவு நிகழ்த்த இணங்க வேண்டும்!' என்று வேண்டிக்கொண்டோம்.

'நல்லது, எதைப்பற்றி உபந்யாஸம் செய்ய வேண்டும்?' என்று அன்பு தோய்ந்த குரலில் கேட்டார். நான் பளிச்சென்று, 'சாதி வேற்றுமையைக் குறித்துத் தாங்கள் பேசுவதை நாங்கள் கேட்க விரும்புகிறோம்' என்றேன். பாரதியார் இளநகை அரும்பியவண்ணம் எங்களை நோக்கி, 'நல்லது, நல்லது! என் எண்ணம் போலவே இருக்கிறது உங்கள் விருப்பமும்!' என்றார். மிக்க மகிழ்ச்சியுடன் எங்கள் 'கிளப்'பில் வந்து பேச ஒப்புக்கொண்டார். பாரதியாரையும், ஈசுவரன் கோவில் வீதியில் அவர் வசித்துவந்த வீட்டையும் எண்ணி, 'இந்தச் சிறு வீட்டுக்குள்ளே எவ்வளவு பெரிய ஆத்மா குடியிருக்கிறது!' என்று நாங்கள் அதிசயித்தோம். பெரு மகிழ்ச்சியுடன் விடைபெற்றுக் கொண்டு திரும்பினோம்.

மறு நாள் ஆண்டுவிழா-அழைப்புப் பத்திரிகை அச்சிட்டு அன்பர்களுக்கு மட்டும் விநியோகித்தோம். அப்பத்திரிகையில், மாலை ஐந்து மணிக்குப் பாரதியார் 'சாதி வித்தியாசம்' என்னும் பொருள் குறித்துச் சொற்பொழிவாற்றுவார் என்று தெளிவாகக் குறிப்பிட்டிருந்தோம். ஏதோ அரசியல்-பிரசங்கம் செய்வார் பாரதியார் என்று யாரும் நினைக்கக் கூடாது என்று முன்ஜாக்கிரதையாகவே நடந்து கொண்டோம்.

ஊரெங்கும் செய்தி பரவிவிட்டதால், புதுவை ஷார்த்தர் வீதியில் 15-வது எண்ணுள்ள வீட்டில்—அதாவது, ஆண்டுவிழாப் பிரசங்கம் நடைபெறும் என்று குறித்திருந்த இடத்தில்—ஐந்து மணிக்கு முன்பே பெருங் கூட்டம் கூடிவிட்டது. அந்த ஷார்த்தர் வீதி இப்போது பிரான்சுவா மார்ட்டின் வீதி என்று பெயர் மாறியிருக்கிறது. அந்தக் கூட்டம் நடந்த வீடு இன்று அரவிந்த ஆசிரமத்திற்குச் சொந்தமாயிருக்கிறது.

அக்கூட்டத்தில் பலவேறு வகுப்பினரும் காணப்பட்டனர். நான் வாசலில் நின்றுகொண்டு, ஜாக்கிரதையாக, அழைப்புப் பத்திரம் வைத்திருந்த ஆளைப் பார்த்துப் பார்த்து உள்ளே அனுமதித்துக் கொண்டிருந்தேன். சி. ஐ. டி பயத்தினால் அப்படிச் செய்யலானேன்.

இப்படி வடிகட்டி அனுப்பிக்கொண்டிருந்தும் உள்ளே கூட்டம் பெருகிவிட்டது. 'சுதேசி வீரர் பேசப்போகிறார், கேட்கலாம்!' என்ற ஆசைதான் அதற்குக் காரணம். நான் ஒவ்வொருவராக வந்தவர்களைப் பார்த்து உள்ளே அனுப்பிக் கொண்டிருக்கையில், ஒருவர் என் எதிரே ரஸ்தா நடுவில் நின்றுகொண்டிருந்தார். அவர் தம் கையில் வைத்திருந்த குடையை ஊன்றியவண்ணம் நின்று கொண்டிருந்தார். பிறகு மெள்ள என் அருகில் வந்து, 'ஸார்!' என்றார்.

நல்ல சிவப்பு நிறம், சுமார் ஆறடி உயரம், கிராப்புத் தலை, நெற்றியில் நாமம், மேலே கறுப்புச் செக்குக் கோட்டு, இடுப்பில் கரைபோட்ட வேட்டி-அந்த ஆசாமியை நோக்கி நான், 'தங்களுக்கு என்ன வேணும், ஸார்!' என்று கேட்டேன். அதற்கு அவர், 'ஒன்றுமில்லை, ஸார்! நான் பாரதி

யாருடன் திருநெல்வேலியில் சேர்ந்து வாசித்த பள்ளித்தோழன்!' என்று பதில் சொன்னார். 'பாரதியார் உபந்யாஸம் செய்யப் போவதாகக் கேள்விப் பட்டுத்தான் ஓடோடியும் வந்தேன்' என்றும் தெரிவித்தார். தம்மிடம் அழைப்புப் பத்திரிகை இல்லையென்று சொல்லிவிட்டு, பாரதியாரின் பழைய நண்பர் என்ற முறையில் தயவுசெய்து தம்மை அனுமதிக்க வேண்டும் என்று வினயமாகக் கேட்டுக் கொண்டார். நான் சம்மதித்து, அவரை உள்ளே அழைத்துப்போய் ஒரு நாற்காலியில் உட்கார வைத்தேன்.

இதற்குள் மணி ஐந்தும் ஆகி அதற்கு மேலும் ஆகிவிட்டது. பாரதியார் இன்னும் வந்து சேரவில்லை. சபையோ பாரதியார் பிரசங்கத்தைக் கேட்கவேண்டுமென்று பேராவலுடன் காத்திருந்தது. விழா நடக்கும் அந்த இடத்திற்குப் பாரதியார் வீடு அதிக தூரத்தில் இல்லை. ஆகவே ஓடிப் போய் அழைத்து வரலாம் என்று வீட்டை நாடி விரைந்தேன்.

பாரதியார் சில நண்பர்களுடன் எதிரே வந்து கொண்டிருந்தார். அந்த நண்பர்களில் அறிஞர் வ. வே. சு. ஐயரும் ஒருவர். நான் ஒரே ஓட்டமாக ஓடிப் போனேன். என்னைக் கண்டதும் பாரதியார், 'எங்கே ஓடி வருகிறாய்?' என்று கேட்டார். மூச்சுத் திணற ஓடிச் சென்ற நான், சிறிது அமைதியுற்ற பின், 'தங்கள் வரவை எதிர் நோக்கி ஜனங்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். மேலும், தங்களுடன் திருநெல்வேலியில் வாசித்து வந்த பழைய நண்பர் ஒருவரும் வந்து காத்திருக்கிறார்' என்றேன்.

அதற்குப் பாரதியார், 'என் பள்ளிக்கூட நண்பனா? அப்படியா சொன்னான்? அவன் எப்படி

இருக்கிறான், அடையாளம் சொல்லு!' என்று கேட்டார். நான் ஆசாமியை வருணிக்கத் தொடங்கியதும், பாரதியார் முகம் உத்ஸாகத்தை இழந்தது. 'சுமார் ஆறடி' என்று அந்த உயர் திருவாளரை வருணித்து முடித்ததும், 'நீ மோசம்போய்விட்டாய்!' என்றார். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. 'கறுப்புச் செக்குக் கோட்டு, ஆள் நல்ல சிவப்பு' என்றதும், பாரதியார், 'பழைய கறுப்பன்தான்! என் நண்பன் அல்ல, இரகசியப் போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டராக இருக்கவேணும்!' என்று சொல்லிவிட்டு, 'அவன் இருந்தால் இருக்கட்டும், நம்முடைய காரியத்தை நாம் பார்க்கலாம், வா!' என்று அவசரமாக நடந்தார். நாங்கள் விழா நடைபெறும் வீட்டுக்குள் நுழைந்தோம்.

பாரதியாரைக் கண்ட ஜனங்கள் வந்தேமாதர கோஷம் செய்து கைதட்டி வரவேற்றார்கள். அக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தவர் காலஞ்சென்ற திரு. பு. சி. நாராயணசாமி உபாத்தியாயர்; ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர். பாரதியார் ஜாதி பேதத்தின் தோற்றம், வளர்ச்சி, ஜாதி வித்தியாசத்தின் விளைவான கேடுகள், கொடுமைகள் முதலியவற்றையெல்லாம் சாங்கோபாங்கமாக எளிய நடையில் எல்லோர் மனத்திலும் ஆழ்ந்து பதியும்படி பேசி முடித்தார்.

இந்த உபந்யாஸத்தைச் சுருக்கெழுத்துக்காரர் யாராவது உள்ளபடி எழுதிவைத்திருந்தால், அது இந்நாளிலும் இன்றைய தமிழருக்குப் பாரதி-இலக்கியத்தின் ஒரு பகுதியாக உதவியிருக்கும்.

## அத்தியாயம் 3

### பிரசங்கத்திற்குப் பரிசு

எங்கள் 'கிளப்'பின் ஆண்டுவிழா வைபவம் இனிது நிறைவேறிய ஒரு வாரத்திற்குப் பின், ஒருநாள், 'பாரதியாரைப் பார்த்து வருவோம்' என்று என் வீட்டிலிருந்து புறப்பட்டேன். காலை சுமார் 9-மணி இருக்கும். போலீஸ் சேவகன் ஒருவன் எனக்கு ஒரு 'ஸம்மன்ஸ்' (Summons) இருப்பதாகச் சொல்லி என்னிடம் கொடுத்தான். 'இப்படி இன்னும் மூன்று பேருக்கு உண்டு' என்றும் சொன்னான்.

'கிளப்'பின் தலைவரான அடைக்கலநாதன் அர்லோக் என்பவருக்கும், ஜேம்ஸ் ஸாமுவேலுக்கும், திருவேங்கடம் வெர்னியே என்பவருக்கும் 'ஸம்மன்ஸ்' உண்டு என்று அறிந்தேன். திருவேங்கடம் வெர்னியே இந்தோ-சைனாவுக்குப் போய் விட்டதால், எனக்கு 'ஸம்மன்ஸ்' கொடுத்துவிட்டு, மேற்கூறிய இருவரையும் தேடிப் போவதாகச் சொல்லிப் போய்விட்டான் சேவகன்.

எனக்கு வந்த 'ஸம்மன்'ஸைப் பார்த்தேன். அதில், 1912-ம் வரு (மாதம், தேதி, கிழமை இப்போது ஞாபகம் இல்லை) சர்க்கார் அனுமதியில்லாமல் புதுவை ஷார்த்தர் வீதியில் 15-வது எண்ணுள்ள இல்லத்தில் சி. சுப்பிரமணிய பாரதியாரைக் கொண்டு ஒரு பெரும் பொதுக் கூட்டம் கூட்டியது சட்ட விரோதமாய் இருப்பதால், நான் புதுவைக்

கப்பிஸேன் வீதியிலுள்ள போலீஸ் கோர்ட்டில் காலை எட்டு மணிக்கு ஆஜராகவேண்டுமென்று கண்டிருந்தது.

இது குறித்துப் பாரதியாரைக் கலந்துகொள்ள லாம் என்று நேரே சென்றேன். பாரதியார் தம் கறுப்புக் கோட்டையும் தலையில் கட்டியிருந்த பெங் களூர்ப் பட்டுக் குட்டையையும் எடுத்து ஒரு மூலையில் வீசி யெறிந்துவிட்டு, 'என்ன செய்தி?' என்று கேட்டார். நான் என் கையிலிருந்த 'ஸம்மன்'ஸை நீட்டினேன்.

பாரதியார் ஒரு தடவைக்கு இரு தடவையாக அதை வாசித்துப் பார்த்தார். 'இதுபோல் இன் னும் யார் யாருக்கு வந்திருக்கிறது?'' என்று கேட் டார். 'கிளப்'புத் தலைவருக்கும், ஜேம்ஸ் ஸாமு வேலுக்கும், கூட்டம் நடத்த இடம் தந்த திருவேங் கடம் வெர்னியே என்பவருக்கும் வந்திருப்பதைத் தெரிவித்தேன்.

பிறகு பாரதியார் என்னை நோக்கி, 'வழக்கு நடக்கும் போது, "சுப்பிரமணிய பாரதியார் எதைக் குறித்துச் சொற்பொழிவு செய்தார்?'' என்று கேட் டால், இந்தக் குறிப்பை மாஜிஸ்டிரேட் முன்பு சமர்ப்பித்துவிடலாம்' என்று சொல்லி, ஒரு துண்டுக் காகிதத்தில் தாம் உபந்யஸித்த முக்கிய அம்சங்களை எழுதிக் கொடுத்தார்.

'ஸம்மன்'ஸில் குறிப்பிட்டிருந்த எட்டு மணிக்கு முன்பே நானும், 'கிளப்'புத் தலைவரும், ஜேம்ஸ் ஸாமுவேலும் போலீஸ் கோர்ட்டில் ஆஜராய் இருந் தோம். சுமார் எட்டரை மணிக்கு, கொமிஸேர் அப்பாஸாமி எங்கள் வழக்கை விசாரணைக்கு எடுத் துக் கொண்டார். பாரதியார் என்ன பேசினார் என்ற கேள்வியே கிடையாது. '21 நபர்களுக்கு

61922

மேற்பட்ட கூட்டத்தைக் கூட்டினீர்களா? அப்படிக் கூட்டுவதா யிருந்தால் சர்க்காரிடம் முன்கூட்டியே உத்தரவு பெறவேண்டும் என்று உங்களுக்குத் தெரியாதா?' என்ற கேள்விகளே கொமிஸேர் வாயிலிருந்து புறப்பட்டன. அதற்கு நாங்கள், 'கூட்டம் கூட்டியது உண்மைதான்; ஆனல் அதற்குச் சர்க்கார் உத்தரவு பெறவேண்டும் என்பது தெரியாது' என்று பதில் சொன்னேம்.

'அப்படிச் சட்டம் இருப்பது தெரியாதா?' என்று அதட்டினர் கொமிஸேர். உண்மையாகவே இளைஞர்களாகிய எங்களுக்கு அப்படி ஒரு சட்டம் இருப்பது அந்த நாளில் தெரியாது. 'தெரிந்திருந்தால் நாங்கள் முன்கூட்டி உத்தரவு பெற்றிருப்போம். அனுபவமில்லாத சிறுவர்கள் செய்த தவறு இது. முதல் தடவைதான். ஆகவே, கோர்ட்டார் தயவு செய்து மன்னிக்கவேண்டும்' என்று பணிவுடன் வேண்டிக் கொண்டோம்.

இத் தாழ்மையான வேண்டுகோளைக் கோர்ட்டார் காதில் போட்டுக் கொள்ளவேயில்லை. 'நீங்கள் கூட்டம் கூட்டுவதற்காக அழைப்புப் பத்திரங்கள் வெளியிட்டது உண்மைதானே?' என்று கர்ஜித்தார். கடைசியாக அவர், தெரியாமல் செய்த பிழையை ஒப்புக்கொண்டதற்காகத் தலைக்கு ஐந்து பிராங்கு* அபராதம் விதித்தார். ஆஜராகாத திரு வேங்கடம் வெர்ணியே என்பவருக்குக் கூட்டத்திற்கு இடம் கொடுத்த குற்றத்திற்காக இருபது பிராங்கு அபராதம் விதிக்கப்பட்டது.

நாங்கள் கோர்ட்டை விட்டு வெளியே வரும்போது, எங்கள் 'கிளப்'பின் ஆண்டுவிழா அன்று பாரதியாரின் பழைய நண்பனை நடித்த பிரிட்டிஷ்

* பிராங்கு - பிரெஞ்சு வெள்ளிக் காசு, சுமார் ஒன்பதரை அணு மதிப்புள்ளது.

சி. ஐ. டி. ஸப்-இன்ஸ்பெக்டரைக் கோர்ட்டு வாசற் படிக்கு அருகிலேயே கண்டோம். எங்களைக் கண்டதும் அந்த ஆசாமி வேறொரு பக்கமாக முகத்தைத் திருப்பிக்கொண்டு, யாரையோ எதிர்நோக்கி நிற்பவன் போல் வேறொரு நாடகம் நடித்துக் காட்டினான். நாங்கள் அவனையும் அந்த நாடகத்தையும் கவனியாதவர்கள்போல், பாரதியார் வீட்டைநோக்கி நேரே போய்விட்டோம்.

எங்களை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த பாரதியார், எங்களைக் கண்ணுற்றதும், 'கேஸ் என்ன ஆச்சு?' என்று கேட்டார். அபராதம் கிடைத்தது என்று தெரிவித்ததும், அவர், 'பரிசு கிடைத்தது சரிதான்! மாஜிஸ்டிரேட் இந்த வெகுமதியை அளிப்பதற்கு என்ன தகுதியை உங்களிடம் கண்டு கொண்டாரோ?' என்று வேடிக்கையாகக் கேட்டார். 'திருவேங்கடம் வெர்னியே சர்க்கார் உத்தியோகஸ்தராக இருந்தும், அபாரமான வெகுமதி பெற்றிருக்கிறாரே!' என்றும் பாரதியார் சிரித்துக் கொண்டே கேட்டார். நாங்களும் நகைத்துக் கொண்டே, 'சட்டம் தெரிந்த சர்க்கார் உத்தியோகஸ்தராக இருந்தும், திருவேங்கடம் வெர்னியே கூட்டம் நடத்த இடம் தந்தாரே, அந்தத் தீரத்திற்காகத்தான் இந்தப் பெரும் பரிசு' என்றோம்.

பிறகு பாரதியார் நகைப்பையும் வேடிக்கைப் பேச்சையும் விட்டுக் கவலையுடன், 'ஓகோ, சிறுவர்களாகிய நீங்கள் அபராதத் தொகையைக் கட்ட வேணுமே! எப்படிக் கட்டப் போகிறீர்களோ?' என்று கேட்டார். அந்த முகவாட்டத்தையும் இரக்கம் தோய்ந்த குரலையும், இன்றும் நான் நினைப்பூட்டிக்கொள்வதுண்டு.

'சுவாமி! இதற்காகத் தாங்கள் கவலைப்பட வேண்டாம். எப்படியாவது அபராதம் செலுத்தி

விடுவோம்!' என்று இளைஞர்களுக்குரிய உத்ஸாகத்துடன் நாங்கள் பதில் சொன்னோம். பிறகு நான் அவர் கைப்பட எழுதித் தந்திருந்த உபந்யாஸக் குறிப்பை அவரிடம் திருப்பிக் கொடுத்து விட்டு, விடைபெற்றுக் கொண்டேன்.

அந்தக் குறிப்பின் கதி என்ன ஆயிற்றென்று தெரியாது. பாரதியார் அப்படியே வீசி எறிந்திருக்கலாம். 'அந்தக் குறிப்புக் காகிதத்தையாவது கையிருப்பாக வைத்துக்கொண்டோமில்லையே!' என்று இப்போது என் புத்தியில் படுகிறது. அந்தக் குறிப்பு, உண்மைப் பரிசாகவும் நினைவுக்குறியாகவும் இருந்திருக்குமே; சட்டம் போட்டுக் கண்ணாடியிட்டு வைத்துப் பார்த்துக்கொள்ள வேண்டிய தஸ்தாவேஜல்லவா அது!

பாரதியாரின் சாதிவித்தியாசப் பிரசங்கத்தையும், அபராதம் கொடுத்த பின்விளைவையும் இன்று நினைத்துப் பார்க்கும் போது, 'ஏதோ ஒரு துளியாவது பாரதியாரின் துயரத்தில் கலந்து கொள்ளும் பாக்கியம் கிடைத்ததே!' என்றுதான் தோன்றுகிறது.

'இளங் கன்று பயமறியாது' என்ற தோரணையில்தான் நாங்கள் நடந்துகொண்டோம். ஆனால் அந்த நிகழ்ச்சி பாரதியாருக்கு என்மீது பின்னால் ஏற்பட்ட பேரபிமானத்திற்கு ஒரு வித்தாகிவிட்டது. அந்த நிகழ்ச்சியின் பயனாய்க் கவிஞர் எனக்குக் குருநாதராக என் உள்ளத்தில் இடம் பெறலானார்; நானும் ஒரு பிரிய சிஷ்யனாக அவர் உள்ளத்தில் பதவிபெறும் பாக்கியம் பெற்றேன்.

நாங்கள் வேண்டிக்கொண்டவுடனே பிரசங்கிக்கச் சம்மதித்துவிட்ட அந்தப் பெருந்தன்மையும், 'ஸி. ஐ. டி. ஸப்-இன்ஸ்பெக்டர் நண்பர் என்று

நாடகம் ஆடி உள்ளே நுழைந்து விட்டார், ஏதாவது கெடுதி செய்யப்போகிறார்' என்று தெரிந்தும் அலட்சியமாக உபந்யாஸத்தில் ஈடுபட்ட தீரமும், எங்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டதே என்ற கவலையைத் தமது பணக் கவலைகளுக்கும் மேலாகக்கொண்டு இரங்கிய சீலமும், நான் உள்ளக் கோயிலிலே எழுதிவைத்திருக்கும் பாரதி-சித்திரத்திற்கு ஓர் அபூர்வ அழகும் ஒளியும் தந்திருக்கின்றன.

## அத்தியாயம் 4

# உபநயனம் செய்வித்தார்

பாரதியாரோடு பழகப் பழக எனக்கு அவருடைய தோற்றம் முதலியவை, அவருடைய உள்ளுணர்ச்சிகளுக்குப் பொருத்தமாகவே தோன்றின. சில சமயங்களில் அவர் முஸ்லிம் போலவும் உடைதரித்துக் கொள்வார். கறுப்பு நெடுஞ்சட்டை அணிந்து, தலையில் கருநிறச் சுங்கு தொங்கும் சிவப்புக் குல்லா தரித்து, மீசையும் தாடியுமாய், ஒரு கையில் தடியும் கொண்டு கிளம்பிவிடுவார். அப்போது, பாரதியாரைத் தெரியாதவர்கள் இவர் ஹிந்து என்பதையே தெரிந்துகொள்ளாமலும் போய்விடுவார்கள். சில சமயங்களில் முண்டாசு கட்டிய சீக்கிய வீரர் போலவும் காட்சியளிப்பார். ராணுவ உத்தியோகஸ்தர் போல் தலையைக் கம்பீரமாக நிமிர்த்திக்கொண்டு முறுக்காக நடப்பார். தாம் பாடியிருக்கும் புதிய ஆத்திசூடியில்,

**ஏறு போல் நட**
**குன்றென நிமிர்ந்து நில்**
**கோல் கைக்கொண்டு வாழ்**

என்றெல்லாம் உபதேசம் செய்கிறாரல்லவா? தாம் செய்த இந்த உபதேசத்திற்குத் தாமே ஒரு லட்சியமாகவும் வாழ்ந்தார்.

உள்ளும் புறமும் ஒத்து வாழ்ந்த இவருடைய கொள்கைகள் எனக்கு மிகவும் பிடித்திருந்தன.

இவரிடம் ஏதாவது நல்ல உபதேசம் பெறவேண்டும் என்று ஆசைப்பட்டேன். 'சுவாமி, நமஸ்காரம்!' என்று ஒரு நாள் வழக்கம்போல் நமஸ்கரிக்க, அவரும் எனக்கு உபநயனம் செய்து வைக்க வேண்டுமென்ற ஆசை தமக்கு இருப்பதாகச் சொன்னார்.

அச்சமயம் பாரதியார் வறுமையில் ஆழ்ந்திருந்தார். பொருள்-வறுமையில்தான், அறிவுச் செல்வமும் அருட் செல்வமும் பொங்கித் ததும்பின. முக மலர்ச்சியுடன் எனக்குச் சந்தியாவந்தனம் சொல்லிக்கொடுத்தார்; அதாவது, காயத்ரி முதலான வேத மந்திரங்களால் வழிபாடு செய்யும் முறையைக் கற்றுக்கொடுத்தார். நானும் உத்ஸாகமாய்க் கற்றுத் தேர்ந்தேன். இவர் கற்பித்த மந்திரங்களால் காலை, உச்சி, மாலை நேரங்களில் ஒழுங்காக வழிபாடு செய்துவந்தேன்.

இப்படி நடந்து வருகையில் ஒருநாள் பாரதியார் என்னை நோக்கி, 'உனக்கு நாளை உபநயனம் செய்ய நிச்சயித்திருக்கிறது. அதிகாலையில் எழுந்து நீராடிச் சுத்தமான உடையுடன் இங்கு வந்து சேர வேண்டும். சட்டையொன்றும் போட்டுக்கொள்ள வேண்டாம்' என்றார். அப்படியே மறுதினம் காலை நான் பாரதியார் வீட்டை நோக்கிச் சென்றேன்.

உள்ளே போய்ப் பார்க்கையில் அங்கே பிராம்மணரும் பிராம்மணர் அல்லாதாரும் ஆகிய பாரதி-நண்பர்கள் காணப்பட்டார்கள். அவர்களிடையே அறிஞர் வ. வே. சு. ஐயர் கம்பீரமாக வீற்றிருந்தார். திரு. ஸ்ரீநிவாஸாசாரியார், திரு. நாகஸாமி ஐயர், குவளைக்கண்ணன் என்ற திரு. கிருஷ்ணமாசாரியார், திரு. கோவிந்தராஜுலு நாயுடு முதலானவர்களும் இருந்ததாக நினைவு.

குவளைக்கண்ணனைக் குறித்துப் பாரதியார் 'பாரதி அறுபத்தாறு' என்ற பிரபந்தத்தில் பாடியிருக்கிறார்:

> கனத்தபுகழ்க் குவளையூர்க் கண்ணன் என்பான்.
> பார்ப்பாரக் குலத்தினிலே பிறந்தான் கண்ணன்,
> பறையரையும் மறவரையும் நிகராக் கொண்டான்;
> நீர்ப்பான சுருதிவழி தன்னில் சேர்ந்தான்;
> சிவனடியார் இவன்மீது கருணை கொண்டார்

என்று குவளைக் கிருஷ்ணமாசாரியாரின் பரந்த நோக்கத்தையும் ஸமரஸ புத்தியையும் பாராட்டியிருக்கிறார் பாரதியார். குவளைக்கண்ணன் பாரதியாரைப்போல் நெஞ்சுத் துணிவு உள்ளவர். இவரது மறநெஞ்சினைப் பாரதியார்,

> மிகத்தானும் உயர்ந்ததுணி வுடையநெஞ்சின்
> வீரர்பிரான், குவளையூர்க் கண்ணன் என்பான்

என்று போற்றியுள்ளார். இவரைப் பற்றிய சில ஞாபகக் குறிப்புக்களை 'நிகழ்ச்சிக் கதம்பம்' என்ற தலைப்பில் பிந்திய அத்தியாயம் ஒன்றில் எழுதியுள்ளேன்.

இத்தகைய கூட்டம் எனக்கு நடைபெறப் போகும் உபநயனத்திற்காகக் கூடியிருப்பதாய்த் தெரிந்துகொண்டேன். பேரறிஞர் வ. வே. சு. ஐயரையும் மற்றவர்களையும் மனமார நமஸ்கரித்தேன். அவர்களும் என்னை உற்று நோக்கி நமஸ்கரித்து, 'வந்தே மாதரம்' சொல்லி வாழ்த்தினர்கள். பாரதியார் சுறுசுறுப்பாகக் கூடத்திற்கும் சமையல் கட்டிற்கும் நடந்தவண்ணமாயிருந்தார்.

'நாழிகையாகிறது, நடக்கட்டும்!' எனக் கணீரென்று ஒலித்தது ஸ்ரீ வ. வே. சு. ஐயரின் குரல். 'இதோ வந்துவிட்டேன்!' என்று எதிரொலித்தது

பாரதியாரின் வெண்கல மணிக் குரல். உடனேயே பாரதியார் பிரசன்னமாகிவிட்டார், குங்கும திலகமும் நெற்றியுமாக.

கூடத்தில் லட்சுமி, ஸரஸ்வதி, கிருஷ்ணன் ஆகிய மூவருடைய படங்கள் மாட்டியிருந்தன. இம் மூன்று படங்களையும் பூக்களால் அலங்கரித்தார் பாரதியார். கிருஷ்ணன் படத்திற்கு அடியில் பிச்சுவா என்ற வளைவான கத்தியொன்று மாட்டியிருந்தது. அந்தக் கத்திக்கும் குங்குமப் பொட்டு இட்டார். சற்று நேரம் தேவி பராசக்தியைத் தியானித்துப் பாடினார்.

பிறகு என்னிடம் வந்து கிழக்குமுகமாய் உட்காரச் சொன்னார். நான் உட்கார்ந்ததும், அந்த வீர விழியால் ஒரு பார்வை பார்த்துவிட்டுக் குருநாதர், தம் திருக்கரத்தால் என் நெற்றியிலும், புயத்திலும், மார்பிலும் திருநீற்றுக் காப்பு இட்டார். பிறகு என்னை மண்டியிட்டு உட்காரச் சொன்னார். கையில் பூணூலை எடுத்துக்கொண்டு சூரிய வழிபாடு செய்து வெகுநேரம் ஜபம் செய்து முடித்ததும், எனக்குப் பூணூலை அணிவித்தார்.

நான் உடனே சாஷ்டாங்கமாக விழுந்து பாதத்தைத் தொட்டு நமஸ்கரித்தேன். குருநாதர் என்னை ஆசீர்வதித்து, 'இன்று முதல் நீ பிராம்மணன்!' என்று உரத்த குரலில் கோஷித்தார். 'இனி, யாராகிலும் என்ன ஜாதி என்று கேட்டால், "நான் பிராம்மணன்!" என்று தைரியமாகச் சொல்லு' என்றும் கட்டளையிட்டார்.

'"அப்படி ஆய்விடலாமா?" என்று யாராவது கேட்கத் துணிந்தால், "அது எனக்குத் தெரியாது; என் குரு பாரதியாரைக் கேளுங்கள், அவர் உங்கள்

ஐயத்தைத் தெளிவிப்பார்'' என்று பதில் சொல்லி விடு' என்பதும் எனக்குப் பாரதியார் இட்ட கட்டளை. இந்த உபநயனச் செய்தி ஊரெல்லாம் பரவிவிட்டது. புதுவை வாசிகளில் யாராவது ஒருவர் தம்மைக் கேள்வி கேட்க மாட்டாரா என்று பாரதியார் ஆவலாக எதிர்பார்த்திருந்தார். அதை ஒரு சந்தர்ப்பமாகக் கொண்டு பழைய வேத முனிவர்களின் பரந்த மனப்பான்மையையும், உண்மையான இந்து மதத்தின் உயர்ந்த லட்சியங்களையும் வெளியிட்டு விவகரிக்கத் துடித்துக் கொண்டிருந்தார்.

ஆனல் ஒருவரும் பாரதியார் எதிர்பார்த்தபடி தலைகாட்டவில்லை. ஒரே ஒரு செட்டியார் மாத்திரம் — புதுவை ஈசுவரன் கோவில் தெருவில் வசித்து வந்த மணிலா வியாபாரி — 'பாரதி புதுச்சேரியைக் கெடுக்க வந்திருக்கிருன்! கனகலிங்கத்திற்கு உபநயனம் செய்து பிராம்மணன் என்று சொல்லும்படி தூண்டிவிடலாமா?' என்று சொல்லிக்கொண்டிருந்தாராம். அந்தச் செட்டியாரும் பகிரங்கமாகப் பாரதியாருடன் வாது செய்யத் துணியவில்லை. வீட்டுக்குள்ளே முணுமுணுத்துக் கொண்டிருந்தார் என்றுதான் பாரதியார் கேள்விப்பட்டாராம். பாரதியாரே இதை என்னிடம் சொல்லிச் சிரித்தார்.

எனக்கு உபநயனம் செய்த சில தினங்களில் வேருெரு உபநயனமும் இந்த ரீதியில் நடைபெற்றது.

1913-ம் வருஷம். தேசமுத்துமாரி அம்மன் கோவில் என்ற ஒரு கோவில் புதுச்சேரியில் இருக்கிறது. இந்த அம்மனைப் பாரதியார் பாடியிருக்கிருர். இக்கோவிலில் நாகலிங்கப் பண்டாரம்

என்பவர் பூசாரி. அந்த வேலையோடு, அவர் கருமார வேலையும் செய்துவந்தார். அப்போது நான் புதுவையிலே ‘கோதார்’ இரும்பாலையில் குமாஸ்தா வேலை பார்த்து வந்தேன். என் இலாகாவில்தான் பண்டாரமும் வேலைசெய்து வந்தார். அவர் ஒருநாள் என் வீட்டுக்கு வந்து, ‘ஸார்! உங்களைப் பாரதியார் விஷயமாக ஒரு கேள்வி கேட்க வந்திருக்கிறேன். உங்கள் குரு யாரோ ஒரு ஹரிஜனனுக்குப் பூணூல் போட்டுவிட்டாராமே, அது குறித்து உங்களுக்கு ஏதாவது தெரியுமா?’ என்று கேட்டார். நான் சிரித்துக்கொண்டே, ‘பண்டாரம்! எனக்குத்தான் பாரதியார் உபநயனம் செய்து வைத்தார்’ என்றேன். பண்டாரம் திகைத்து நின்றார். நான் மேலும், ‘அதுமாத்திரம் அல்லாமல், இனி யாராகிலும் என்னை என்ன ஜாதி என்று கேட்டால், “பிராம்மணன்” என்று தைரியமாகச் சொல்லவேண்டும் என்றும் கட்டளையிட்டிருக்கிறார்’ என்றேன்.

இது கேட்ட பண்டாரம், ‘ஸார்! அப்படியானால் எனக்கும் உபநயனம் செய்துவைக்கவேண்டும். வடமொழியும் பாரதியாரிடம் கற்றுக்கொள்ள எனக்கு ஆசையுண்டு. தாங்கள் சிபார்சு செய்ய வேண்டும்’ என்று என்னை வேண்டிக்கொண்டார். நானும் அப்படியே ஒருநாள் பண்டாரத்தைப் பாரதியாரிடம் அழைத்துப் போய்ச் சிபார்சு செய்துவிட்டு, என் வீட்டுக்குப் போய்விட்டேன். பாரதியார் பண்டாரத்தை ஞாயிற்றுக்கிழமை வரச் சொன்னாராம்.

பாரதியாரை முதல் முதல் பார்த்த பண்டாரம் என்னை நோக்கி, ‘ஆ! இதென்ன! மெத்தையின் மேல் இவர் சுற்றிச் சுற்றி உலாவுவதைப் பார்த்தால், பித்துப் பிடித்தவர்போல் தோன்றுகிறதே!’

என்றார். நானோ, 'அவர் பித்தரா, சித்தரா என்பதை நீரே அறிந்துகொள்வீர்' என்று பதில் சொன்னேன்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை எட்டு மணிக்கு நாகலிங்கப் பண்டாரமும் நானும் பாரதியார் வீட்டுக்குப் போனோம். பத்திரிகை வாசித்துக்கொண்டிருந்த பாரதியார் தலை நிமிர்ந்து பார்த்து, நாங்கள் கை கூப்பி நமஸ்கரித்ததும், உட்காரும்படி கையமர்த்தினார். கால்மணி நேரத்தில் பத்திரிகையை மேற்பார்வையாகப் பார்த்துவிட்டுப் பண்டாரத்தை நோக்கி அவர் வரலாற்றை விவரமாக விசாரித்தார் பண்டாரம் தாம் புதுவை உப்பளம் நடுப்பதியில் வசிக்கும் ஹரிஜனங்களுக்குச் சொந்தமாயிருந்த தேசமுத்துமாரி அம்மன் கோவில் பூசாரி என்றும், தாம் திருவள்ளுவ நாயனார் திருக்குலத்தினர் என்றும் தெரிவித்துக் கொண்டார். வேறு யாரோ இருவர் ஏதோ வேலையாக அங்கு வந்து சேர்ந்ததும், எங்கள் சம்பாஷணை நின்றுவிட்டது.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணி சுமாருக்குப் பண்டாரம் பாரதியார் வீட்டுக்குப் போனதும், 'வாரும், வாரும், குருக்களே!' என்று பாரதியார் வரவேற்றாராம். 'என் ஞாயிற்றுக்கிழமைச் சீடன்' என்று அழைத்து, ஒருநாள் தாமே பண்டாரத்திற்குப் பூணூலும் போட்டு, காயத்ரி மந்திரமும் உபதேசித்தாராம். பண்டாரம் என்னைச் சந்தித்தபோது, 'பாரதியார் வீட்டுக்குப் போய்வருகிறீரா?' என்று கேட்டேன். அதற்கு அவர், 'அன்று நீங்கள் சிபார்சு செய்தபடி ஒன்றும் குறைவில்லை. காயத்ரி மந்திரம் முதலியவற்றைச் சொல்லிக்கொடுத்து, நேற்று எனக்கு உபநயனமும் செய்வித்தார்' என்று பதில் சொன்னார்.

காந்தியடிகள் ஹரிஜன முன்னேற்றத்திற்கு வழிகாட்டுவதற்கு முன்பே என் குருமகராஜர் பாரதியார் காட்டிய பெருநெறி, என்னை வசீகரித்ததுபோல் வள்ளுவப் பண்டாரத்தையும் வசீகரித்தது. பாரதியார் விதைத்த அந்த விதையின் விளைவுதான் இன்றைய ஆலயப் பிரவேசமும் என்று எனக்குத் தோன்றுகிறது.

## அத்தியாயம் 5

# உப்பளம் தேசமுத்துமாரி

புதுவைத் தேசமுத்துமாரி அம்மன் கோவிலின் பூசாரியான ஸி. நாகலிங்கம் என்ற வள்ளுவப் பண்டாரத்தை நான் பாரதியாருக்கு அறிமுகப்படுத்தி வைத்தபின், அவருக்கும் பாரதியாருக்கும் பழக்கம் அதிகரித்தது. 'தேசமுத்துமாரி அம்மன் சந்நிதியில் அர்ச்சகனாக இருந்து வருகிறேன். திருவள்ளுவ நாயனார் வம்சத்தைச் சேர்ந்தவன்' என்று நாகலிங்கம் தைரியமாகச் சொன்னதும், பாரதியாருக்குப் பெருமகிழ்ச்சி தோன்றிவிட்டது. 'தேசமுத்துமாரி' என்ற பேரைக் கேட்டதுமே கவிஞருக்கு ஆனந்தம் பொங்கியது என்பது அந்த முகச் சாயலிலேயே தெரிந்துவிட்டது.

'சைவனா? அசைவனா?' என்று பாரதியார் கேட்டதற்குப் பண்டாரம், 'சைவன்தான்' என்று பதில் சொன்னது பாரதியாரின் குதூகலத்தை அதிகரிக்கச் செய்தது. கறுப்பு மேற்சட்டையை மாட்டிக்கொண்டு, தலையில் பஞ்சாபிக் கட்டுக் கட்டிக்கொண்டு, தமது 'ஞாயிற்றுக்கிழமைச் சீட'ரான பண்டாரத்தின் கையைக் கெட்டியாகப் பிடித்த வண்ணம், பாரதியார் கடற்கரைக்குப் போவார். அங்கே டூப்ளே (Dupleix) என்ற பிரெஞ்சு வீரனின் உருவச்சிலைக்கு அருகில் 'பியாண்டு' வாத்தியம் வாசிக்கும் சிப்பாய்களை உற்று நோக்கிப் பண்டாரத்தையும் நோக்கி, 'எவ்வளவு ஆவலுடன் வாசிக்கிறார்கள் பார்த்தாயா?' என்று

கேட்பாராம். பிறகு வாராவதிமீது அழைத்துக் கொண்டு போய், அங்கே போட்டிருந்த பெஞ்சியில் பண்டாரத்தை அமரச்செய்து, பாரதியார் உலாவிய வண்ணம் காற்றுவாங்கிப் பொழுதுபோக்குவாராம்.

ஈசுவரன் தருமராஜா கோவில் தெருவில், வெளிப் புறத்திலே இரும்புக் கிராதி போட்ட அந்த மாடிவீட்டில், பாரதியார் வள்ளுவப் பண்டாரத்திற்குப் பராசக்தியின் கதைகளைச் சொல்லி, 'ஓம் சக்தி, ஓம்சக்தி, ஓம்சக்தி!' என்று திரும்பத் திரும்ப உச்சரிக்கச் சொல்வார். இப்படித் தமது அருமைப் பிள்ளைபோலவும், பிரிய சீடனைகவும் பண்டாரத்தை நடத்தி வந்த பாரதியார், அவருக்குப் பூணூலும் போட்டதுடன், தாம் அருகே உட்கார்ந்து சாப்பிடு வதும் உண்டு.

வழக்கம் போல் ஒரு ஞாயிற்றுக்கிழமை வள்ளுவப் பண்டாரம் பாரதியாரிடம் போயிருந்தபோது, "இதோ நமது ஞாயிற்றுக்கிழமைச் சீடன் வந்து விட்டான். ஹார்மோனியப் பெட்டியைக் கொண்டு வா!' என்றார் பாரதியார். பண்டாரத்திற்கு ஒன்றும் விளங்கவில்லை. புதல்வியார் ஸ்ரீமதி தங்கம்மாள் ஹார்மோனியப் பெட்டியைக் கொண்டுவந்து வைத்துத் தந்தையார் அருகில் உட்கார்ந்து கொண்டார். பிறகு பாரதியார் நாகலிங்கப் பண்டாரத்தை நோக்கி, 'உன் அம்மன் மீது பாட்டு ஒன்று பாடியிருக்கிறேன். நீ என்ன பரிசு கொடுப்பாய்?' என்று கேட்டார்.

பண்டாரம் பதில் சொல்லாமல் தலை குனிந்திருந்தார். அப்போது பாரதியாரும் ஸ்ரீமதி தங்கம்மாளும்,

**தேடிஉனைச் சரணடைந்தேன்,**
**தேசமுத்து மாரி!**

கேடதனை நீக்கிடுவாய்,
கேட்டவரம் தருவாய்!

என்று தொடங்கும் பாட்டை வெகு இனிமையாகப் பாடினார்கள். பண்டாரம் மெய்ம்மறந்து கேட்டுக் கொண்டிருந்தார்.

பாடியுனைச் சரணடைந்தேன்,
பாசமெல்லாம் களைவாய்,
கோடிநலம் செய்திடுவாய்,
குறைகளெல்லாம் தீர்ப்பாய்!

என்று தொடர்ந்து பாடி,

நம்பினோர் கெடுவதில்லை,
நான்குமறைத் தீர்ப்பு;
அம்பிகையைச் சரண்புகுந்தால்,
அதிகவரம் பெறலாம்!

என்று பாட்டை முடித்துப் பரவசமாயினர். பாட்டும் பண்ணும் பாரதியார் குதூகலமும் நாகலிங்கப் பண்டாரத்தையும் பரவச மாக்கிவிட்டன.

பாரதியார் 'தேசமுத்துமாரி' பாடலைப் பாடிக் காண்பித்த பின் அதைப் பண்டாரத்திற்கு எழுதிக் கொடுத்துப் பாராயணம் செய்யச் சொன்னார். அப்படியே பண்டாரமும் பாராயணம் செய்து சாந்தி பெறுவதுண்டு.

எப்பொழுதும் கவலையிலே
இணங்கிநிற்பான் பாவி,
ஒப்பி உன தேவல்செய்வேன்,
உனதருளால் வாழ்வேன்!

என்று தேசமுத்துமாரியை நோக்கிப் பாரதியார் பாடியிருப்பது, சக்தி அருளால் அவர் சக்தியும்

சாந்தியும் பெற்ற அனுபவம்தான். இதைப் பாடிப் பாராயணம் செய்யும் எங்களுக்கும் கவலை நீங்கி அம்மன் அருள் கிடைத்தது போலத் தோன்றும்.

பாரதியார் சில சமயங்களில் நாகலிங்கப் பண்டாரத்தைத் 'தேசமுத்துமாரி பாடலை நீ பாடு!' என்று, பண்ணோடு பாடச் செய்து தாம் கேட்டுக் கொண்டிருப்பதுமுண்டு.

**சக்தியென்று நேரமெல்லாம்**
**தமிழ்க்கவிதை பாடி,**
**பக்தியுடன் போற்றிநின்றால்,**
**பயமனைத்தும் தீரும்!**

என்றெல்லாம் பண்டாரம் பாடும்போது பாரதியார் குதூகலமாய்க் கேட்டு, குழந்தையின் மழலைச் சொல்லைக் கேட்டு இன்புறும் தந்தைபோல் மகிழ்வார். அந்தக் குதூகலம் பண்டாரத்தையும் தொத்திக்கொண்டு பயம் தீர்த்துப் பக்தியை விளைவிக்கும்.

ஒருநாள் பாரதியார் வீட்டில் மேளவாத்தியங்கள் முழங்கின. பூந்தோரணங்களால் வீடெல்லாம் அலங்கரிக்கப் பெற்றிருந்தது. ஆடவரும் பெண்களும் கூடியிருந்தார்கள். சற்று நேரம் பாரதியார் சொற்பொழிவு ஆற்றியபின், தெய்வப் படங்களுக்குக் கற்பூரதீபம் காட்டினார். வந்த ஜனங்களுக்குக் கற்கண்டு, பழம், ஒரு தேங்காய்மூடி வழங்கினார். அப்போது அங்கே போய் அந்த வழிபாட்டில் கலந்துகொண்ட வள்ளுவப் பண்டாரம் அன்று இரவு பத்துமணிக்கு வீட்டுக்குத் திரும்பினார். அப்போதுதான் பண்டாரத்திற்குத் 'தேசமுத்துமாரி' பாடலில் உள்ள,

**துன்பமே இயற்கையெனும்**
**சொல்லைமறந் திடுவோம்;**

இன்பமே வேண்டிநிற்போம்;
யாவும்அவள் தருவாள்!

என்ற பகுதியின் பொருளும் பயனும் நன்ருக விளங்கின.

'தேசமுத்துமாரி' பாடலின் வாயிலாக,

ஆதாரம் சக்தியென்றே
அருமறைகள் கூறும்;
யாதானும் தொழில்புரிவோம்,
யாதும்அவள் தொழிலாம்!

என்ற உபதேசத்தைப் பெற்றுத் தொழிலின் மேன்மையை உணர்ந்து இன்புற்ற பண்டாரத்திற்கும், மற்ற ஹரிஜன இளைஞருக்கும் பாரதியார் புதுவையிலிருந்து பிரிந்து போனதும், 'அந்த நேசம் நமக்கு இல்லாமற் போய்விட்டதே! அந்த ஆதார சக்தியை இழந்துவிட்டோமே!' என்ற ஏக்கம் பிடித்தது.

ஆரம்பத்தில் பாரதியாரைப் பித்துப் பிடித்தவர் என்று கருதிய நாகலிங்கம், 'தேசமுத்துமாரி' பாட்டைப் பாடிப் பாடி அனுபவித்தபின், அத்தகைய பக்திப் பைத்தியத்தின் பெருமையை உணர்ந்துகொண்டார்.

பாரதியாரின் 'தோத்திரப் பாடல்கள்' புத்தகத்தில் தேசமுத்துமாரி காட்சியளிக்கிருள். ஆனல் அப் பாட்டைப் பாரதியார் எந்தத் தேசமுத்துமாரி மீது பாடினரோ என்பது புதுவையில் அவருடன் கூடிப்பழகிய சில நண்பர்களுக்கே நன்ருகத் தெரியும். இது தெரியாத பலரும் தேசத்திற்குப் பொதுவாக உள்ள ஒரு மாரியம்மன்மீது கவிஞர் பாடியிருப்பதாகக் கருதுகிருர்கள். சிலர் புதுச்சேரியிலுள்ள வேருெரு மாரியம்மனைப் பாரதியார் இப்

படிப் பாடியிருப்பதாகவும் கூறுகிறார்கள். ஆனால், ஜாதி பேதம் தாண்டவமாடும் கோயில்களைப் பாரதியார் பாடுவதேயில்லையே!

இப்பெரியார் புதுவையில் தஞ்சம் புகுந்திருந்த காலத்தில் அவ்வூரில் பல ஆலயங்களிலும்—சிவாலயங்களோ, விஷ்ணு ஆலயங்களோ, அம்மன் ஆலயங்களோ, எவற்றிலும்—ஜாதிப் பேய் தலைவிரி கோலமாய்த் தாண்டவம் ஆடிக்கொண்டுதான் இருந்தது. 'அத்தகைய கோவில்களில் தெய்வம் இல்லை!' என்று என் குருநாதர் தைரியமாகச் சொல்லுவார். அந்தத் தெய்வங்கள்மீது ஒரு பாட்டும் பாட அவருக்கு விருப்பம் கிடையாது. இது பகிரங்க ரகசியம். ஆகவே ஹரிஜன மக்களுக்குச் சொந்தமான தேசமுத்துமாரி அம்மனை—புதுவை உப்பளம் நடுப்பதியில் கோவில்கொண்டிருக்கும் அம்மனையே—மனம் உவந்து பாடியிருக்கிறார்.

பாரதியாரின் மனைவியார் ஸ்ரீமதி செல்லம்மாள் ஆதியில் வெளியிட்ட 'தேசீயகீதம்' என்ற புத்தகத்தின் முதற்பாகத்தில் இப்பாடல்கள் 'உப்பளம் தேசமுத்துமாரி' என்ற தலைப்பெயரின் அடியில் வெளியிடப்பட்டன. அதுதான் சரி: என்ன காரணத்தினாலோ அடுத்த பதிப்புக்களில் 'தேசமுத்துமாரி' என்ற தலைப்பெயர் மட்டுமே காணப்படுகிறது.

பாரதியார் 'குமரன்' பத்திரிகையில் அந்நாளில் வெளியிட்டிருந்த ஒரு கட்டுரையில், 'என் வீட்டுக்கு ஒரு வள்ளுவப் பண்டாரம் வந்துபோவது வழக்கம். அவன் ஐயனார் பேரில் பாடல் பாடுவான். அவனுடைய அம்மன் பேரில் ஒரு பாடல் கட்டிக் கொடுத்தேன்' என்று 'உப்பளம் தேசமுத்து

மாரி' பாடல் பாடிய அந்த நிகழ்ச்சியைத் தாமே குறிப்பிட்டிருக்கிறார்.

பாரதியாரின் நினைவுக்குறியாக உப்பளத்தி லுள்ள அன்பர்கள் தேசமுத்துமாரி ஆலயத்திற்கு எதிரே இராப் பாடசாலை ஒன்று ஏற்படுத்தி ஹரிஜனப் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பித்து வரு கிறார்கள். புதுவை அரவிந்த ஆசிரமத்தில் இருந்து வரும் ஸ்ரீ. சுத்தானந்த பாரதியார் மேற்படி வாசக சாலைக்குப் 'பாரதி நூலகம்' என்ற பெயரையும் சூட்டியிருக்கிறார்.

ஜாதி கர்வம் குடிகொண்ட பெரிய கோவில் களைப் பாடாமல் ஹரிஜனங்களின் தேசமுத்துமாரி யைப் பாடிய போதிலும், இந்த அம்மனை உலக நாயகியாகிய மகாசக்தியாகவே பாடியுள்ளார் கவி ஞர். 'உலகத்து நாயகியே!' என்று தொடங்கும் முத்துமாரிபாட்டிலே தேசமுத்துமாரி பாட்டிலுள்ள கருத்துக்கள் மேலும் விளக்கம் பெறுகின்றன. வேறு 'சக்தி'ப் பாடல்களிலும் இதே பக்தியும் சிரத்தையும் புதிய புதிய கவியுருவம் பெறுகின்றன.

புதுவையில் ஹரிஜன தெய்வமாகிய தேச முத்துமாரி தேசப்பிரசித்தி பெற்றுவிட்டாள். இந் தப் பாட்டிலுள்ள,

> **நம்பினூர் கெடுவதில்லை,**
> **நான்குமறைத் தீர்ப்பு**

என்ற பாரதியாரின் தீர்ப்பு, இவர் இப்பாடல் பாடிய நாள்தொட்டு இன்றுவரை ஹரிஜனங்க ளாகிய எங்களுக்கு எவ்வளவோ ஆறுதல் அளித்து வந்திருக்கிறது. அந்த நம்பிக்கையும் பாரதியாரின் பாட்டுத் திறமும், தமிழ்நாட்டில் பொதுவாகத் தேசீய இயக்கத்திற்கும், சிறப்பாக ஹரிஜன முன்

னேற்றத்திற்கும் நல்ல வழி காட்டியிருக்கின்றன. இன்று ஆலயப் பிரவேசம் இந்நாட்டில் திருப்பதி ஹரிஜனப் பிரவேசத்துடன் இனிது முற்றுப் பெற்றிருக்கிறது. எல்லாம் பாரதியார் பாடிய தேச முத்துமாரியின் திருவருள்தான் என்பது என் நம்பிக்கை.

## அத்தியாயம் 6

# பிரெஞ்சு வாத்தியார்

ஒருநாள் காலை சுமார் ஒன்பது மணிக்கு நான் பாரதியார் வீட்டுக்குப் போய், வழக்கம் போல், 'சுவாமி! சுவாமி!' என்று கூப்பிட்டேன். ஸ்ரீமதி செல்லம்மாள் பாரதி, பாரதியார் 'தர்மாலய'த்திற்குப் போயிருப்பதாகச் சொன்னார். அறிஞர் ஸ்ரீ. வ. வே. சு. ஐயர் வசித்துவந்த இல்லத்திற்குத்தான் 'தர்மாலயம்' என்று பெயர். அந்த வீடு ஈசுவரன் கோவில் வீதியில் ஸ்ரீ ஆறுமுகம் செட்டியார் வீட்டுக்கு மேலண்டை இருக்கிறது.

நான் அங்கே போய் விசாரித்ததும் ஸ்ரீ வ. வே. சு. ஐயர், 'பாரதியார் ஸ்ரீ. அரவிந்தார் இல்லத்திற்குப் போயிருக்கிறார்' என்று தெரிவித்தார். உடனே அவ்விடம் சென்றேன். அந்நாளில் அரவிந்தர் 'திரேஸோர் பீரோ' அருகில் தங்கிவந்தார். அப்போதெல்லாம் அரவிந்தரை யாரும் போய்ப் பார்க்கலாம். இப்போதுள்ள ஆசிரமம் போன்ற கட்டடங்களும், பெருவாரியான சீடர்களும், செல்வங்களும் செல்வாக்கும் அந்நாளில் இல்லை. சுருங்கச் சொன்னால், அக்காலத்தில் அரவிந்தயோகி அரவிந்த ஞானியாகத்தான் இருந்தார். சிறந்த அரசியல் ஞானி வேதாந்த ஞானியாகக் கனிந்துகொண்டிருந்த காலம் அது.

அரவிந்தர் வீட்டுக்குச் சென்று நான் மெத்தைக்குப் போகும் சமயத்தில் பாரதியார் எதிரே

வந்தார். நான் நமஸ்கரித்ததும், கையில் வைத்திருந்த 'சுதேசமித்திர'னை என்னிடம் கொடுத்தார். இருவரும் வீட்டுக்குத் திரும்பினோம்.

வீட்டண்டை பிரெஞ்சு வாத்தியார் படம் பிடிக்கும் கைக் 'காமிரா'வுடன் நின்றுகொண்டிருந்தார். 'பிரெஞ்சு வாத்தியாரே! க்ஷேமம்தானா?' என்று யோகக்ஷேமம் விசாரித்தார் பாரதியார். நாங்கள் மூவரும் உள்ளேபோய் உட்கார்ந்தோம். பிறகு பாரதியார் வாத்தியாரை நோக்கி, 'உங்களுக்குப் படம் பிடிக்கவும் தெரியுமா?' என்று கேட்டார். 'இப்போதுதான் கற்றுவருகிறேன்' என்று பதில் வந்தது. 'அப்படியானால் என்னைப் பிடியும், பார்ப்போம்!' என்று சொல்லிப் பாரதியார் அறையை விட்டுத் தளத்தில் வந்து நின்றார்.

'கொஞ்ச தூரம் போங்கள்!....அதிக தூரம் போய்விட்டீர்கள்... ஓர் அடி முன்வாருங்கள்...... கொஞ்சம் பின்னே போய்க் கொள்ளுங்கள்!' என்று, புதிதாகப் படம் பிடிக்கக் கற்றுவந்த பிரெஞ்சு வாத்தியார் பாரதியாரைக் கொஞ்ச நேரம் 'டிரில்' வாங்கிவிட்டார். கடைசியாக வாத்தியார் 'ரெடி' என்று சொல்லிக் 'காமிரா'வின் பொத்தானை அழுத்தும் சமயத்தில், பாரதியார் பளிச்சென்று தலையைத் தொங்கவிட்டுக் கொண்டார்,—அவ்வளவு 'டிரில்' வாங்கியதற்கு வஞ்சம் தீர்த்துக் கொண்டதுபோலே.

'என்ன? இப்படித் தலை குனிந்துகொண்டாரே?' என்று கேட்டார். நான் திகைத்து நின்றேன். பாரதியார் இதற்குள் மேற்சட்டையைக் கழற்றி அறையில் போட்டுவிட்டு, 'வாத்தியாரே! படம் நன்றாயிருக்குமா?' என்று சற்றுக் குறும்பாய்க் கேட்டார். வாத்தியார் நகைத்துக்

கொண்டே, 'சுவாமி! நீங்கள் தலையைக் கவிழ்ந்து கொண்டீர்களே, உங்கள் முகம்மட்டும் தெரியாது!' என்று பதில் சொன்னார்.

அப்பால் பாரதியார், தாம் படம் எடுக்க விரும்பவில்லை யென்று சொல்லி, அதற்குக் காரணத்தையும் சொல்லலானார். தமது உருவப்படம் ஒருவரிடமும் கிடையாதென்றும், யாராவது தம்மைப் 'போட்டோ' பிடித்துப் புதுவையில் இருந்துவரும் ஆங்கில இரகசியப் போலீஸாராகிய சி. ஐ. டி. களிடம் கொண்டுபோய்க் கொடுத்தால் நூறு அல்லது இருநூறு ரூபாய் சம்மானம் கிடைக்கும் என்றும், அதற்குச் சந்தேகம் இல்லை என்றும் சொன்னார். ஆனால் தாம் அந்த வாத்தியார் விஷயத்தில் யாதொரு விதமான சந்தேகமும் கொள்ளவில்லை யென்றும் உறுதிகூறினார்.

மேலும், பாரதியார் புன்னகை புரிந்த வண்ணம், 'இப்போது நீங்கள் படம் பிடிக்கக் கற்றுக் கொள்வதால், என் தலையை எப்படிப் படம் பிடிக்கிறீர் என்று பரீட்சித்துப் பார்க்க விரும்பினேன்' என்று வேடிக்கையாகச் சொன்னார். 'நாளை என் படத்தைக் கொண்டுவாரும்; அப்போது "நெகெடிவ்" கண்ணாடியையும் மறந்துவிடாமல் கொண்டு வரவேணும்!' என்று கடைசியாக வேண்டிக் கொண்டார்.

அன்று இரவே பிரெஞ்சு வாத்தியார் படத்தைக் கழுவி அதைப் பேப்பரில் எடுத்துக் கொண்டார். மறுநாள் மாலை நாலு மணிக்குப் படத்துடனும் 'நெகெடிவ்' கண்ணாடியுடனும் பாரதியார் வீட்டுக்கு வந்தார். படத்திலே பாரதியார் எவ்வளவு விநோதமாகக் காட்சி யளித்திருக்க வேண்டும் என்பதை வாசகர்களே ஊகித்துக் கொள்ளலாம்.

ஆம், நீங்கள் நினைக்கிறபடியே முகமில்லாத பாரதியார், தலையும் கறுப்புக் கோட்டும் வேட்டியுமாகத் தோற்றம் அளித்தார்! அந்த விநோதப் படத்தைப் பாரதியார் பிரெஞ்சு வாத்தியாரிடம் கொடுத்துவிட்டு, 'கெகெடிவ்' கண்ணாடியை உடைத்துவிட்டார்.

இந்த விநோத நிகழ்ச்சி எனக்கு இப்போது தான் நடப்பதுபோல் நன்றாக மனக்கண்முன் ஓடிவருகிறது. இது நடந்த காலத்திலே மகாத்மா காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்திவந்தார். அப்போராட்டத்திற்கு இந்தியா பணம் உதவிசெய்ய முன்வந்தது என்பதும், தமிழ்நாடு விசேஷ சிரத்தையுடன் பண உதவிசெய்ய முயன்றது என்பதும் இந்தியர்களின் வீர சுதந்திர யாத்திரையில் முக்கியமான மைல்—கல் ஆகும். புதுவையிலும் பணம் வசூலிக்க முயற்சி நடைபெற்றது. அம்முயற்சியில் பாரதியார் சிரத்தை கொண்டு, தகர உண்டியல் பெட்டிகள் செய்து என்னைப் போன்றவர்களிடம் கொடுத்துப் பணம் தண்டும்படி புதுச்சேரியில் மூலைக்கு மூலை அனுப்பி வைத்தார். அந்த முயற்சிகளுக்கிடையே நடந்த மேலே சொன்ன விநோத நிகழ்ச்சி என் மனத்தில் கல்லின்மேல் எழுத்தைப்போல் பதிந்துவிட்டது.

பாரதியாரின் குணாதிசயத்தை நன்றாக உணர்ந்து கொள்வதற்கும், இவரது புத்தி நுட்பத்தை உள்ளவாறு தெரிந்துகொள்வதற்கும் இந்நிகழ்ச்சியும் உபயோகமாகும் என்பது என் கருத்து. சிறந்த கவிஞரான பாரதியாருக்கு லௌகிக புத்தி நுட்பம் மிகக் குறைவு என்று கருதுவோர் உண்டு: அவர்கள் இத்தகைய சிறு நிகழ்ச்சிகளைச் சேர்த்துப் பார்த்துத் தங்கள் மனத்

தராசையும் பாரதியார் தராசுபோல் உபயோகித்து உண்மை காணவேண்டும்.

பாரதியாருக்குப் பிரெஞ்சு வாத்தியாரிடம் நம்பிக்கையும் அன்பும் அதிகரித்து வந்தன. அப்படியே அவருக்கும் இவருடைய புத்தி சாதுரியத்திலும் கவி சாதுரியத்திலும் ஈடுபாடு ஏற்பட்டது. அவரிடம் பாரதியார் பிரெஞ்சு சுதந்திர கீதம் கற்றுக் கொண்டதினால், அவரைப் 'பிரெஞ்சு வாத்தியார்' என்று வேடிக்கையாக அழைத்து வந்தார்; பிரெஞ்சு வாத்தியாரின் பெயர் அந்துவேன் அர்லோக் என்பதை முன்னமே குறிப்பிட்டிருக்கிறேன்.

பாரதியாருக்குப் பிரெஞ்சு சங்கீதத்தின்மீது அபாரமான பிரேமையுண்டு, அதிலும் 'லா-மர்ஸியேஸ்' என்ற பிரெஞ்சு தேசிய சுதந்திரப் பாடல் என்றால் ஒரே மோகம்தான். பாரதியாரும் 'பாப்பா' என்ற சகுந்தலை அம்மையும் பிரெஞ்சு சுதந்திரப் பாடலை அந்துவேன் அர்லோக்கிடம் கற்றுக் கொண்டார்கள். ஆரம்பப் பள்ளிக்கூட டைரக்டராயிருந்த நண்பர் புர்குவேன் என்ற பிரெஞ்சுத் துரையிடத்திலும் பாரதியார் பிரெஞ்சு கீதங்களைக் கற்றுவந்தார். எனினும் அந்துவேன் அர்லோக் மீது பாரதியாருக்குத் தனி அபிமானம் உண்டு.

பியானோ வாசிப்பதிலும், பிரெஞ்சுப் பாடல்களைப் போல் லத்தீன் பாடல்களைப் பாடுவதிலும் பிரெஞ்சு வாத்தியார் நல்ல பயிற்சியுள்ளவர். ஏற்கெனவே பாரதியார் கர்நாடக சங்கீதத்தில் அபார ஞானம் உள்ளவர்: பிரெஞ்சு வாத்தியாரின் கூட்டுறவினால் பாரதியாரின் சங்கீத ஞானம் ஒரு புதுமையும் விரிவும் பெற்றது.

பாரதியாரின் தூண்டுதலால் பிரெஞ்சு வாத்தியார், எவர் சிட்சையுமில்லாமல், தமது புத்தி சாதுரியமே துணையாக ஜலதரங்கம் வாசிக்கக் கற்றுக்கொண்டார். அவரைக்கொண்டு பாரதியார் இல்லத்தில் ஜலதரங்கக் கச்சேரி நடப்பதும் உண்டு. பிரெஞ்சு வாத்தியாரின் ஜலதரங்க வாசிப்பில் மகிழ்ந்துபோன பாரதியார் தமது பாராட்டுக்கு அறிகுறியாகத் தியாகையர் கீர்த்தனைப் புத்தகம் ஒன்றை வெகுமதியளித்தார்.

'லா-மர்ஸியேஸ்' சுதந்திர கீதத்தைப் பாரதியாரும் இவரது அருமைப் புதல்வி ஸ்ரீமதி சகுந்தலையும் வெகு அழகாய்ப் பாடப் பழகிவிட்டார்கள். 'என் காது செய்த தவம்' என்று பாரதியாரின் மற்றப் பாடல்களை இவர்கள் பாடக் கேட்டு அனுபவித்ததுபோல், பிரெஞ்சு சுதந்திர கீதத்தையும் இவர்கள் வாயிலாகக் கேட்டுக் கேட்டு அனுபவித்திருக்கிறேன்.

பாரதியார் 'லா-மர்ஸியேஸ்' கீதத்தைத் தனிமையாகப் பாடும்போது வலது காலைத் தரையில் வெகு ஆக்ரோஷத்துடன் உதைத்துக்கொண்டு, வீரச்சுவை சொட்டப் பாடுவார். அச்சமயம், வெளியே நின்று கேட்பவரின் செவிகளுக்கு ஒரு தமிழன் பாடுவது போலத் தோன்றாது, யாரோ ஓர் ஐரோப்பியன் அல்லது பிரெஞ்சுக்காரனே பாடுவது போலத் தோன்றும். பிரெஞ்சு மொழியின் உச்சரிப்பு அவ்வளவு தெளிவாகவும் சுத்தமாகவும் இருக்கும்.


பிரெஞ்சு சுதந்திர கீதத்தில் பாரதியாருக்கு ஏற்பட்ட ஈடுபாடு,

**ஜயமுண்டு, பயமில்லை மனமே !—இந்த**
**ஜன்மத்தி லேவிடு தலையுண்டு நிலையுண்டு**


என்று தொடங்கும் வீரத் திருப்பாடலைப் பாடும்படி பாரதியாரைத் தூண்டியது. பிரெஞ்சு சுதந்திர கீதம் போல் தமிழிலும் பாடல்கள் அமைக்கவேண்டும் என்று பாரதியார் ஆசைப்பட்டார். அந்த ஆசையின் ஒரு விளைவு, 'ஜயமுண்டு பயமில்லை மனமே!' என்ற பாட்டை இற்றியது மட்டுமல்ல, அதன் வாயிலாகக் கேட்பவர்களுக்கெல்லாம் இரத்தத்தில் வீரவெறி பரந்து பாயும்படி அதற்குப் பண் அமைத்ததும் ஆகும்.

பிரெஞ்சு சுதந்திர கீதத்தையும் அந்த வீர இசைநலத்தையும் பருகிப் பாரதியார் பாடும்போது தமிழர்களுக்கு எவ்வளவு உத்ஸாகம் ஏற்படுமோ, அவ்வளவு உத்ஸாகம் தமிழர் அல்லாதவருக்கும் ஏற்படும்படி 'ஜயமுண்டு பயமில்லை' என்ற பாட்டைப் பாடுவார்.

நவரஸங்களையும் நவநவமாக அமைத்துத் தமிழ்ப் பாடல்கள் இயற்றுவதில் பாரதியார் நிகரற்றவர் என்பது பிரசித்தம். வீரப் பாடல்களும் வீர ரஸமும் பாரதியாரின் சிறப்பியல்பு என்பதும் பிரசித்தம். ஆனால், வங்க நாட்டின் இசை வெள்ளத்தைப் பாரதி என்ற கவி மேகம் அள்ளிப் பருகித் தமிழர்களுக்கு உதவியிருப்பது போல், பிரெஞ்சு இசை வெள்ளத்தையும் அள்ளிப்பருகிப் பேருதவி புரிந்திருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடலாகாது.



புதுவை ஈசுவரன் தருமராஜா வீதியில் பாரதியார் வீடு




புதுவையில் 1912-ல் பாரதியார் 'சாதி வித்தியாசம்' பற்றிப் பிரசங்கம் செய்த இடம்

—பக்கம் 35 பார்க்கவும்




புதுவையில் சம்பா கோவில் என்று வழங்கும்
அர்ச். ஜன்மவிராக்கினி மாதாவின் ஆலயம்

—பக்கம் 78 பார்க்கவும்



சென்னை தக்ஷிணாமூர்த்தி மடம்

★



ஆசிரியர் திரு. கனகலிங்கம் அவர்களின் வீட்டு மாடி

## அத்தியாயம் 7

# இதயக்கோவிலில் ஹரிஜனப் பிரவேசம்

என் குருநாதரை நினைத்ததும் கால வெள்ளம் பின்னேக்கி ஓடுகிறது. என் மனத் தோணியைத் துழைந்துகொண்டே ஓரிடத்தில் கரையை எட்டிக் குதித்து அவர் கண் முன்னே நின்றுவிடுகிறேன். 'ஆறில் ஒரு பங்கு' என்ற சிறிய கதையை எழுதி ஹரிஜன முன்னேற்றத்தில் தமக்கிருந்த பேரன்பை விளக்கிக் காட்டிய பாரதியார், என்னைக் கண்டதுமே, தம் இதயக் கோவிலில் பிரவேசம் அளித்துவிடுகிருர்.

ஹரிஜனங்களுக்கு ஆலயப் பிரவேசம் அளித்துவரும் இன்றைய தமிழகத்திலும் இதயப் பிரவேசம் அளிக்கும் 'உயர் குலத்தினர்' மிகச் சிலரேயாவர். இப்படியிருக்க, அந்த நாளிலேயே பாரதியார் தம் இதயக்கோவிலில் ஹரிஜனங்களைத் தாராளமாகப் பிரவேசிக்கச் செய்து, அத்தகைய பிரவேசத்தைத் தேச சேவையின் முக்கிய அம்சமாகவும் கருதினர். இதைக்குறித்து மணிக்கணக்கில் பேசலாம், பக்கம் பக்கமாக எழுதித்தள்ளலாம் என்று என் இதயம் சொல்லுகிறது.

ஒருநாள் நான் பாரதியார் வீட்டுக்குச் சென்றிருந்தேன். என்னைக் கண்டதும் பாரதியார், "உனக்குத் தம்பலா வீடு தெரியுமா?" என்று கேட்டார். 'தெரியும்' என்றேன். 'அப்படியானல் அந்த

வீட்டுக்குப் போய்வருவோம்' என்ருர். நான் திடுக்கிட்டுப் போனேன். குருநாதர் இருந்தாற்போலிருந்து தோட்டி தம்பலா வீட்டுக்கு அழைக்கிருரே என்றும், அவர் இதயம் வருந்தலாகாதே என்றும் எண்ணிக்கொண்டே, 'சுவாமி, வாருங்கள், போய் வருவோம்!' என்று பதில் சொன்னேன்.

புதுச்சேரியில் தோட்டி சமூகத்திற்குத் தம்பலா தலைவராக விளங்கினுர். அவருடைய சொந்தப் பெயர் எனக்குத் தெரியாது. பொதுவாக ஜனங்கள் அழைக்கும் பெயர்தான் தம்பலா. அவர் சாராயக் கடை, கஞ்சாக் கடை இவைகளைக் குத்தகை எடுத்துப் பொருள் சம்பாதித்தவர். 1906-ம் ஆண்டில் நடைபெற்ற 'லெமேர்' தேர்தலில் அவர் வோட்டர்களைப் பயமுறுத்தியது பிரசித்தமான செய்தி. அக்காலத்தில் புதுவையில் தம்பலா என்ருல், அழுத பிள்ளை வாய் மூடும் என்பார்கள்.

புதுச்சேரி 'புல்வார்க்' பக்கத்தில் சுண்ணும்புக் காளவாய் என்ற இடத்தில் தமக்குச் சொந்தமான ஒரு பெரிய மாடி வீட்டில் தம்பலா வசித்து வந்தார். பாரதியாரும் நானும் அங்கே சென்றதும், அவ் வீட்டின் ஒட்டுத் திண்ணை ஒன்றில் பாரதியார் உட்கார்ந்துகொண்டார். வீடு தாழிட்டிருந்தது. கதவைத் தட்டச் சொன்ஞர். தட்டியதும் உள்ளே தம்பலாவின் மனைவி, 'என்ன செய்தி?' என்று கேட்டாள். 'தம்பலா எங்கே?' என்று நான் கேட்டதும், அவள், 'அவர் கழனி வேலையாகப் போயிருக்கிருர், வருகிற சமயம்தான்' என்ருள். அப்படி அவள் சொல்லி வாய் மூடுவதற்குள் தம்பலாவும் வந்து சேர்ந்தார்.

அவர் பாரதியாரைக் கண்டவுடன் வரவேற்றுத் தாழ்மையுடன் கும்பிடு போட்டு நின்ருர். கவிஞர்

தமக்கு எதிரேயிருந்த ஒட்டுத் திண்ணையில் தம்பலாவை உட்காரச் சொன்னார். பாரதியார் எவ்வளவோ வற்புறுத்தியும் அவர் கேளாமல் தோளில் போட்டிருந்த துண்டை விரித்துப்போட்டுத் தரையிலே உட்கார்ந்து கொண்டார். 'நான் யார் தெரியுமா?' என்று குருநாதர் கேட்டார். தம்பலா, 'தெரியுங்கோ! நீங்கள் சுதேசிங்கோ!' என்றார். 'அப்படியானால் நீர் பரதேசியா?' என்று பாரதியார் பளிச்சென்று கேட்டார். தம்பலா ஒன்றும் பதில் சொல்லாமல் இவரைப் பக்தியுடன் நோக்கிய வண்ணம் இருந்தார்.

கடைசியாகப் பாரதியார், 'உம்முடைய வீட்டில் வந்து உட்கார்ந்துகொண்டு உம்மிடம் இரண்டொரு வார்த்தையாவது பேசவேணும் என்ற அவா இருந்தது, இன்று பூர்த்தியாகிவிட்டது. நாங்கள் போய் வருகிறோம்' என்று எழுந்தார். அப்படிப் பிரிந்துவிட மனமில்லாதவர்போல் தம்பலாவும் எங்களுடன் கொஞ்ச தூரம் ரஸ்தா வரையில் வந்து, பாரதியாருக்கு நமஸ்காரம் செய்து விட்டுத் திரும்பினார்.

அப்போது பாரதியார் என்னை நோக்கி, "கனகலிங்கம்! தம்பலா நம்மிடம் எவ்வளவு நல்லவனாக நடந்துகொண்டான், பார்த்தாயா? தேர்தல் காலங்களில் ஜனங்களை அடிப்பதும் ஹிம்ஸிப்பதுமாய் இருந்தான் என்று கேள்விப்பட்டுத்தான் நான் இவனிடம் சிநேகம்செய்ய மனமில்லாமல் இருந்தேன்!' என்று சொன்னார்.

எந்தக் காரணத்தை முன்னிட்டும் சிலரை ஒதுக்கிவைப்பது தவறு என்று பாரதியார் கருதினார். கெட்ட பழக்க வழக்கங்கள் உள்ளவரானாலும் அவர்களோடு நல்லவர்கள் பழகுவார்களா

ளுல், அவர்களைத் திருத்த முடியும்; ஒதுக்கி வைப்பதோ, ஒடுக்கி வைப்பதோ, அவர்களுக்கும் கேடு, பிறருக்கும் கேடு என்பது பாரதியாரின் கொள்கை.

* * * *

பாரதியார் தமது அருமைத் திருமகள் சகுந்தலாவைப் 'பாப்பா' என்று செல்லமாகக் கூப்பிடுவது வழக்கம். இந்தக் குழந்தைக்காகத்தான் 'பாப்பாப் பாட்டு' என்ற அழகான குழந்தைப் பாடலை இவர் பாடியிருக்கிருர்.

'ஓடி விளையாடு பாப்பா!'

என்று ஆரம்பிக்கும் இந்தப் பாடலை இந்நாளில் அறியாத தமிழனும் உண்டோ? இப்பாட்டில் சகுந்தலா அம்மையாருக்கு 'வாழும் முறைமை" யைப் போதிக்கும் பாரதியார், வீரத்தையும் தேச பக்தியையும் வற்புறுத்துவதுபோல் சமூக ஸமதர்மத்தையும்,

சாதிகள் இல்லையடி பாப்பா!—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்

என்று அழுத்தமாக வற்புறுத்தி உபதேசித்திருக்கிருர்.

பாரதியாருக்கு, உபதேசம் வேறு, அனுஷ்டானம் வேறு என்றுதான் கிடையாதே: ஆகவே நானும் ஒரு நண்பரும்—பாரதியாருக்குப் பிரெஞ்சு கீதங்கள் கற்பித்த நண்பர்தான்—சகுந்தலாவை எங்கள் வீட்டுக்கு அடிக்கடி அழைத்துப்போவது வழக்கம். அப்போது இந்த அம்மையாருக்கு ஐந்து வயதுதானிருக்கும்.

நாங்கள் 'பாப்பா'வை வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போவதற்குமுன் பாரதியாரிடம் தகவல் கொடுப்போம். அவர் உடனே, 'செல்லம்மா!' என்று தம் மனைவியாரைக் கூப்பிடுவார். அந்த

அம்மையார் பின்கட்டில் இருந்தபடியே, ' அழைத்துக்கொண்டு போகட்டும்; தின்பதற்குக் கண்டதைக் கொடுக்க வேண்டாம் ' என்று சொல்வார்.

நாங்கள் சகுந்தலாவை அழைத்துக்கொண்டு போகும்போது எங்களை ரஸ்தாவில் காணும் இதர வகுப்பினரில் சிலர், 'ஐயோ! பிராம்மணக் குழந்தையை இவர்கள் கையைப் பிடித்துக் கூட்டிக் கொண்டு போகிறார்களே!' என்று முணுமுணுத்துக் கொண்டே எங்களை ஏற இறங்கப் பார்ப்பார்கள். அவர்கள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கும்.

அக்காலத்தில் புதுச்சேரி ஜாதி வித்தியாசம் பாராட்டுவதில் எந்த வைதிகப் பிரதேசத்திற்கும் சிறிதும் பின்வாங்கியதில்லை. ஆனால் கவியரசருக்குத்தான் இதைப்பற்றிக் கவலையே கிடையாதே! இவரது இதயக்கோவிலில்தான், ஜாதிபேதம், நிற பேதம், அந்தஸ்துபேதம் முதலான பேதம் ஒன்றும் இல்லாமல் யாரும் பிரவேசிக்கலாமே!

நாங்கள் அடிக்கடி சகுந்தலா அம்மையை வீட்டுக்கு அழைத்துப் போனதற்குக் காரணம், இவர் சிறு பிராயத்திலேயே பாரதியாரின் இரண்டு பாடல்களையும், ஒரு பிரெஞ்சு தேசீயப் பாடலையும் வெகு இனிமையாகப் பாடியதும், அதைக் கேட்டுக் கேட்டு ஆனந்திக்க நாங்கள் விரும்பியதும்தான். குறித்த பிரெஞ்சு தேசீயப் பாடல் ' லா-மர்ஸியேஸ் ' என்று தொடங்குவதுதான். மற்றப் பாடல்களில், 'காணி நிலம் வேண்டும்' என்று தொடங்குவதும், 'பாரத தேசம் என்று பெயர் சொல்லுவார்' என்று தொடங்குவதும் ஆகிய இரண்டு பாரதி-பாடல்களைத் தான் நான் இங்கே குறிப்பிடுகிறேன்.

* * * *

பாரதியாருக்கு ஜாதி வித்தியாசங்களை அடியோடு தொலைத்துவிட வேண்டும் என்ற புரட்சிகர

மான லட்சியம் அந்நாளிலேயே உண்டு. அரசியல் துறையில் மட்டுமல்ல, சமூகத் துறையிலும் இவர் பெரும் புரட்சிக்காரர்; வாய்ச்சொல் வீரரல்லர், செயல்-திறமை வாய்ந்த தீரர். ஆகவே இப்பெரியார் தம் வீட்டில் ஐந்து ஹரிஜன வாலிபர்களுக்கு விருந்து நடத்தினர் ஒரு சமயம். இன்றைக்குச் சுமார் முப்பத்து மூன்று வருஷங்களுக்கு முன் இந்த விருந்து நடைபெற்றது. 1914-ம் ஆண்டில் நடைபெற்ற முதலாவது உலக மகாயுத்தத்திற்குக் கட்டாயச் சேவகமாய்ப் புதுவையிலிருந்து ஐந்து பிரெஞ்சு இந்திய வாலிபர்கள் அனுப்பப்பட்டார்கள். இவர்களில் ஒருவர் பாரதியாருக்குப் பிரெஞ்சு தேசிய கீதங்களைக் கற்றுக் கொடுத்த அந்துவேன் அர்லோக். ஜேம்ஸ் ஸாமுவேல் என்ற வேறொரு வாலிபர் பாரதியார் பாடும் சமயங்களில் பிடில் வாசிப்பவர். இவர்களை உள்ளிட்ட ஐவருக்கும் பாரதியார் தாம் வசித்துவந்த ஈசுவரன் தருமராஜா வீதி இல்லத்தில் விருந்து நடத்தியது அந்நாளில் அவ்வூரில் எத்தகைய வீரதீரப் புரட்சிச் செயலாக இருந்திருக்க வேண்டும் என்பதை இந் நாளில் உணர்ந்து கொள்வது எளிதன்று.

நாள் தவறாமல் பாரதியார் வீட்டுக்குப் போய் வருவதை வழக்கமாய்க் கொண்டிருந்த நான் அன்றும் அங்கே போயிருந்தேன். எதிர்பார்த்தபடி ஐந்து ஹரிஜன விருந்தினர்களும் பாரதியாரை மகிழ்ச்சியுடன் நமஸ்கரிக்க, இவர் மிக்க மகிழ்ச்சியுடன் அவர்களை வரவேற்றார். எல்லாரும் வீட்டுக் கூடத்தில் அமர்ந்தார்கள். பாரதியாரின் மனைவியார் ஸ்ரீமதி செல்லம்மாள் டம்ளர்களில் தண்ணீர் கொண்டுவந்து வைக்க, எல்லோரும் கை அலம்பிக் கொண்டு, பாரதியார் மத்தியிலும், மற்ற ஐவரும் இடதுபக்கமும் வலது பக்கமுமாக அமர்ந்தார்கள்.

அம்மையார் எல்லாருக்கும் இலை போட்டுப் பரிமாறி விட்டுப் பின்கட்டுக்குப் போய்விட்டார்.

எல்லாரும் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது ஜேம்ஸ் ஸாமுவேல், டம்ளரைத் தூக்கிக் குடிக்கும் பழக்கம் இல்லாததால், மார்பிலும் கழுத்திலும் தண்ணீரை ஊற்றிக்கொண்டார். அது மற்றவர்களுக்கு வேடிக்கையாக இருந்தது. பாரதியாரோ அனுதாபத்துடன், 'ஸாமுவேல்! ஏன் தூக்கிச் சாப்பிட்டீர்? அச்சமின்றி வழக்கம்போல் பருகலாமே!' என்றார். அந்த அன்புச் சொல் எங்களை உருக்கிவிட்டது.

எல்லாரும் சாப்பிட்டு எழுந்திருக்கும்போது அந்துவேன் அர்லோக், சாப்பிட்ட இலையைக் கையில் எடுத்தார். உடனே குருநாதர், 'யாரும் இலையைத் தொடவேண்டாம்!' என்று சொல்லி, 'செல்லம்மா!' என்று கூப்பிட்டு, 'இலைகளை எடும்!' என்றார். அம்மையார் ஒருவித வெறுப்பும் இல்லாமல் அப்படியே செய்தார்.

ஜாதி கர்வமும் தீண்டாமையும் தலைவிரித்துப் பேயாட்டம் ஆடிய அந்நாளில் பாரதியார் இப்படியெல்லாம் ஹரிஜனங்களுக்குத் தமது இல்லத்தில் மட்டுமல்ல, இதயக் கோவிலிலும் பிரவேசம் அளித்து அன்பு - விருந்து செய்தார்.

## அத்தியாயம் 8

# பாரதியாரின் ஸமதர்மம்

முன்னே குறிப்பிட்டபடி ஐவரும் விருந்து அருந்தியபின் கூடத்தில் பாரதியாருடன் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக்கொண்டிருந்தனர். வயிற்றுக்கு விருந்து அளித்த பாரதியார் அவர்களுடைய உள்ளத்திற்கும் ஒரு விருந்து அளித்தார். (நான் அவர்களைப் போல் போருக்குப் புறப்படாததால் செவி-விருந்தில் மட்டும் பங்கு கொண்டேன்.)

பாரதியார் விருந்ினர்களை நோக்கிச் செய்த உபதேசத்தின் ஸாரம்தான் எனக்கு இப்போது ஞாபகம் வருகிறது.

> பொன்போல் குரலும்,
> புதுமின்போல் வார்த்தைகளும்

என்று 'குயில் பாட்'டில் பாரதியார் பாடியிருக்கிறார் அல்லவா? மின்னல்கள் போல் அப்படிப் பளிச்சுப் பளிச்சென்று வந்தன வார்த்தைகள், தங்கமான குரலிலே. அந்தத் தோரணையையாவது, குரலையாவது, வார்த்தைகளையாவது நான் இங்கே காட்ட முடியாது. ஆனால் அந்தக் கருத்தைக் குறைவில்லாமல் ஒருவாறு வெளியிடுகிறேன்.

அந்த விருந்தினரைப் போன்றவர்களெல்லாம் சாதாரணமாகத் தங்கள் சொந்தப் பெயர்களோடு பிரெஞ்சுப் பெயர்களையும் சேர்த்துத்தான் புதுச்

சேரியில் பெயர்ப் பதிவு செய்துகொள்வார்கள். உதாரணமாக, ஸ்ரீ. திருவேங்கடம் என்பவர் திருவேங்கடம் வெர்னியே என்று பெயர்ப் பதிவு செய்வார். சொந்தப் பெயர்களுடன் வெர்னியே, அர்லோக், ஸெழான் போன்ற பிரெஞ்சுப் பெயர்களையும் இணைத்துக் கொள்வார்கள், கிறிஸ்தவர்களும் சரி, இந்துக்களும் சரி. இரண்டு பெயர்களில் புதிதாக வைத்த பிரெஞ்சுப் பெயர்தான் வழங்கும். ஸ்ரீ. திருவேங்கடம் வெர்னியே என்பவரை 'மிஸ்டர் வெர்னியே!' என்பர். இது குடும்பப் பெயராகவும் அமைந்துவிடும். ஆகவே, பிற்காலச் சந்ததிகளுக்கும் இப்பெயர்களே முன் நிற்கும். இப்படிக் கூடுதலாக வைக்கும் பிரெஞ்சுப் பெயர்களுக்குப் பதில், ஹரிஜன வாலிபர்கள், 'ஐயர்,' 'ஐயங்கார்,' 'செட்டியார்,' 'முதலியார்,' 'நாயுடு' என்ற ஜாதிப் பெயர்களைத் தங்கள் இஷ்டப்படி வைத்துக்கொள்வது நலம் என்று கவிஞர் உபதேசம் செய்தார்.

அப்படியானல், 'மிஸ்டர் ஐயர்' என்றோ, 'மிஸ்டர் முதலியார்' என்றோ, 'மிஸ்டர் செட்டியார்' என்றோ, 'மிஸ்டர் நாயுடு' என்றோ, ஹரிஜனங்களையும் கூப்பிட நேரிடும் என்று கவிஞர் யுக்தி சொன்னர். அடுத்தபடியாக இவர்களுடைய மனைவியரும் 'மேடம் ஐயர்', 'மேடம் ஐயங்கார்' 'மேடம் செட்டியார்' என்றெல்லாம் அழைக்கப் பெறுவர். இப்படியாக ஹரிஜன வாலிபர்கள் பெயர் வைத்துக்கொள்ள ஆரம்பித்துவிட்டால், நாளடைவில் 'ஐயர்,' ஐயங்கார்,' செட்டியார்,' 'முதலியார்,' 'நாயுடுகாரு' முதலான ஜாதிப் பெயர்களின் தனிக் கௌரவம் பறந்துபோகும் என்ருர் பாரதியார்.

'என்ன விநோதமான ஆலோசனை!' என்று வாசகர்கள் எண்ணக்கூடும். அதே சமயத்தில்,

'அடடா, என்ன புரட்சிகரமான ஆலோசனை!' என்றும் தோன்றுகிறதல்லவா? பாரதியார் உள்ளும் புறமும் புரட்சிமயமாகவே இருந்தார். புரட்சியென்றால் புரட்சிதான், புரட்டு அன்று!

இந்த உபதேசத்திற்குப்பின், இரண்டு தினங்களுக்கு அப்பால், பிரெஞ்சுப் போர்க்களத்தை நோக்கிப் புறப்பட இருந்த அந்த ஹரிஜன வாலிப விருந்தினர்களைப் பாரதியார் தமது வீரத் திருவிழிப் பார்வையால் குளிரக் கடாட்சித்தார். இடையூறு ஒன்றும் ஏற்படாமல் அவர்கள் வெற்றியுடன் தாய் நாடு திரும்பவேண்டும் என்று அன்னை பராசக்தியைத் தியானித்து ரட்சையாக விபூதி கொடுப்பதாய்ச் சொல்லி, அதை அவர்கள் பத்திரமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்றார்.

பிறகு கூடத்தில் மாட்டியிருந்த காளி தேவியின் படத்தின்முன் போய் நின்றுகொண்டு,

காளி! வலிய சாமுண்டீ!
ஓங்காரத் தலைவி! என் ராணி!

என்று கூவி அந்தப் பாடலை வெகு உருக்கமாகப் பாடினார். 'இந்துக்களாயிருந்தாலும் சரி, கிறிஸ்தவர்களாயிருந்தாலும் சரி' என்று மதவேற்றுமை பாராட்டாமல் அவர்கள் தலையில் திருநீறு போட்டு நெற்றியிலும் இட்டுக்கொள்ளச் செய்தார். அந்த ஐவரில் நால்வர் கிறிஸ்தவர்; ஜகதீசன் ஸெழான் என்ற ஒருவரே இந்து. எனினும், அந்த ஐவரும் பாரதியார்மீது கொண்டிருந்த பக்திப் பெருக்கினால் விபூதிப் பிரசாதத்தைப் பயபக்தியுடன் வாங்கிப் பூசிக்கொண்டார்கள். கடைசியாக எல்லாரும் பணிவுடன் கவிஞர்பெருமானை நமஸ்கரித்து விடைபெற்று வீடு சென்றார்கள். நானும் அவர்களுடன் சென்றேன்.

அந்தக் காட்சி இன்றும் என் கருத்தைவிட்டு அகலவில்லை, கண்ணைவிட்டும் அகலவில்லை. போர்க்களத்தை நோக்கிச் சென்ற அந்த ஐவரும் க்ஷேமமாக 1918-ம் ஆண்டில் பிரான்ஸிலிருந்து புதுவைக்குத் திரும்பி வந்தார்கள். அங்க ஈனர்களாக வரவில்லை, திடசரீரத்துடன் வந்தார்கள். புதுவை வந்ததுதான் தாமதம், பாரதியாரைப் போய்க் கண்டு நமஸ்கரித்து ஆனந்தமடைந்தார்கள்.

சிலர், 'மூடநம்பிக்கை' என்று சொல்லலாம்; பலரும், 'ஏதோ தெய்வச் செயல்' என்று கருதலாம். ஆனால் பாரதியார் மனமுவந்து உருகிக் கொடுத்த விபூதிப் பிரசாதத்தின் மகிமையும், இவர் குழந்தையுள்ளத்துடன் போற்றிய தேவி பராசக்தியின் திருவருளும் அவர்களுக்கு அரிய ரட்சையாக அமைந்து, ஒரு குறையும் இல்லாமல் அவர்களைக் கொண்டுவந்து சேர்த்தன என்பது என் நம்பிக்கை.

இவ்வளவு பக்தி சிரத்தையுடனும், பிரார்த்தனை-உள்ளத்துடனும், ஆத்மசக்தியுடனும் ஜாதி பேதங்களைப் போக்கடிக்க முயன்ற பாரதியார் புதுவையில் மேலும் பல ஆண்டுகள் தங்கியிருந்தால், புதுவையானது ஜாதிப் பேயை ஒழித்து ஒரு புதிய ஸமதர்மத்தை நிலைநாட்டித் தமிழகத்திற்கே வழிகாட்டியாகத் திகழ்ந்திருக்கும் என்று நான் பல சமயங்களில் எண்ணுவதுண்டு. சமய உணர்ச்சியைக் கொண்டே, பக்தியாகிய சக்தி-ஆயுதத்தைச் சுழற்றிக்கொண்டே, வேற்றுமை உணர்ச்சிகளை வெட்டிக் களைந்து, ஸமதர்ம விதையை ஆழமாக விதைத்துச் சிறந்த நற்பயனை விளைவித்துக் கொள்ளலாம் என்பது பாரதியார் கனவு.

பாரதியாருக்குச் சமய உணர்ச்சியென்றால் 'காளி வழிபாடு'தான் என்பதில்லை. காளியும்,

கண்ணனும், முருகனும், கிறிஸ்துவும், அல்லாவும் ஒன்றே—இவருக்கு எம்மதமும் சம்மதமே.

புதுச்சேரியில் சம்பா கோவில் என்று அழைக்கப்பெறும் ஜன்ம விராக்கினி மாதாவின் ஆலயத்தில் ஈஸ்டர் பண்டிகை மிகச் சிறப்பாய்க் கொண்டாடப்படுகிறது. இதைத் தமிழ்நாட்டுக் கத்தோலிக் மதத்தினர் நன்கு அறிவர். இப்பண்டிகை விழாவில் பாரதியார் யாதொரு வேற்றுமை உணர்ச்சியும் இன்றி இம் மாதாகோவிலுக்குப் போவார்; மனைவியாரையும் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு போவார். வேடிக்கை பார்க்க அன்று, பக்தியுடனே போய்வருவதுண்டு.

சுமார் ஐந்து ஆண்டுகளுக்குமுன்—1942-ம் வருஷம் என்று ஞாபகம்—பாரதியாரின் அருமைத் திருமகள் 'பாப்பா' என்ற ஸ்ரீமதி சகுந்தலை அம்மையார் சென்னைத் தியாகராயநகரில் வசித்து வந்தார். நான் அவ்வம்மையாரைக் காணச் சென்றேன். அப்போது அவர் மாதாகோவிலைக் குறித்தும், அங்கே நடைபெறும் ஈஸ்டர் பண்டிகையைக் குறித்தும் ஆவலாக விசாரித்தார். 'அப்பா எங்களையெல்லாம் அந்தப் பண்டிகைக்குக் கூட்டிக் கொண்டு போவாரே, அது இன்னும் என் ஞாபகத்தில் இருந்துவருகிறது' என்றார். பாரதியாரின் ஸமதர்மம் ஜாதிபேதங்களையும் சமயபேதங்களையும் ஒருங்கே கடந்த சமரஸ சன்மார்க்கமாகும்.

ஒரு தேநீர்க் கடை. 'காக்கா' என்னும் முஸ்லிம் அதற்கு முதலாளி. புதுச்சேரிக் கடைவீதியில் இருந்த அக்கடையில் பாரதியார் தேநீர் அருந்துவார். ஏதோ இரகசியமாய்ப் போய்ச் சாப்பிட்டார் என்பதும் இல்லை!

நண்பர்கள் சூழக் கடைக்கு எதிரே தெருவில் நிற்பார். 'காக்கா' டீ தயாரித்துக் கொண்டுவந்து கொடுப்பார் ஒரு கண்ணாடி டம்ளரில். பாரதியார் டம்ளரை வாங்கி முகத்திற்கு நேரே தூக்கிப் பிடித்துக்கொள்வார்—எல்லாரும் பார்க்கட்டும் என்றுதான். அப்போது பார்க்கவேணும் அங்கே சில முகங்களை—அவைகளில் எத்தனை கோணல்கள் விழும்! பாரதியாரோ ரஸித்துப் பருகுவார்.

இது பாரதி கண்ட ஸமதர்மம். முஸல்மான் என்றும், கிறிஸ்தவன் என்றும், இந்து என்றும், பிராம்மணன் என்றும், ஹரிஜனன் என்றும் சிறிதும் வேற்றுமை பாராட்டாமல், எல்லாச் சமயங்களிலுமுள்ள ஸாரமான உண்மை கண்டு,

ஒன்றே குலமும்,
ஒருவனே தேவனும்

என்ற திருமூலர் கொள்கையை அப்படியே அனுபவித்து அனுஷ்டித்துக் காட்டிய இந்த ஸமதர்மம் தமிழ் நாட்டுக்கு விசேஷமாக உரியது.

பழைய காலத்திலே தமிழ் நாட்டில் உதித்த ஸமதர்மக் கொள்கைக்குப் பாரதியார் புத்துயிர் அளித்தார். இது இவரது கவிதைக்குப் புதியதோர் ஒளியையும், உயிரையும், அழகையும் அளித்திருக்கிறது. இவருக்குத்தான் வாழ்க்கை வேறு, கவிதை வேறு என்பதில்லையே—வாழ்க்கையே கவிதை, கவிதையே வாழ்க்கை அல்லவா?

## அத்தியாயம் 9

# நிகழ்ச்சிக் கதம்பம்

### 'பொன்வால் நரி'

பாரதியார் புதுவையிலிருந்த காலத்தில் 'பொன்வால் நரி' என்ற சிறு ஆங்கிலப் புத்தக மொன்றை வெளியிட்டார். அந்தப் புத்தகத்தில் சுமார் நூறு பிரதிகளை ஒரு கட்டாகக் கட்டி அந்தக் கட்டை ரயில்வே பார்ஸலில் அனுப்பி வரும்படி அதற்கு உரிய செலவையும் கொடுத்து என்னை அனுப்பிவைத்தார்.

நான் புத்தகக் கட்டுடன் கொஞ்ச தூரம் சென்றதும், பாரதியார் மறுபடியும் என்னை வீட்டுக்குள்ளே கூப்பிட்டு, 'நீ ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்றதும்...' என்று ஏதோ சொல்ல வாயெடுத்தார். (அவர், 'நீராவி ஊர்தி நிலையம்' என்றெல்லாம் கடுந்தமிழில் பேசமாட்டார். செந்தமிழ், கொச்சைக் கொடுந் தமிழாக இருக்கக் கூடாது; ஆனால் பற்களை உடைக்கும் கடுந் தமிழாகவோ, விளங்காத கருந் தமிழாகவோ இருக்க வேண்டியதில்லை; பேச்சை ஒட்டிய, இலக்கணப் பிழை இல்லாத, பச்சைப் பசுந் தமிழாக விளங்கவேண்டும் என்பது பாரதியார் அபிப்பிராயம்.) 'முதலில் சுங்க அதிகாரிகளிடம் கட்டை அவிழ்த்துப் புத்தகங்களைக் காட்டவேண்டி யிருக்கும்; காட்டியபின் பார்ஸல் ஆபீஸில் "புக்" பண்ணவேண்டும், தெரிந்ததா?' என்றார்.

இப்படிச் சொல்லிவிட்டு, 'இதோ இந்த இரண்டு பிரதிகளையும் கையில் வைத்துக்கொள், கஸ்டம்ஸ் அதிகாரிகள் புத்தகம் வேண்டுமென்றால், அவர்களிடம் ஒரு பிரதி கொடுக்கலாம்; பிரிட்டிஷ் இரகசியப் போலீஸார் அங்கே திரிந்துகொண்டிருப்பார்கள், அவர்கள் கேட்டாலும் மற்றப் பிரதியைக் கொடுத்துவிடலாம்' என்றார்.

பாரதியார் சொன்னபடியே கஸ்டம்ஸ் அதிகாரிகளிடம் புத்தகக் கட்டைப் பிரித்துக் காட்டிக் கொண்டிருக்கும் சமயத்தில், இரகசியப் போலீஸாரின் கழுகுக் கண்கள் என் பின்புறமாகக் கூர்ந்து நோக்கிக்கொண்டிருந்ததை அறிந்து கொண்டேன். உடனே சி. ஐ. டி. அதிகாரிக்கு ஒரு பிரதி கொடுத்துவிட்டு, என் கையிலிருந்த மறு பிரதியைச் சுங்க அதிகாரியிடம் நீட்டினேன்.

சுங்க அதிகாரி பார்ஸல் செய்ய அனுமதித்தார். ஆனால் சி.ஐ.டி. அதிகாரி, உடனே பார்ஸல் செய்யவிடாமல், புத்தகக் கட்டின்மேல் எழுதியிருந்த விலாசத்தைச் சட்டைப் பையில் வைத்திருந்த டயரியில் ஜாக்கிரதையாகக் குறித்துக்கொண்டார்.

விலாசதார், காலம் சென்ற சென்னை டாக்டர் டி. எம். நாயர்தான். அந்நாளில் டாக்டர் நாயர் தேசீயவாதியாகவே இருந்தார்—சமூகச் சீர்திருத்தத்தில் பெருவிருப்பமுள்ள தேசீயவாதி. பின்னாளில் எங்கும் வகுப்புப் பூசல்களைச் சண்டமாருதமாய்க் கிளப்பிவிட்டுத் தமிழ் நாட்டை ஒரு கலக்குக் கலக்கிவிட்ட டாக்டர் நாயர் அல்லர் அக்காலத்து டாக்டர் நாயர். பாரதியாரும், சமூகப் புரட்சி அரசியல் புரட்சிக்கு இன்றியமையாதது என்று கருதியதால் டாக்டர் நாயரிடம் அபிமானமுள்ளவராக இருந்தார்.

அநாவசியமாகத் தாமதம் செய்த பின்னர் இரகசியப் போலீஸார் 'பொன்வால் நரி' யைச் சென்னை டாக்டர் நாயர் இல்லத்திற்கு அனுப்பி வைக்க அனுமதித்தார்கள். நான் திரும்பிச் சென்று குருநாதர் சொன்னபடியே பார்ஸல் செய்து வந்ததைத் தெரிவித்தேன்.

## தர்மாவேசம்

ஒரு சமயம் பாரதியார் என்னை ஸ்ரீ. சுந்தரேசய்யர் என்ற தமது பிராம்மண நண்பர் வீட்டுக்கு வந்து தம்மைச் சந்திக்கும்படி சொல்லியிருந்தார். நான் அங்கே சென்றதும், வீட்டுக்குள் புகுந்து விடாமல் தெருவில் நின்றுகொண்டே மேல்மாடியை நோக்கி, 'சுவாமி!' என்று உரத்த குரலில் கூப்பிட்டேன். 'உள்ளே வா!' என்று பாரதியார் சத்தம் கொடுத்தார். அந்நாளில் புதுவை ஜாதி பேத உணர்ச்சிக்கு ஒரு நிலைக்களமாக இருந்ததால், பாரதியார் கூப்பிட்டும் நான் உள்ளே நுழைந்து விடவில்லை.

பாரதியார் மேல்மாடத்திற்கு முன்புறமாக வந்து நின்றுகொண்டு, 'உள்ளே வா!' என்று சற்றுக் கோபமாய்க் கர்ஜித்தார். அப்பால் தயங்காமல் நான் மேடைக்குப் போய்ச் சேர்ந்தேன். அங்கே வீட்டின் சொந்தக்காரரும், வேறு மூன்று பிராம்மணர்களும் இருந்தார்கள். பாரதியார் என்னைக் கண்டதும், 'இன்றுமுதல் நான் எந்த இடத்தில் இருக்கிறேனோ, அந்த இடத்தில் தீண்டாமைப் பிணி இருக்கவே இருக்க முடியாது!' என்று ஆவேசத்துடன் கூறினார். உடன் இருந்த மற்றப் பிராம்மணர்களின் முகக்குறியும் பாரதியாரின் வார்த்தையை ஆதரித்ததாகவே மலர்ச்சி பெற்றது.

பாரதியார் ஆனந்தமாகப் பாடுவதைக் கேட்டுக் கேட்டு எத்தனையோ தடவை மெய்சிலிர்த்துப் பரவசமா யிருக்கிறேன். அன்று பாரதியாரின் தர்மாவேசமும், 'பாரதி இருக்கும் இடத்தில் தீண்டாமை எப்படி இருக்க முடியும்?' என்று பொருள் படப் பேசிய வீரதோரணையும் எனக்கு ஒரு புதிய அனுபவமாக இருந்தன. ஆம், உண்மைதானே! 'ராமன் இருக்குமிடம் அயோத்தி என்பதுபோலப் பாரதி இருக்குமிடம் ஸமதர்ம பூமிதான்!' என்பதை நான் மறந்ததுதான் பிசகு என்று உணர்ந்துகொண்டேன்.

## ஸமதர்மக் கச்சேரி

பிறகு பாரதியார் என்னிடம் அன்று மாலை ஆறு மணிக்குமேல் ஸ்ரீ. சங்கரச் செட்டியார் வீட்டில் ஒரு வீணைக்கச்சேரி நடைபெறப் போவதாகவும், அதற்கு அந்துவேன் அர்லோக் என்ற பிரெஞ்சு வாத்தியார் முதலான ஹரிஜன நண்பர்களையும் அழைத்துக்கொண்டு வரவேண்டும் என்பதாகவும் சொன்னார். ஸ்ரீ. சங்கரச் செட்டியாரும் பாரதியாரும் பழைய புதுவை நண்பர்கள். பாரதியாரை அடிக்கடி செட்டியார் வீட்டில் காணலாம்.

குறித்த நேரத்தில் நான் நான்கு ஹரிஜன நண்பர்களுடன் கச்சேரிக்குப் போனேன். பாரதியார் எங்களை இதர வகுப்பாருடன் சமத்துவமாக உட்காரவைத்துத் தாமும் எங்களுக்குப் பக்கத்திலேயே உட்கார்ந்துகொண்டார். அப்போது அங்கிருந்த பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் பலரும் எங்களைக் கூர்மையாகப் பார்த்துத் தங்களுக்குள்ளே ஏதேதோ முணுமுணுத்துக் கொண்டனர். பாரதியார் அதைக் கண்டும் காணாதது போல் அலட்சியமாகவும் கம்பீரமாகவும் வீற்

றிருந்து வீணைகானத்தைப் பருகிக்கொண்டிருந்தார். வேற்றுமை யுணர்ச்சி கொண்டவர்களுடைய இதயத்திலோ, வெறுப்பும் பொறாமையும் நிறைந்து வீணைகானத்தை ஆனந்தமாக அநுபவிக்க முடியாமல் செய்திருக்கவேண்டும்.

கச்சேரி முடிந்தபின், ஸ்ரீ சங்கரச் செட்டியார் சிரித்துக்கொண்டே பாரதியாரை நோக்கி, 'பாரதி கண்ட பசங்களையெல்லாம் கச்சேரிக்குக் கூட்டிக்கொண்டு வந்துவிட்டதாகவும், அது நியாயமில்லையென்றும் சிலர் என்னிடம் புகார் செய்துகொண்டார்கள்; நான் அதைக் காதில் போட்டுக்கொள்ளவேயில்லை!' என்றார்.

## மௌன விரதம்

1913-ம் ஆண்டில் டிஸம்பர் 24-ம் தேதி, அதாவது கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு முந்தினநாள், என் வீட்டுக்கு அருகில் வசித்த ஹரிஜனக் கிறிஸ்தவ வாலிபர்கள் தாங்கள் பஜனை செய்வதற்காகப் பாரதியாரிடமிருந்து ஹார்மோனியப் பெட்டி வாங்கிக்கொண்டு வரவேண்டுமென்று என்னிடம் சொன்னார்கள். அப்போது பாரதியார் ஈசுவரன் தர்மராஜா கோவில் தெருவில் தாம் முன்பு வசித்த 'விளக்கெண்ணெய்ச் செட்டியார்' வீட்டுக்கு எதிர் வீட்டில் குடியிருந்து வந்தார். வீடு தாழிட்டிருந்ததால். 'சுவாமி!' என்று உரக்கக் கூப்பிட்டேன். பாரதியார் மேடை ஜன்னலைத் திறந்துகொண்டு, மனைவி செல்லம்மா அம்மையார், புதல்வி சகுந்தலை அம்மாள், தங்கம்மாள் ஆகிய இவர்களுக்கிடையே காட்சியளித்தார். அப்போது பதில் பேசாமலே ஏதோ கைஜாடை காண்பித்தார். ஸ்ரீ. செல்லம்மாள் சகுந்தலை அம்மையுடன் மாடியிலிருந்து இறங்கிவந்து வெளிக்கதவைத் திறந்து ஹார்

மோனியப் பெட்டியைத் திண்ணையில் வைத்தார். நான் அதை எடுத்துக்கொண்டு சென்றேன்.

அன்று பாரதியார் வழக்கம்போல் என்னிடம் பேசாதது அதிசயமாகவே இருந்தது. பஜனை முடிந்ததும் ஹார்மோனியப் பெட்டியைத் திருப்பிக் கொடுக்கப் போனேன். பாரதியார் மேல்மாடியில் படுத்திருந்தார்; தலையைமட்டும் அசைத்து விட்டு, ஆழ்ந்த சிந்தனையிலிருந்தார். எனக்கு ஆச்சரியம் அதிகரித்தது. ஒரு மணி நேரம் அங்கே உட்கார்ந்திருந்தேன். பாரதியார் பேசவேயில்லை. அப்பால், 'சுவாமி, போய் வருகிறேன்' என்று சொல்லிப் புறப்படும்போதும் பாரதியார் ஒன்றும் பேசாமலே தலையை அசைத்தார்.

அப்போதும் எதார்த்த நிலையைக் கண்டு கொள்ள முடியாமல் நான் மாடியைவிட்டு இறங்கினேன். சகுந்தலை அம்மையைக் கண்டு, 'என்ன, பாப்பா! அப்பா என்னிடம் பேசவே இல்லையே!' என்று கேட்டேன். அதற்கு அந்த அம்மாள், 'அப்பா மௌன அப்பியாசம் செய்கிறார். நாளைய தினம் வாரும், நன்றாய்ப் பேசுவார்!' என்று பதில் சொன்னார்.

## கவிஞர் குறிகாரர்!

இந்தோ-சைனாவிலிருந்து ரஜாவின் பேரில் வந்த பிரெஞ்சு வாத்தியாரின் உறவினரில் ஒருவரான ரோக் என்பவர் வியாதியாகப் படுத்த படுக்கையில் இருந்தார். ஆயுர்வேத முறையிலும் நவீன வைத்திய முறையிலும் சிகிச்சை செய்து பார்த்தும், நோயைக் குறித்து விசேஷமாக ஒன்றும் புரியவில்லை. பாரதியார் காளிபூஜை செய்து வந்ததால், அந்த மகிமையை முன்னிட்டு ஒருவேளை இந்த

நோயைக் குணப்படுத்தக் கூடும் என்று பிரெஞ்சு வாத்தியாரும் நானும் பாரதியார் வீட்டுக்குப் போனோம்.

வாத்தியார் விஷயத்தைச் சொன்னதும், பாரதியார் ஒரு பதிலும் சொல்லாமலே, கறுப்புக் கோட்டை மாட்டிக்கொண்டு எங்களுடன் புறப்பட்டார். கட்டிலில் படுத்திருந்த நோயாளியின் வலது கையை அந்நோயாளியின் தலைமேல் நீட்டி வைத்துக்கொண்டு கவிஞர் தம் கண்களை மூடிக் கொண்டார். சிறிது தியானத்தில் ஆழ்ந்திருந்த பின், என்னையும் பிரெஞ்சு வாத்தியாரையும் நோக்கி, 'வாருங்கள், போகலாம்' என்றார்.

நாங்கள் மூவரும் அந்த வீட்டுக்கு வெளியே வந்ததும், பாரதியார் பிரெஞ்சு வாத்தியாரைப் பார்த்து, 'கவலைப்பட வேண்டாம்!' என்றார். ஆனால் அதைத் தொடர்ந்து, 'இன்னும் இரண்டு மணி நேரத்திற்குள் அவர் காலமாகிவிடுவார்!' என்றார். அது கேட்ட பிரெஞ்சு வாத்தியார் மனம் கலங்கிக் கண்ணீர் வடித்தார். 'மனதைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள்' என்றார் என் குரு.

பாரதியாருடன் வீடுவரையில் போய் நாங்கள் திரும்பிவருவதற்குள் நோயாளி இறந்துவிட்டார். வைத்தியர்களும் அவ்வளவு நிச்சயமாகச் சொல்லாமல் இருந்தபோது, கவிஞர் நடக்கப் போகிறதை முன்கூட்டி அறிந்து அப்படியே குறி சொன்னது போல் எங்களிடம் தெரிவித்தது எனக்கு இன்றும் ஆச்சரியமாகவே இருக்கிறது.

உண்மைக் கவிஞர்களெல்லாம் ஒருவகையில் குறிகாரர்களே என்று யாரோ சொல்லக் கேட்டிருக்கிறேன். உண்மையான குறிகாரருக்கு, 'சொல்லு, சொல்லு!' என்று உதடும் நாக்கும் துடிக்

குமாம். அப்படித் துடித்துப் பேசியது போல் அன்று பாரதியார் அந்தக் குறி சொன்னார். இவர் கவி பாடுவதும் ஏறக்குறைய இப்படித்தானே!

* * *

மற்றொரு நிகழ்ச்சியும் என் ஞாபகத்திற்கு வருகிறது. புதுவைக் கவர்னர் பங்களாவில் ராசு கொலோந்தோம் என்ற ஹரிஜனக் கத்தோலிக் கிறிஸ்தவர் ஒருவர் துவிபாஷியாக இருந்து வந்தார். கறுப்பு நிறமும், நல்ல தேகக் கட்டு முடையவர். தலையில் நாவற்பழ நிறமுடைய ஜரிகைத் தலைக்குட்டையும், உடலில் எப்போதும் வெண்மையான உடைகளுமே அணிந்திருப்பார். வாலிபர்கள் முன்வந்து செய்யும் ஒவ்வொரு நற்காரியத்திற்கும் அவர் உற்ற துணையாக இருந்து வந்தார். அவர் இரண்டு மாதக் காலம் நோய்வாய்ப் பட்டு, ராஜாவில் வீட்டிலேயே இருந்து வந்தார். அநேக டாக்டர்கள் பார்த்தும் குணப் படாமற் போயிற்று. பாரதியாரைக் கூட்டிக் கொண்டு போய், சக்தியைத் தியானித்து விபூதி போடச் சொல்லிப் பார்க்கலாமா என்று அடிக்கடி நான் நினைப்பதுண்டு. ராசு கொலோந்தோம் கிறிஸ்தவராயிற்றே, மற்றவர்கள் என்ன சொல் வார்களோ என்ற அச்சம் என்னைத் தடுத்து வந்தது.

ஒரு நாள் காலை 9-மணி சுமாருக்குப் பாரதியார் வீட்டுக்குச் சென்றிருந்தேன். அந்தப் பெரிய மாடிவீடு 'விளக்கெண்ணெய்ச் செட்டியார்' வீட்டுக்கு எதிரிலுள்ளது. நான் போயிருந்த சமயத் தில் குருநாதர் மாடியில் ஊஞ்சலில் அமர்ந்து ஆடிக்கொண்டே ஏதோ யோசனையிலிருந்தார். சற்று நேரத்தில் பிரெஞ்சு வாத்தியாரும் ஒரு சிறு டிரங்குப் பெட்டியுடன் வந்து, என் அருகில்

உட்கார்ந்தார். அவர் ராசு கொலோங்தோம் அவர்களின் நிலைமையைப் பற்றி என் காதில் குசு குசுவென்று சொல்லிக்கொண்டிருந்தார். பாரதியார் எழுதும்போதும் படிக்கும்போதும் ஒரு சிறு சப்தமும் செய்யக்கூடாது என்பது எங்களுக்குத் தெரியும். திடீரென்று பாரதியார் ஊஞ்சலைவிட்டு இறங்கி வந்து, எங்கள் எதிரில் குந்திட்டு உட்கார்ந்து, 'என்னமோ குசுகுசுவென்று பேசிக் கொண்டிருந்தீர்களே, என்ன சங்கதி?' என்று பிரெஞ்சு வாத்தியாரை நோக்கிக் கேட்டார். அவரும் உள்ள விஷயத்தை எடுத்துச் சொல்லி, 'உங்களை அழைத்துக்கொண்டு போய் ராசு கொலோங்தோமைக் காண்பிக்கலாமா என்று யோசித்தோம்' என்ருர்.

'அப்படியா?......முதலில் உமது பெட்டியைத் திறந்து "விடமோ சாயாவே" என்ற கீர்த்தனை நடக்கட்டும். பின்னல் போவோம்' என்ருர் பாரதியார். உடனே வாத்தியார் பெட்டியைத் திறந்து, உள்ளேயிருந்த கோப்பைகளையெல்லாம் வெளியே எடுத்து வரிசையாக வைத்து, ஒவ்வொன்றிலும் அளவுப்படி தண்ணீர் ஊற்றி, சுரம் செய்து, பாரதியார் கேட்ட பாடலை வாசித்துக் காண்பித்தார். 'இன்னும் விரைவாகக் கை ஓடவேண்டும்' என்று பாரதியார் சொன்னர். இதன் மத்தியில், 'சுவாமி, உங்கள் தேசீய கீதங்களை நல்ல இராகங்களில் பாடாமல், கும்மி, காவடிச் சிந்து, நொண்டிச் சிந்து முதலிய மெட்டுக் களில் ஏன் பாடுகிறீர்கள்?' என்று நான் கேட்டேன். 'என் பாட்டு தேசீய கீதமானதால், மூட்டை தூக்கும் ஆள் முதற்கொண்டு பாகவதர் வரையில் சுலபமாகப் பாடவேணும்' என்ருர் கவிஞர்.

பின்னர் நாங்கள் மூவருமாக ராசு கொலோந்தோம் வீட்டுக்குச் சென்றோம். சி. ஐ. டி. காரரும் தொடர்ந்து வந்தார். ஓடு போட்ட அந்தக் கல் வீட்டுக்குள் நுழைந்ததும், வலது பக்கமுள்ள இரண்டாவது அறையில் ஒரு நாற்காலியில் தலையைத் தொங்கவிட்ட வண்ணம் உட்கார்ந்திருந்த ராசு அவர்களைக் கண்டோம். எங்கள் காலடிச் சப்தம் கேட்டவுடன் அவர் தலை நிமிர்ந்து பாரதியாருக்கு வணக்கம் செய்தார்.

அவரை உற்றுப் பார்த்து, 'உங்களுக்கு உடம்புக்கு என்ன?' என்று கேட்டார் பாரதியார். 'ஒண்ணுமில்லிங்கோ, மயக்கந்தான்!' என்று ஏக்கம் நிறைந்த பெருமூச்சுடன் பதிலளித்தார் ராசு. அவர், மனத்தில் பல எண்ணங்கள் தோன்றிச் சொல்லமுடியாத துக்கத்தில் ஆழ்ந்திருப்பதைப் பாரதியார் கண்டுகொண்டு, 'நீர் சொல்வது உண்மைதான். உமது மனப் புண்ணை ஒரு டாக்டராலும் ஆற்ற முடியாது. உமது உள்ளத்திலுள்ள "அட்மாஸ்பியர்" (சூழ்நிலை) இந்த அறை முழுதும் சூழ்ந்திருக்கிறது. இவ்வாறே நீர் இருப்பதானல், உமக்குக் கஷ்டம் சம்பவிக்கும். ஆனதால், கொஞ்சக் காலம் இந்த அறையைவிட்டு வேறு இடமாகிலும், அல்லது வெளியூராகிலும் போயிருந்துவிட்டு வந்தால் உமக்கு நன்மையாக இருக்கும்' என்று சொன்னர். 'அப்படியே செய்கிறேன்' என்று வாய்விட்டுச் சொல்லாமல், தலையை மட்டும் அசைத்தார் நோயாளி. பாரதியாரை வீட்டில் கொண்டு போய் விட்டுவிட்டு நாங்கள் வீடு வந்து சேர்ந்தோம்.

ஒரு வாரத்திற்குள் ராசு கொலோந்தோம் தமது வீட்டிலேயே திடீரென மரணமடைந்தார்.

## குவளைக்கண்ணனின் குணாதிசயங்கள்

என் குருநாதர் புதுவையில் அடிவைத்தபோது அன்னவருக்குக் கிடைத்த நண்பர் குவளைக்கண்ணன் என்ற ஸ்ரீ. கிருஷ்ணமாசாரியார்தான். நானும் குவளைக்கண்ணனும் புதுவைக் கல்வே உயர்தரப் பள்ளியில் ஒன்ருக வாசித்து வந்தோம். அப்போது ஸ்ரீ. வி. ஏ. சுவாமிநாத ஐயர், பி.ஏ., எல்.டி., ஹெட்மாஸ்டராகவும், ஸ்ரீ. சூசை ரெட்டியார் அடுத்த தலைமை ஆசிரியராகவும் இருந்து வந்தார்கள். எங்கள் வகுப்பு உபாத்தியாயர் ஓர் ஐயங்கார். சுமார் 38-வருஷங்கள் கழிந்துவிட்டதால் அவர் பெயர் மட்டும் ஞாபகத்திற்கு வரவில்லை. தலையில் மல் தலைக்குட்டை, மேலே நீண்ட கோட்டு, இடையில் கரைவேட்டி, நெற்றியில் பட்டை நாமத்துடன் அவர் பள்ளிக்கு வருவார். அவருடைய மூக்கு நீண்டிருந்தமையால், 'கொம்பேறி மூக்கன் வாத்தியார்' என்று நாங்கள் வேடிக்கையாக அவரை அழைப்பது வழக்கம்.

எனது நண்பர் குவளைக்கண்ணன் பள்ளிக்கூடத்திற்கு வரும்போது சட்டை எதுவும் போட மாட்டார்; ஓர் அங்கவஸ்திரத்தை மட்டும் போர்த்திக்கொண்டு புத்தகத்துடன் வருவார். நெற்றியில் பட்டை நாமம் துலங்கும். பள்ளியில் படிக்கும் போது மிகவும் வைதிகமாகவே இருந்துவந்தார். படிப்பை விட்ட பின்னர் அவர் உத்தியோகம் எதுவும் செய்ய நான் பார்த்ததில்லை. புதுவைப் பெருமாள் கோவிலில் பட்டாசாரியராக இருந்துவந்தார் என்று நான் கேள்விப்பட்டதுண்டு. ஆனல், இரண்டொரு சமயங்களில், புதுவை நீதிஸ்தலத்தில் சாட்சிகளாக வரும் பிராம்மணரல்லாதாருக்கு அவர் துளசித் தீர்த்தம் கொடுக்கும்போது நான் பார்த்திருக்

கிறேன். அக்காலத்தில் புதுவைக் கோர்ட்டுகளில் சாட்சிகள் பிரமாணம் செய்வதற்காக, முஸ்லிம்களுக்காக விருத்தாப்பிய முஸ்லிம் ஒருவர் குர்ஆன் புத்தகத்துடனும், பிராம்மணரல்லாதார்களுக்காக ஓர் ஐயங்கார் துளசித் தீர்த்தப் பாத்திரத்துடனும், ஹரிஜன சமூகத்தாருக்காக வள்ளுவப் பண்டாரம் ஒருவர் துளசித் தீர்த்தப் பாத்திரத்துடனும் காட்சியளிப்பார்கள். கிறிஸ்தவர்களுக்காக ஒருவரும் கிடையாது; அவர்கள் கையைமட்டும் தூக்கிப் பிரமாணம் செய்ய வேண்டியதுதான். ஆனால், இப்போது இந்த வழக்கங்கள் எல்லாம் நீங்கி எல்லா வகுப்பாரும் கையைத் தூக்கிச் சத்தியம் செய்யவேண்டிய முறை ஏற்பட்டிருக்கிறது.

பாரதியார் குவளைக்கண்ணனிடம் அளவு கடந்த அன்பு பாராட்டி வந்தார். அவர் விருப்பத்திற்குக் கண்ணன் இரண்டு சொல்லமாட்டார். நாள்தோறும் பாரதியாரைத் தரிசிக்காமல் இருக்க மாட்டார். பாரதியார் வீட்டில் என்னைக் கண்டுவிட்டால், 'கனகலிங்கம்! கனகலிங்கம்!' என்று புன்சிரிப்புடன் அன்போடு அழைத்து அருகில் உட்கார வைத்துக் கொள்வார். ஈசுவரன் தருமராஜா கோவில் வீதியில் 20-வது எண்ணுள்ள வீட்டில் பாரதியார் குடியிருந்தபோது குவளைக் கண்ணனை நான் அடிக்கடி பார்ப்பதுண்டு. பள்ளியில் படிக்கும்போது காட்டி வந்த வைதிகமெல்லாம் பாரதியாரின் அன்பைப் பெற்றபின் எங்கே போய் ஒளிந்துகொண்டதோ தெரியவில்லை. 'பறையனுக்குப் போஜனம் செய்வித்துப் பக்கத்திலிருந்து சாப்பிட்டால் நீ மனுஷ்யனிடம் அன்புடையவனாக விளங்குவாய்!' என்று குருநாதர் குவளைக்கண்ணனிடம் அடிக்கடிசொல்லிவருவார். என்னைப்பார்த்து, 'அதோ கனகலிங்கம் வருகிறான்! அவனைப்பார்த்து

யாராகிலும் பறையன் என்று சொல்லுவார்களா?' என்று கேட்பார். இதே கேள்வியை அவர் புரட்சிக் கவிஞர் ஸ்ரீ. பாரதிதாஸனிடமும் அடிக்கடி கேட்பதுண்டு.

அந்தக் காலத்தில் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற மூன்றையும் கொள்கைகளாகக் கொண்ட குடியரசின் கீழிருந்த புதுவை நீதிஸ்தலங்களிலேயே ஜாதிவித்தியாசங்கள் இருந்தன என்றால், கோவில், ஹோட்டல், க்ஷவரக் கூடம், நாடகக் கொட்டகை முதலான இடங்களில் சொல்லவும் வேண்டுமா? ஜாதி வேற்றுமைகள் தலைவிரித்தாடிய அக்காலத்தில், கூண்டில் அடைபட்ட கிளியைப் போலிருந்த பாரதியாரால் என்ன செய்ய முடியும்? தேர்தல் காலத்தில் எங்கும் அடிதடி நடக்கும். பாரதியார் எதற்கும் அஞ்சாமல், ஜாதிவித்தியாசம் பார்க்கும் மடமையை விளக்கி, 'பறையர்களை ஏன் கோவிலுக்குள் அனுமதிக்கக் கூடாது?' என்று கேள்வி கேட்டு, அனுமதிக்க வேண்டும் என்பதற்குத் தக்க ஆதாரங்களுடன் விளக்கி, 'கோவில் திருத்தம்' என்ற 'நோட்டீஸ்' எழுதித் துணிவுடன் வெளியிட்டார். அதில் குவளைக்கண்ணனைக் கையொப்பமிடச் செய்திருந்தார். இதனைக் கண்ணுற்ற பெருமாள்கோவில்—ஐயங்கார்கள் குவளைக்கண்ணனிடம் கோபாவேசம் கொண்டு, ஸந்நிதியில் அவர் நிற்கும்போது கோஷ்டியில் சேர்க்காமல், ஜாதிப்பிரஷ்டம் செய்தவரைப் போல ஒதுக்கமாக வைத்துத்தான் தீர்த்தம் கொடுத்து வந்தார்கள் என்பதைப் பாரதியார் அனந்தம் தடவைகள் என்னிடம் சொல்லியிருக்கிறார்.

ஐயங்கார்களின் பூச்சாண்டிகளுக் கெல்லாம் குவளைக்கண்ணன் அஞ்சினவரல்லர். கடைசிவரை

பாரதியாரின் விசுவாசத்தையும் நட்பையும் கைவிடாமல் ஒழுகிவந்தார். பாரதிதான் அவரைக் கெடுத்துவிட்டார் என்று பலரும் சொல்லிவந்தனர். அதையும் அவர் காதில் போட்டுக் கொள்ளாமல், பாரதியார் வீட்டுக்கு அடிக்கடி போய்வந்து கொண்டிருந்தார்.

இப்போது ஹரிஜன மக்கள் புதுவைப் பெருமாள் கோவிலுக்குச் சென்று பெருமாளை வணங்கும் பாக்கியம் பெற்றுவிட்டார்கள். அன்று பாரதியார் கேட்ட கேள்விக்குப் பதிலாக இன்று எல்லோருக்கும் சம உரிமை கிடைத்திருக்கிறது.

## அத்தியாயம் 10

# என் வீட்டில் பாரதியார்

**1917**-ம் ஆண்டில் — மாதம், தேதி என் ஞாபகத்திற்கு வரவில்லை — பாரதியார் 'உன் வீட்டுக்கு இன்று வரப்போகிறேன், சௌகரியமாய் இருக்குமா?' என்று கேட்டார். அதற்கு நான், 'முன்பக்கம் ஓடு போட்டுப் பின்புறம் மெத்தை இருக்கிறது; மெத்தையில் ஹாலும் இருக்கிறது; காற்று வரும்; வசதியாக இருக்கும்' என்று பதில் சொன்னேன். அங்கே வந்து பார்த்ததும், 'சௌகரியமான இடந்தான்' என்றார். நான் ஒரு பாயைக் கொண்டுவந்து போட்டேன். அவர் ஓர் ஆராய்ச்சி செய்து பார்க்க விரும்பினார். அது குறித்து இங்கே எழுதவேண்டியது அவசியமில்லையென்று நினைக்கிறேன். ஆனால் வேறு பரீட்சைகளைக் குறிப்பிடலாம்.

ஒரு காலை மற்றொரு கால்மேல் போட்டுக்கொண்டு பாயில் படுத்தவண்ணம் பத்திரிகைகளை வாசித்துக் கொண்டிருந்தார். கொஞ்ச நேரம் கழிந்ததும் நான் அவரை நோக்கி, 'சுவாமி! ஆகாரம் சாப்பிடவில்லையே, பசிக்கவில்லையா? ஏதாவது தருவிக்கலாமா?' என்று கேட்டேன். அதற்கு அவர் அருகேயிருந்த என் நண்பர் ஒருவரைச் சுட்டிக்காட்டி, 'லட்டுவுக்கு என் வீடு தெரியுமோ?' என்று கேட்டார். அற்புதசாமி என்ற அந்த நண்பரை நாங்கள் லட்டு என்று அழைப்பது வழக்கம்.

அற்புதசாமி தமக்கு வீடு தெரியும் என்று சொன்னதும், 'அப்படியானால் நீ நம் அகத்துக்குப் போய்ச் செல்லம்மாவைக் கண்டு, "பாரதியார் கனக லிங்கம் வீட்டில் இருக்கிறார். காப்பியும் பலகார மும் வாங்கிவரச் சொன்னார்" என்று கேட்டு வாங் கிக்கொண்டுவா' என்றார்.

அப்படியே அற்புதசாமி பாரதியார் வீட்டுக்குப் போய் ஓர் அலுமினியம் தட்டில் தோசைகளும் பெரிய வெண்கல டம்ளரில் காப்பியும் கொண்டு வந்தார். அவருடன் நாடக நடிகரான திரு. எம். என். சாமி நாயுடு என்பவரும், வேதாசலம் சகேர் என்ற நண்பரும் வந்தார்கள்.

அவர்கள் மெத்தைக்கு வந்ததும், பாரதியார் நாயுடுவை எனக்குச் சுட்டிக்காட்டி, 'இவர் பெரிய பாகவதராச்சே! இங்கே எப்படி வந்தார்?' என்று கேட்டார். அதற்கு நான், 'சுவாமி! இவர் அடிக் கடி நம் வீட்டுக்கு வந்து போவது வழக்கம்தான்; இவரும் வித்தியாசம் பாராட்டுவதில்லை' என்று பதில் சொன்னேன்.

பாரதியார் தட்டில் இருந்த தோசைகளை எங் கள் மூவருக்கும் கொடுத்துச் சாப்பிடச் சொல்லி விட்டுத் தாம் ஒரு தோசையை மட்டும் சாப்பிட்டார். காப்பியைத் தாம் சாப்பிடாமல் எங்களுக்கே கொடுத்துவிட்டார். பிறகு நாடக பாகவதரை ஒரு பாட்டுப் பாடச் சொல்லிக் கேட்டுக்கொண் டிருந்தார்.

அப்பால் பாரதியார் அற்புதசாமியை நோக்கி, 'பாத்திரங்களை நம் அகத்தில் சேர்த்துவிட்டுச் செல்லம்மாளிடம், "கனகலிங்கத்தின் வீடு சௌக ரியமாய் இருக்கிறது, உங்களையும் வந்து பார்த்துப்

போகும்படி பாரதியார் அழைக்கிறார்'' என்று சொல்லி அம்மாளை அழைத்துவா' என்றார்.

அற்புதசாமி அங்கு போய்ப் பாத்திரங்களைக் கொடுத்துவிட்டுத் தாம்மட்டும் திரும்பி வந்தார். 'செல்லம்மா வரவில்லையா?' என்று பாரதியார் ஆவலாகக் கேட்க, 'நீங்கள் சொன்னபடியே அம்மையாரிடம் தெரிவித்தேன். "இப்போது சமையல் நேரமாக இருக்கிறது என்று பாரதியாரிடம் சொல்லிவிடு'' என்று சொல்லி அனுப்பிவிட்டார் அம்மையார்' என்று பதில்சொன்னார் அற்புதசாமி.

சில நிஷங்கள் மௌனமாக இருந்துவிட்டுப் பாரதியார் எங்களை நோக்கி, 'நான் இங்கே வந்தால் போதுமா? அம்மாளும் இங்கே வந்து போனால்தான் சிலாக்கியமாக இருக்கும்' என்றார். பிறகு வேதாசலம் சகோர் என்பவரை நோக்கி, 'நீ உடனே போய் அம்மாளை நான் இட்டுவரச் சொன்னதாகச் சொல்லி அழைத்துவா!' என்றார்.

வேதாசலம் சகோர் திரும்பிவந்து, 'அம்மாள் சமையல் வேலையைக் கவனித்துக் கொண்டிருப்பதால் இப்போது வரமுடியாது என்று சொல்லிவிட்டார்' என்று அற்புதசாமி சொன்னதை அனுசரித்துச் சொன்னார். பாரதியார் ஆத்திரமாக, 'சாப்பாடு பெரிதல்ல, சந்தர்ப்பம் பெரிது! நான் இருக்கும் இந்த இடத்திற்குச் செல்லம்மாளும் வந்துவிட்டுப் போனால் என் கொள்கைக்குப் பொருத்தமாய் இருக்கும்' என்று மறுபடியும் வேதாசலம் சகோரை ஓடிப் போய்வரும்படி ஏவினார்.

மறுபடியும் வேதாசலம் சகோர் திரும்பி வந்து, 'அம்மாள் வருவதற்கு யாதொரு தடையும் கிடையாதாம். "இதோ பார், சாதம் அடுப்பிலிருக்க எப்படி வரமுடியும்?'' என்று சொன்னார்' என்றார்.

சற்றுநேரம் சென்றதும் பாரதியார் நாடக நடிக ரான திரு. எம். என். நாயுடுவை நோக்கி, 'பாகவ தரே! நீர் நம் அகத்துக்கு எதிரே இருப்பவராகை யால், நீர் போய்ச் செல்லம்மாளை அழைத்து வர லாமே!' என்று அவரையும் அனுப்பிவைத்தார். பாகவதரும் திரும்பிவந்து மேற்படி இருவர் சொன்ன பதிலையே சொன்னார்.

கடைசியாகப் பாரதியார் என்னை நோக்கி, 'கனகலிங்கம்! நீ போய் அழைத்துவா!' என்று கட்டளையிட்டார். நான் ஓடிப்போனேன். 'உன் வீட்டில் என்ன விசேஷம்?' என்று அம்மையார் கேட்டார். 'ஒன்றுமில்லை!' என்று பதில் சொன் னேன். பிறகு ஸ்ரீ செல்லம்மாள், 'நான்தான் சமையலில் ஈடுபட்டிருப்பதாக ஏற்கனவே சொல்லி அனுப்பிவிட்டேனே. அதுவுமல்லாமல், பாப்பா முதலானவர்கள் வேறொரு வீட்டுக்குப் போயிருக்கிறார்கள். இங்கே என்னைத் தவிர வேறொருவரும் இல்லை என்று பாரதியாரிடம் சொல்லு' என்று சொல்லிவிட்டார்.

நான் திரும்பி வந்து செய்தி சொன்னதும், பாரதியார் என்னை உற்றுப்பார்த்து, 'உண்மையில் செல்லம்மாளுக்கு வீட்டில் வேலை இருக்கலாம்; ஆனால், "வீட்டு வேலைகளைப் பார்த்துவிட்டு வருகி றேன்" என்று ஒருவரிடமும் சொல்லி அனுப்ப வில்லையே!' என்றார். அந்தப் பேச்சைத் தொடர்ந்து ஏதோ புதிர்போட்டதுபோல், 'செல்லம் மாளுக்கு இன்னும் கொஞ்சம் இருக்கிறது' என் றார். 'அப்படியென்றால், அது என்ன?' என்று கேட்டேன். 'அதுவா? தீண்டாமை என்னும் தொத்து நோய்!' என்றார் பாரதியார்.

அன்று தம் இஷ்டப்படியே செல்லம்மாள் என் வீட்டுக்கு வந்து போனுல், 'சுதேசமித்திர'னில் தாமும் செல்லம்மாளும் ஹரிஜனன் வீட்டில் தங்கியிருந்ததாக ஒரு கட்டுரை வெளியிட விரும்பியதாகவும் பாரதியார் என்னிடம் தெரிவித்தார்.

பிறகு சற்று நேரம் டாக்டர் பெஸன்ட் அம்மையாரின் சீர்திருத்தக் கொள்கைகளைக் குறித்து ஸ்ரீ எம். என். சாமி நாயுடுவிடம் (இவரது முழுப்பெயர் எம். நாராயணசாமி நாயுடு) பேசிக் கொண்டிருந்தார். அன்று தமது அருமை மனைவியார் ஓர் அரிய சந்தர்ப்பத்தை இழந்துவிட்டதாக எங்களிடம் சொல்லிவிட்டுக் கொஞ்சம் உறங்கிய பின் கடல் ஸ்நானத்திற்குப் புறப்பட்டார்.

பாரதியாரின் வீட்டுக்கு நான் அடிக்கடி போய் வந்ததுடன், 'குருநாதர் நம் குடிசையிலும் வந்து காட்சியளித்தாரே!' என்ற பெருமை எனக்குக் கொஞ்சநஞ்சம் இல்லை. நான் என் மதிப்பில் ஓர் அடி உயர்ந்துவிட்டதாக எண்ணினேன்.

என்னிடம் பாரதியார் விசேஷ அபிமானம் காட்டியபோதிலும், ஹரிஜன இளைஞர்களிடம் பொதுவாகவே அபிமானம் காட்டுவதுண்டு. மேலே கறுப்புக் கோட்டும், தலையில் பஞ்சாபிக் கட்டும், கையில் கட்டுப் பத்திரிகைகளும், முறுக்கி விட்ட மீசையும் தாடியுமாக என் கண்ணில் ஒரு சித்த புருஷர்போல் காட்சியளித்த பெரியார், ஓரளவு வேதாசலம் சகோர், எம். என். நாயுடு முதலானவர்களின் உள்ளங்களையும் பெரிதும் வசீகரித்துவிட்டார்.

பாரதியாருக்கு இரகசியப் போலீஸாரால் விளைந்த தொல்லைகள் அனந்தம் என்றுதான் சொல்லவேண்டும். தலையில் லுங்கித் துண்டும்

மேலே காக்கிக் கோட்டும் அணிந்தவர்களாகவும், சிறந்த கனவான்களைப் போல் நாகரிக உடைகள் தரித்தவர்களாகவும் சி. ஐ. டி. காரர்கள் மாறு வேஷத்தில் புதுவையிலே அங்கும் இங்கும் எங்கும் திரிந்து, 'பாரதியார் எங்கே போகிறார்? என்ன செய்கிறார்?' என்று அவர் யார் யாரோடு பேசுகிறாரோ, தோழமை கொள்ளுகிறாரோ, அவர்களை யெல்லாம் விசாரித்து விசாரித்துப் பஞ்சரித்துவிடு வார்கள்.

இந்த ஆசாமிகளையும் இவர்கள் விளைத்த துன்பங்களையும் குறிப்பிட்டுப் பாரதியார், தமது 'கண்ணன் பாட்டு' ஒன்றில்,

ஒன்பது வாசல்-குடிலினைச் சுற்றி
ஒருசில பேய்கள் வந்தே
துன்பப் படுத்துது—மந்திரம் செய்து
தொலைத்திட வேண்டும் ஐயே!

என்று தமது இஷ்ட தெய்வமாகிய கண்ணனை நோக்கிக் கதறியிருக்கிறார்.

இத்தனை தொல்லைகளுக் கிடையிலும் என்னைப் போன்ற ஹரிஜனங்களின் துன்பங்களை நினைத்து நினைத்து, உருகி உருகி, எங்களோடு தட்டுத் தடையில்லாமல் கலந்து பழகிவந்தார். எத்தனையோ வேதாந்திகளும், அரசியல்வாதிகளும் கூட ஸமரஸ சன்மார்க்கத்தைக் குறித்தும், ஸம தர்மத்தைக் குறித்தும் மணிக்கணக்கில் பேசக் கேட்டிருக்கிறேன். ஆனல், அன்று பாரதியார் என் வீட்டுக்கும் கருணைகூர்ந்து விஜயம் செய்த அந்த நிகழ்ச்சி ஒன்றுக்கு, எத்தனை ஆயிரம் பிரசங்கங்கள் ஈடாகும்!

இன்று காந்தியடிகளைப் போல், இந்த மகாத்மாவுக்கும் முன்பாகவே, என் குருநாதர் பாரதி

யார் ஹரிஜனங்களின் சுகதுக்கத்தைத் தமதாக்கிக் கொண்டார். இத்தகைய வாழ்க்கையில் பிறந்தது தான்,

தஞ்சம் உலகினில் எங்கணும் இன்றித்
தவித்துத் தடுமாறிப்
பஞ்சைப் பறையன் அடிமை புகுந்தேன்,
பாரம் உனக்(கு) ஆண்டே!
ஆண்டே!—பாரம் உனக்(கு) ஆண்டே!

என்ற பாரதியார் கவிதை.

இந்தப் பாட்டை நான் கேட்கும்போதெல்லாம், பாரதியார் என் குடிசைக்கு விஜயம் செய்ததும், தமது அருமை மனைவியாரையும் அங்கே வரவழைக்க வேண்டுமென்று திரும்பத் திரும்ப முயற்சிகள் செய்ததும் என் மனக்கண்முன் ஓடிவருகின்றன.

கிருஷ்ணபகவான் விதுரர் வீட்டுக்கு வந்ததும், 'என்ன மாதவம் செய்தது இச்சிறு குடில்?" என்று ஒரு பெரிய மாளிகையில் வசித்துக் கொண்டிருந்த விதுரர் சொன்னாராம். உண்மையிலேயே சிறு குடிலில் வசிக்கும் சிறியேனாகிய நான் பாரதியார் விஜயத்தைக் குறித்து அப்படிச் சொல்லிக் கொள்வது, விதுரர் வார்த்தையைக் காட்டிலும் உண்மையாகும் அல்லவா? அடடா, என்ன மாதவம் செய்தது என் குடிசை!

## அத்தியாயம் 11

# புதுவையில் பிரிந்து சென்னையில் சந்திப்பு

**1914**-ம் ஆண்டில் நிகழ்ந்த ஐரோப்பிய மகா யுத்தத்தை முன்னிட்டு என் வீட்டுக்கு அருகே வசித்துவந்த நண்பர்கள் கட்டாய சேவகமாய்ப் பிரான்ஸுக்குச் சென்றபின், உற்ற நண்பர்கள் அருகே இல்லாததால் எனக்குக் கொஞ்சம் சிரமமாகத் தோன்றியது. உடனே பாரதியாரிடம் போய், 'சுவாமி! உங்கள் வீட்டில் விருந்தளித்து என் நண்பர்களை ஐரோப்பாவுக்கு அனுப்பிவிட்டீர்கள். நான் இங்கே தனிமையாக இருப்பதைவிட மெஸொபொடேமியா போய்வரலாம் என்று நினைக்கிறேன்' என்றேன்.

அதற்குப் பாரதியார், 'உண்மைதான், கூண்டில் அடைபட்ட கிளியைப்போல் புதுச்சேரியில் எவ்வளவு காலம் இருந்துவருவது என்று நானும் ஆலோசித்துக் கொண்டுதான் இருக்கிறேன். கூடிய சீக்கிரம் நானும் இவ்விடமிருந்து பிரயாணப் படலாமா என்று எண்ணியிருக்கிறேன். உன் யாத்திரை எப்போது?' என்று கேட்டார்.

'இன்று இரவே பிரயாணம்' என்று நான் பதில் சொன்னேன். பாரதியார், 'சுகமாய்ப் போய் வா! அன்னை பராசக்தி அருள் செய்க!' என்று ஆசீர்வதித்தார். நான் அவரைப் பிரியவேண்டி-

யிருக்கிறதே என்ற கவலையுடன் அடிகளில் விழுந்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்துவிட்டு விடை கொண்டேன்.

குருநாதரின் ஆசீர்வாதத்தால், மெஸொபொடேமியாவில் மார்கில் என்ற இடத்தில் ரயில்வே என்ஜினியரிங் இலாகாவில் ஸ்டோர் குமாஸ்தா உத்தியோகம் எனக்குக் கிடைத்தது. அந்த வேலையில் அமர்ந்தது முதல் நாலைந்து மாதம் வரை எனக்குப் பாரதியாரைப் பற்றிய தகவலே கிடைக்கவில்லை. மிலிடரி உத்தியோகம் வகித்த எனக்கு, தேசியப் புரட்சிப் போர்வீரரான பாரதியாருடன், கடிதப்போக்குவரத்து வைத்துக்கொள்ளவும் பயம்.

இப்படிச் சில மாதங்கள் கழிந்தபின் என் தந்தையாரிடமிருந்து எனக்கு வந்த கடிதத்தில் பாரதியாரைப் பற்றிய ஒரு குறிப்பு இருந்தது. அதாவது, 'பாரதியார் புதுச்சேரியை விட்டுப் பிரயாணமாகிக் கடலூர் செல்லும் வழியில் போலீஸாரால் கைது செய்யப்பட்டும், பின் சில நிபந்தனைகளின் பேரில் விடுதலை யடைந்திருக்கிறார்' என்ற செய்திதான்.

கூண்டில் அடைபட்ட கிளிபோல் புதுவையில் இருந்ததாகப் பாரதியாரே என்னிடம் நேரில் குறிப்பிட்டார் அல்லவா? கிளி—அதிலும் சுதந்திர வானத்தில் பறக்கப் பேராசை கொண்ட கிளி—தப்பிப்போக உரிமையுள்ளதுதான் என்று நான் எண்ணி மகிழ்ந்தேன். ஆனால், பாரதியாரைக் கடலூரில் ஸப்ஜெயிலில் அடைத்து வைத்திருந்ததும், 'அப்படித்தான் பறக்கலாம், இவ்வளவு தூரம் தான் பறக்கலாம்; அந்த மாதிரிச் சிறகடிக்கலாகாது!' என்று தடைபோட்டுக் கிளியை வெளிவிட்டதும் என் உள்ளத்தைப் புண்ணாக்கிவிட்டன

படிக்காசுப் புலவரை ஒரு ராஜா தம் அரண்மனையிலேயே வைத்திருந்தார். அந்த 'அரண்மனைச் சிறை'கூட அப் புலவருக்குக் கஷ்டமாக இருந்ததாம். ஆகவே அவர் அரசனைப் பார்த்து,

பாட்டில் சிறந்த படிக்காசன்
என்னும் ஓர் பைங்கிளியைக்
கூட்டில் அடைத்து வைத்தாய்!
'இரை தா!' என்று கூப்பிடுதே!

என்று பாடிச் 'சுதந்திர உணவு' கேட்டாராம். அப்படியிருக்க, புதுவைச் சிறையிலிருந்து பாரதியார் சுதந்திர தாகம் கொண்டு பறந்து போக முயன்றதில் என்ன அதிசயம் இருக்கிறது! 'அவ்வளவு கஷ்டங்களை அனுபவித்தவர் சிற்சில நிபந்தனைகளை ஒப்புக்கொண்டு விடுதலை பெற்றதும் ஒரு வகையில் சரிதான். கூட்டுக்குள் இருந்த கிளி வீட்டிலும் தோட்டத்திலுமாவது பறந்து திரியலாம் அல்லவா?' என்று நான் ஒருவாறு திருப்தி அடைந்தேன்.

மெஸொபொடேமியாவில் என் உடன்படிக்கைக்கு இணங்க ராணுவ சேவை செய்து முடித்துக் கொண்டபின் நான் புதுவைக்குத் திரும்பினேன். பாரதியார் இல்லாத புதுவை, கிளி பறந்து போன கூடுபோலத்தான் தோன்றியது எனக்கு. புதுவைக்கு வந்த ஒரு மாதத்திற்குள் எனக்கு மலேரியா என்ற விஷஜுரம் கண்டது. நோயை முற்றும் குணப்படுத்திக் கொள்வதற்காகச் சென்னைக்குச் சென்று மயிலாப்பூர் ஸாந்தோமில் 'திராவிட இல்லம்' என்ற ஜாகையில் வசித்துவந்த ராவ்ஸாஹெப் பி. வி. எஸ். சுந்தரமூர்த்திப் பிள்ளையுடன் தங்கினேன்.

அந் நாளில் சென்னை ஹரிஜனங்களுக்குள் 'திராவிடர்' 'ஆதித்திராவிடர்' என்ற பிரசினைகள் பெரிதும் அடிபட்டன. ஆமாம், மிக்க ஆவேசமாகவும் ஆரவாரமாகவும் கூட்டங்கள் நடைபெறும். எனக்கு மலேரியா குணமானதும் அந்தக் கூட்டங்களுக் கெல்லாம் போவேன். பாரதியாரைப் பார்க்கவேண்டும் என்பதுதான் முக்கிய ஆசை. அவர் சென்னையில் இருப்பதாகத் தெரியும், ஆனல் இருக்குமிடம் தெரியாது. அவர் மேலே சொன்ன கூட்டங்களுக்கும் வருவதில்லை.

இன்று பாரதியாரைத் தெரியாத தமிழர் இல்லை. எல்லா இல்லங்களிலும் உள்ளங்களிலும் பாரதியார் வீற்றிருக்கிறார். ஆனல் அன்று பாரதியார் இருப்பிடம் கண்டுபிடிப்பதே எனக்குக் கொஞ்சம் சிரமமாகத்தான் இருந்தது.

மயிலாப்பூர் மந்தைவெளியில் வசித்து வந்த காங்கிரஸ்வாதியும், ஹரிஜன வகுப்பினருமான ஸ்ரீ ஜயவேலன் என்பவரின் முயற்சியால், நுண்ணறிவாளரும், ஒப்பற்ற வழக்கறிஞரும், பிரபல அரசியல் ஞானியுமாகிய காலஞ்சென்ற உயர்திரு. எஸ். ஸ்ரீனிவாஸையங்காரின் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதில் நானும் கலந்து கொண்டேன். அந்தக் கூட்டத்திற்கும் பாரதியார் வரவில்லை.

அக் கூட்டத்தில் சுவாமி உருத்திர கோடீசுவரர், சகோதரி வி. பாலம்மாள் முதலான அக்காலப் பிரசித்தர்கள் சொற்பொழிவு ஆற்றிய பின், கதரைப் பற்றி என்னைப் பேசும்படியாகத் தலைவர் கட்டளையிட்டார். கூட்டம் கலைந்ததும் சகோதரி பாலம்மாள் என் ஊர் பேர் முதலான விவரங்கள் பற்றி விசாரித்தார். நான் 'புதுச்சேரி'

என்றதும், அந்த அம்மையார், 'அப்படியானால் சுப்பிரமணிய பாரதியாரைத் தெரிந்திருக்கலாம் என்று நம்புகிறேன்' என்றார்.

அந்த வார்த்தை, பெரும் பசியனுக்குச் சோறு கிடைத்தது போலிருந்தது எனக்கு. 'தெரியும் என்பது மட்டுமல்ல; அவர்தான் அடியேனது குருநாதர். சுமார் மூன்று ஆண்டுகளாக அவரைப் பார்க்கவில்லை. சென்னையில்தான் இருக்கிறார் என்று தெரியும். இது போன்ற கூட்டங்களிலும் காணக் கிடைக்கவில்லையே! அவர் ஜாகையும் தெரியவில்லை!' என்று வருந்திக் கூறினேன்.

அப்போது சகோதரியார், 'எனக்கும் அவர் ஜாகை தெரியாது. இப்போது "சுதேசமித்திரன்" பத்திரிகையில் உதவியாசிரியர் வேலை பார்த்து வருவதாகக் கேள்வி. பாவம், பாண்டிச்சேரியில் எவ்வளவோ கஷ்டத்திற்குப் பின் பழையபடி சென்னைக்கு வந்து ஏதோ கொஞ்சம் நிம்மதியாய் இருக்கிறார் போலும்!' என்றார்.

நீந்திக் கை ஓய்ந்தவனுக்கு ஒரு தெப்பம் கிடைத்தது போலிருந்தது அந்தச்செய்தி. '"சுதேச மித்திரன்" காரியாலயம் எங்கே இருக்கிறது?' என்று ஆவலாகக் கேட்டேன். 'டவுனில், எரபாலு செட்டி வீதியில் இருக்கிறது' என்று அம்மையார் பதில் சொன்னார். அந் நாளில் 'சுதேசமித்திரன்' விலாசம் அது. அந்தச் செய்தி கிடைத்ததும் நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

மறு நாள் காலை சுமார் பத்து மணிக்கு நான் மயிலாப்பூரை விட்டுக் கிளம்பி 'சுதேசமித் திரன்' ஆபீஸுக்குப் போய்ச் சேர்ந்தேன். வயது முதிர்ந்த ஒரு முகம்மதியர்—வாசல் சேவக ராக நின்றுகொண் டிருந்தவர்—'பாரதியார் இப்

போதுதான் வந்தார். மெத்தைக்குப் போங்கோ!" என்றார்.

மாடியில் வலதுகைப் பக்கம் வடக்கே பார்த்த அறையில் பாரதியார் இருப்பதாக அறிந்து கொண்டதும், திடீரென்று ஏதோ ஓர் ஆலயம் போலத் தோன்றியது அந்தப் பத்திரிகாலய அறை. ஆலயப் பிரவேசம் செய்யும் குதூகலத்துடன் கதவைத் திறந்துகொண்டு நான் உள்ளே புகுந்தேன்.

மேஜையண்டை இரண்டு கம்பாஸிடர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். அச்சிட்டு வந்திருந்த காகிதப் பிரதிகளைப் பாரதியார் ஒருமை உள்ளத்துடன் பார்வையிட்டுக்கொண்டிருந்தார். நான் என் உள்ளக் கிளர்ச்சியை அடக்கிக்கொண்டு மௌனமாக அவரை உற்று நோக்கிய வண்ணம் நின்றுகொண்டிருந்தேன்.

'ப்ரூப்' பார்த்த பின் ஷீட்டுகளைக் கம்பாஸிடர்களிடம் கொடுத்துவிட்டுத் தலை நிமிர்ந்தார் குருநாதர். நான் தலை வணங்கிப் பயபக்தியுடன் நமஸ்காரம் செய்தேன். பாரதியார் ஆச்சரியமாக என்னைப் பார்த்தார் ஒரு கணம்: அடுத்த கணமே, 'அடேய்!' என்று சொல்லிக்கொண்டே காலால் நாற்காலியைப் பின்புறமாக உதைத்துத் தள்ளிவிட்டு, எழுந்துவந்து அப்படியே என் கழுத்தைக் கட்டிக்கொண்டார். எனக்குக் கண்ணீர் ததும்பியது.

'எப்போது வந்தாய்? இப்போது எங்கிருந்து வருகிறாய்?' என்று பேரன்புடன் க்ஷேமம் விசாரித்தார். பிறகு, 'நல்லது, என்னுடன் கூடவா!' என்று சொல்லி, என்னை 'மித்திரன்' ஆசிரியரின் அறைக்கு அழைத்துச் சென்றார். அப்போது, அ

சியல் ஞானியும் பொருளாதார அறிஞருமாக விளங்கிய ஸ்ரீ ஏ. ரங்கஸ்வாமி ஐயங்கார் 'மித்திரன்' ஆசிரியராக இருந்தார்.

அவரிடம் என்னை அழைத்துச் சென்று பாரதியார் அறிமுகப்படுத்தினார். அறிமுகப்படுத்துவதிலும் பாரதியாரின் தோரணை அலாதியாகத்தான் இருந்தது. தாம் உகந்த ஏதோ ஓர் அரும் பொருளைக் காட்டுவது போல் அவரிடம் என்னைக் காட்டி, 'இதோ இவன் என்னுடைய புதுவை ஹரிஜனப் பிரதம சிஷ்யன்; இவனுக்கு உபநயனம் செய்துவைத்தேன், புதுவையிலே!' என்று குதூகலமாய்க் கூறினார். தாம் ஜாதி வேற்றுமையைப் பற்றிப் பேசிய கூட்டத்தை நடத்தியதற்காக எனக்கு அபராதம் கிடைத்த வைபவத்தையும் ஐயங்காரிடம் தெரிவித்தார். 'வெகு காலமாக இவனை நான் பார்க்கவில்லை; மறவாமல் சீடப்பிள்ளை தேடி வந்துவிட்டான்!' என்று ஆனந்தமாகச் சொன்னார். நான் ஆனந்தக் கடலில் ஆழ்ந்தே போனேன்.

## அத்தியாயம் 12

### தீர்க்கதரிசி

'மித்திரன்' பத்திராதிபர் திரு. ஏ. ரங்கஸ்வாமி ஐயங்காரிடம் நான் விடைபெற்றுக் கொண்டதும், பாரதியார் என்னை மறுபடியும் தம்முடைய அறைக்குக் கூட்டிக்கொண்டு போனார். அங்கே என்னை ஒரு நாற்காலியில் அமரச் செய்து, தாம் எழுத்து வேலையில் ஈடுபட்டார். மணி ஒன்று அடித்தது. எனக்குப் பசி அதிகரித்தது. மண்ணடியில் என் உறவினர் வீடு இருந்ததால் அங்கே போய்ச் சாப்பிட்டு வந்துவிடலா மென்று தீர்மானித்து, பாரதியாரிடம், 'சுவாமி! போஜனம் செய்து விட்டு வந்துவிடுகிறேன்' என்றேன்.

அவரோ, 'வேண்டாம், சற்றுப் பொறு!' என்றார். கொஞ்சநேரமானதும், 'வா புறப்படுவோம்!' என்று பாரதியார் என்னை அழைத்துக்கொண்டு, 'லோன் ஸ்கொயர்' முனையில் இருந்த ஒரு முஸ்லிம் ஹோட்டலுக்குள் சென்றார். மேஜைக்கு எதிரே உட்கார்ந்திருந்த ஹோட்டல் முதலாளியிடம் என்னைச் சுட்டிக் காண்பித்து, 'இவர் கேட்பதைக் கொடுங்கள்!' என்றார். நான் சாப்பிட்டு வரும் வரையில், ஒரு ரொட்டியை அங்கேயே வாங்கிக் கையில் வைத்துக்கொண்டு, ஹோட்டல் வாசற்படியண்டை நின்றுகொண்டே, அந்த ரொட்டியைச் சிறு சிறு துண்டுகளாக்கிக் கொஞ்சங் கொஞ்சமாக வாயிற்

போட்டு மென்று தின்னுவதும், சில துண்டுகளைக் காகங்களுக்குப் போடுவதுமாய் இருந்தார்.

> காக்கை குருவி எங்கள் ஜாதி—நீள்
> கடலும் மலையும் எங்கள் கூட்டம்
> நோக்கும் திசை எல்லாம் நாமன்றி வேறில்லை,
> நோக்க நோக்கக் களியாட்டம்!

என்று ஞானபேரிகை கொட்டிய பெரியார் அப்படிச் செய்ததில், அவரை நன்கு அறிந்திருந்த எனக்கு ஆச்சரியம் தோன்றவில்லை.

ஆனல், ரஸ்தாவில் போகிறவர் வருகிறவர்களுக்கெல்லாம் பாரதியாரின் செயல் விநோதமாகவே இருந்தது. மேலும் அது டிராம் வண்டி போகும் ரஸ்தா; டிராமில் போனவர்களும் பாரதியாரை உற்று உற்றுக் கவனித்தார்கள். என் பக்கத்தில் உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்த இரண்டு வாலிபர்கள் சிரித்துக்கொண்டே, 'என்னடா கூத்து! பிராம்மண பாரதி முஸ்லிம் ஹோட்டலுக்குள் வந்து இவ்வளவு தைரியமாக வாசலண்டை நின்று ரொட்டி சாப்பிட்டுக்கொண்டிருக்கிறரே!' என்று தமக்குள் பேசிக்கொண்டிருந்தது என் செவியில் விழுந்தது. பட்டணத்துக் காக்கைகளுடனும் உறவு கொண்டாடிக் காக்கை-ஜாதியையும் தமது பிராம்மண ஜாதியோடு சேர்த்துக் கொண்ட ஞானமூர்த்தி, ஒரு சிறிதும் முஸ்லிம்-துவேஷம் இல்லாமல், 'ராம்-ரஹீம்' ஐக்கியத்தை ஏற்படுத்த முயன்றார் என்பதில் எனக்கு அதிசயமே ஏற்படவில்லை.

புதுச்சேரியிலேயே இவருக்கு இத்தகைய பரந்த உணர்ச்சி உண்டு. இவர் முஸ்லிம்களின் அல்லாவைக் குறித்தும்,

> அல்லா, அல்லா, அல்லா!

என்ற பல்லவியுடன் ஒரு கீர்த்தனம் பாடியிருக்கிறார். அதையும் சக்தி-பாடல்களைப்போல் உத்ஸாகமாய்ப் பாடுவார். ஆனால் வேதாந்த ரீதியில் ஸமரஸ புத்தியுள்ள இந்துக்களும் முஸ்லிம்களுடன் பலவேறு காரணங்களால் கலந்து உண்டு உறவாடக் கூசுகிறார்கள். அப்படி உறவாடுகிறவர்களும் பகிரங்கமாகச் செய்யமாட்டார்கள். பாரதியாருக்கோ எல்லாம் பகிரங்க ரகஸியம்தான்! வாழ்க்கையும், வேதாந்தமும், கவிதையும் எல்லாம் ஒன்றே தான்.

நான் சாப்பிட்டானதும் கையைக் கழுவிக்கொண்டு பாரதியாரிடம் வந்தேன். அவர் என்னை நோக்கி, 'என்ன கனகலிங்கம்! என்ன சாப்பிட்டாய்? திருப்தியாகச் சாப்பிட்டாயா?' என்று பரிவுடன் கேட்டார். அதற்கு நான், 'பன், பிஸ்கட், தேநீர் முதலியவற்றைத் திருப்தியாகச் சாப்பிட்டேன்' என்று பதில் சொன்னேன். நான் சாப்பிட்ட செலவையும் கொடுத்துவிட்டு, மறுபடியும் என்னை ஆபீஸுக்குக் கூட்டிக்கொண்டு போனார். மணி ஐந்தடிக்கும் வரையில் அங்கே இருந்துவிட்டு, அன்றைய 'சுதேசமித்திரன்' பத்திரிகை ஒன்றைக் கையில் எடுத்துக்கொண்டு, 'வா, வீட்டுக்குப் போகலாம்!' என்றார்.

ரஸ்தாவுக்கு வந்தவுடன், இடது கையால் வேட்டி முனையைப் பிடித்துக்கொண்டு, அதிகச் சதைப் பற்றில்லாத அந்த மார்பை நெளித்த வண்ணமாகக் கம்பீரமாய் நடந்து, டிராம் நிற்குமிடம் போனார். நானும் நிழல்போலத் தொடர்ந்தேன். பிராட்வேயில் திருவல்லிக்கேணி டிராம் வந்ததும் ஏறிப்போய்ப் பாரதியாரின் வீட்டையடைந்தோம்.

கிழக்குமுகம் பார்த்த ஒரு பெரிய மாடிவீடு. அவ்வீட்டில் வேறு இரண்டொருவர் குடியிருந்ததாகவும் எனக்கு ஞாபகம். பாரதியார் வீட்டுக்குள் நுழைந்ததும் சகுந்தலை அம்மை ஓடிவந்தார். "பாப்பா! பார்த்தாயா? இங்கேயும் வந்துவிட்டான்." என்று சொல்லித் தம் கையிலிருந்த 'மித்திர'னைச் சகுந்தலையின் கையில் கொடுத்தார். பிறகு என்னை நோக்கி, 'நான் இருக்கும் இடம் தெரிந்துகொண்டாய் அல்லவா? நாளை ஞாயிற்றுக்கிழமை நான் ஆபீஸுக்குப் போகமாட்டேன். நீ காலையில் பத்து மணி சுமாருக்கு இங்கே வா,' என்று சொல்லி விடை கொடுத்தார்.

அப்படியே நான் மறுநாள் காலை அவர் வீடு நோக்கிப் புறப்பட்டேன். நான் பாரதியார் வீட்டுக்குப் போகிறேன் என்று தெரிந்துகொண்டதும், 'நான் தங்கியிருந்த வீட்டுக்காரரான திரு. பி. வீ. எஸ். சுந்தரமூர்த்தி, 'பாரதியார் பெரும் புலவர், நம் மக்களிடம் பேரன்பு கொண்டவராயிற்றே! அவரிடம் கேட்டு, "திராவிடர், ஆதித் திராவிடர்" என்ற இரண்டு சொற்களில் எந்த வார்த்தை தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குப் பொருத்தமானது என்பதை நீ ஞாபகமாய்த் தெரிந்துவா!' என்று என்னிடம் சொன்னார். 'ஆகட்டும்' என்று, நான் பாரதியார் வீட்டுக்கு நேரே போய்விட்டேன்.

வீட்டு ஹாலில் பாரதியார் தரையில் உட்கார்ந்திருந்தார். என்னைக் கண்டதும் கையைக் காட்டிச் சமீபத்தில் வந்து உட்காரும்படி சைகை காண்பித்தார். நான் அருகில் போய் உட்கார, என்னிடம் கொஞ்சம் பேசிக்கொண்டிருந்தார். தன் சொந்தக் காரியமாக என்னை டவுனுக்கு அனுப்பினார்.

நான் திரும்பியதும் அவரை நோக்கி, 'சுவாமி! என் சகோதரர் ஒருவர், எங்கள் சமூகத்தாரைத் "திராவிடர் என்று அழைப்பதா? ஆதித்திராவிடர் என்று அழைப்பதா?'' என்று கேட்டுவரச் சொன்னார். எது தங்களுக்கு நியாயமாகவும் பொருத்தமாகவும் தோன்றுகிறது?' என்று கேட்டேன். உடனே பாரதியார், 'அடேய், எனக்கு ஜாதியும் கிடையாது, சுண்டைக்காயும் கிடையாது! என்னிடம் ஆதித்திராவிடர், அநாதித் திராவிடர் என்ற விவகாரத்தை ஏன் கொண்டு வந்தாய்?' என்று வேடிக்கையாகப் பதிலளித்தார்.

நான் திருப்தி அடையவில்லை. 'ஏதாவது ஒரு பதில் தங்களிடமிருந்து பெற்றுக்கொண்டு போனால் தான் சகோதரர் சுந்தரமூர்த்தி திருப்தியடைவார்' என்று பிடிவாதம் செய்தேன். அப்போது அவர், 'பேரில் என்ன இருக்கிறது? எப்படி அழைத்துக் கொண்டால் என்ன? "பாரதியாருக்கு ஜாதி என்ற சொல்லே பிடிக்காது; திராவிடர், ஆதித்திராவிடர், ஆரியர் என்ற வேற்றுமையும் பிடிக்காது; எல்லா மக்களும் அவருக்குச் சமம்'' என்று உன் சகோதரரிடம் வற்புறுத்திச் சொல்லு!' என்று உறுதியாகச் சொல்லிவிட்டார்.

'அப்படியே சொல்லுகிறேன், போய் வருகிறேன்!' என்று நான் சொன்னதும் அவர், 'நீ நாளையதினம் பட்டணப்பக்கம் வருவதா யிருந்தால், என்னை இரண்டு மணிக்கு மேல் ஆபீஸில் வந்து பார்!' என்று சொல்லி விடைகொடுத்தார்.

அடுத்த நாள் நான் தம்புச்செட்டி வீதிக்கு ஓர் அலுவலாகப் போகவேண்டி யிருந்தது. அந்த அலுவலை முடித்துக்கொண்டு, குறித்த நேரத்திற்கு அவரைப் பார்க்கச் 'சுதேசமித்திரன்' ஆபீஸுக்

குச் சென்றேன். பாரதியார் என்னைக் கண்டதும், 'புதுவைக் காவடிக் குப்பத்தில் சித்தானந்தப் பரதேசி மடம் இருக்கிறதல்லவா? அதைப்போல் இங்கும் தட்சிணாமூர்த்தி மடம் என்று ஒரு மடம் இருக்கிறது. இந்த மடத்தைப் போய்ப் பார்க்க வேண்டும் என்ற அவா எனக்கு நீண்ட நாளாக உண்டு. இன்று உன்னையும் கூட்டிக்கொண்டு போகலாம் என்ற ஆலோசனையின் பேரில்தான் என்னை வந்து பார்க்கச் சொன்னேன்' என்றார்.

இருவரும் தட்சிணாமூர்த்தி மடத்திற்குப் போனோம். சுற்றிலும் சுவர் இல்லாமல் மூங்கில் தட்டிகளால் கட்டப்பெற்றுத் தென்னங் கீற்றால் வேய்ந்திருந்த ஒரு சிறு குடிசைதான் அது. 'இது தானா தட்சிணாமூர்த்தி மடாலயம்?' என்று நான் சிந்தித்துக்கொண் டிருக்கும்போதே பாரதியார், 'இது தட்சிணாமூர்த்தி சுவாமிகளின் சமாதி நிலையம்' என்றார். அந் நிலையத்தின் எதிரில் மணலில் நாங்கள் உட்கார்ந்தோம். பாரதியார் அந்த மடத்தைப் பார்த்துப் பார்த்துச் சிந்தனையில் ஆழ்ந்தார்.

வறுமையோடு அசுத்தத்திற்கும் அது ஒரு நிலையம் போல் தோன்றியது. கும்பல் கும்பலாகச் சோம்பேறிகள் உட்கார்ந்துகொண்டு சீட்டி அடிப்பதும் சீட்டாடுவதுமாக இருந்தார்கள். எச்சில் இலைகள் அங்கும் இங்கும் கிடந்தன. நான் மனவருத்தத்துடன் பாரதியாரை நோக்கி, 'சுவாமி! நம் புதுவைச் சித்தானந்தப் பரதேசியாரின் மடம் எவ்வளவு சுத்தமாக இருக்கிறது! பார்க்கவும் அழகாய் இருக்கிறதே! இம்மடத்தையோ ஒருவரும் கவனிப்பதில்லை யென்று தோன்றுகிறது' என்றேன்.

அதற்குப் பாரதியார், 'உண்மைதான் ஆனல் இம்மடம் நல்ல நிலைக்கு வரும் காலம் தூரத்தில் இல்லை. எல்லாம் ஒழுங்காகும்' என்ருர். பாரதியாரின் வாக்குப் பலித்துவிட்டது. இப்பொழுது மடாலயம் நல்ல கட்டடமாகி, மின்சார விளக்குகளோடு விளங்குவதுடன் ஆண்டு தவருமல் குருபூஜை நடத்தி, ஆயிரக் கணக்கான மக்களுக்கு அன்னதானமும் செய்து வருகிறது. இந்த மடத்தின் படம் ஒன்றும் இந்நூலில் சேர்த்திருக்கிறது.

பாரதியார் நாட்டைப் பற்றிப் பாடியிருக்கிருரே அந்த வாக்கும் தீர்க்கதரிசனமாகப் பலித்துவிடவில்லையா? 'பெருங் கவிகளெல்லாம் தீர்க்கதரிசிகளுங்கூட' என்று சொல்லுகிருர்களே, அது பாரதியார் விஷயத்தில் உண்மைதான் என்பதை நான் அனுபவத்தில் அறிந்திருக்கிறேன்.

## அத்தியாயம் 13

# கோவில் யானையும் குருநாதரும்

நான் பாரதியாரைச் சென்னையில் சந்தித்த நாள் முதல், ஜார்ஜ் டவுனுக்குப் போகும் சமயங்களில் வீட்டிலோ ஆபீஸிலோ போய்ச் சந்திப்பதுண்டு. ஒருநாள் மாலை சுமார் ஆறு மணிக்கு நான் திருவல்லிக்கேணி சென்று அவரை வீட்டில் சந்தித்தேன். சற்று நேரத்தில் ஸ்ரீ. வ. வே. சு. ஐயரும் அங்கு வந்தார். நான் அவரைக் கண்டதும் நமஸ்கரித்தேன்.

'இவன் யார், தெரிகிறதா?' என்று ஸ்ரீ. வ. வே. சு. ஐயரை நோக்கிப் பாரதியார் கேட்டார். ஐயர் என்னை உற்று நோக்கிச் சிறிது திகைத்துக் கொண்டிருக்கும்போதே 'புதுவையில் இவனுக்குத் தான் உங்கள் முன்னிலையில் உபநயனம் செய்து வைத்தேன்; ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த கனக லிங்கம்!' என்றார் பாரதியார். ஐயர், 'எனக்கு ஞாபகம் இருக்கிறது' என்று சொன்னதும், 'இவனை என்னுடைய ஹரிஜனப் பிரதம சீடனாக எண்ணியிருந்தேன். ஆனால் இவன் என்ன செய்தான் தெரியுமோ? தன்னுடைய சிஷ்யன் நாக லிங்கத்தை என்னிடம் கொண்டுவந்து விட்டு விட்டுத் தான் மெள்ள பஸ்ராவுக்கு நழுவிப் போய்விட்டான்!' என்று நான் பஸ்ரா போய் வந்த செய்தியை வேடிக்கையாகக் குறிப்பிட்டார். ஸ்ரீ. வ. வே. சு. ஐயர் சிரித்தார்.

இந்த நிகழ்ச்சிக்குப்பின் ஒரு வாரமாக நான் பாரதியாரைப் போய்ப் பார்க்கவில்லை. நான் தங்கியிருந்த வீட்டில் 'ஹிந்து,' 'சுதேசமித்திரன்,' 'நவசக்தி' முதலிய பத்திரிகைகள் வந்துகொண்டிருந்தன. ஒருநாள் 'சுதேசமித்திர'னைப் பிரித்ததும், 'பார்த்தஸாரதி கோவில் யானை பாரதியாரைத் தள்ளிவிட்டது!' என்ற வாக்கியம் கண்ணில் பட்டது. நான் நடுங்கிப் போனேன்.

உள்ளடங்கிய விஷயத்தை வாசித்துப் பார்க்கவும் உள்ளம் இடங்கொடுக்கவில்லை. பத்திரிகையை வீசி எறிந்துவிட்டுத் திருவல்லிக்கேணிக்கு ஓடினேன். பாரதியார் வீட்டின் முன்புறத்தில் ஒரு பெஞ்சு போட்டிருந்தது. அதில் மூன்று இளைஞர்கள் உட்கார்ந்திருந்தார்கள். நான் வீட்டுக்குள் போக யத்தனித்தேன். பெஞ்சியிலிருந்த வாலிபர்கள், 'எங்கே போகிறீர்?' என்று கேட்டார்கள். 'பாரதியாரைப் பார்க்கப் போகிறேன்' என்றேன். 'போகக்கூடாது. இப்போது அவரிடம் யாருமே பேசக்கூடாது!' என்று கண்டிப்பான தடையுத்தரவு போட்டுவிட்டார்கள்.

ஆனால், திரும்பிப்போக எனக்கு எப்படி மனம் வரும்? நான் சத்தியாக்கிரகி போல் அந்த இடத்தை விட்டு அகலாமல் அப்படியே நின்றுகொண்டிருந்தேன். எவ்வளவு நேரமானாலும் அப்படி அங்கேயே நின்று கொண்டிருந்து பாரதியாரைப் பார்த்துவிட்டுத்தான் போகவேண்டும் என்று தீர்மானித்துவிட்டேன்.

ஆனால் ஐந்து நிமிஷம் சென்றதும், வீட்டின் உட்புறத்து ஹால் பக்கம் ஸ்ரீ. சகுந்தலை அம்மை போய்க்கொண்டிருந்தார். அவரைக் கண்டதும்

நான் நின்ற இடத்திலிருந்தே. 'பாப்பா!' என்று கூப்பாடு போட்டேன்.

என் சத்தத்தைக் கேட்ட ஸ்ரீ. சகுந்தலை திரும்பிப் பார்த்து உடனே என்னிடம் வந்தார். 'உள்ளே விடமாட்டோம் என்கிறார்கள். அப்பாவிடம்போய், நான் வந்திருக்கிறேன் என்று சொல்ல வேணும்' என்றேன். பளிச்சென்று உள்ளே போய்த்திரும்பி வந்த ஸ்ரீ. சகுந்தலை அம்மாள் பெஞ்சியில் உட்கார்ந்திருந்த வாலிபர்களிடம் வந்து, 'அவரை மட்டும் அப்பா உள்ளேவிடச் சொன்னார்' என்று என்னைச் சுட்டிக் காண்பித்து மறுபடியும் உள்ளே போய் விட்டார்.

நான் உள்ளே போய் பாரதியார் படுத்திருந்த அறைக்குச் சென்று பார்த்தேன். தலையில் கட்டுடன் படுத்திருந்த பாரதியாரைக் கண்ணுற்றதும் எனக்கு விசனம் பொங்கியது. என் முகக்குறியைக் கண்டதும் பாரதியார் மிகவும் மெதுவான குரலில், 'விரைவில் குணமாகிவிடும், இப்போது பேச முடியவில்லை' என்றார். நான் சிறிது நேரம் பாரதியாரைப் பார்த்துக்கொண்டே இருந்துவிட்டு என் ஜாகைக்குத் திரும்பினேன்.

பாரதியார் சுகம் அடையும் வரையில் நான் அடிக்கடி போய்ப் பார்த்துவந்தேன். அவர் சௌக்கிய மடைந்ததும் எனக்குப் பரம சந்தோஷம். 'சுவாமி! யானை எப்படித் தள்ளிவிட்டது?' என்று கேட்டேன். பாரதியார் என்னை நோக்கி இளம் புன்னகையுடன், 'அடேய்! எப்போதும் நான் அந்த யானைக்கு வெல்லம் கொடுப்பது வழக்கம். அன்று அது தென்னை ஓலையைத் தின்றுகொண்டிருந்தது. அச்சமயம் நான் வெல்லத்தை நீட்டினேன். அது தலை குனிந்தவண்ணம் ஓலைப்பட்ச

ணத்தைப் பட்சித்துக்கொண் டிருந்ததால், என்னைப் பார்க்கவில்லை. என்னைப் பாராமலேதான் தும்பிக்கையால் தள்ளிவிட்டது. அதுதான் எனக்குத் தெரியும்' என்றார்.

நான் பாரதியாருடைய குழந்தை உள்ளமாகிய கவிதை உள்ளத்தை எத்தனையோ சம்பாஷணைகளில் அனுபவித்திருக்கிறேன். அந்தக் கோவில் யானை நிகழ்ச்சியிலும், அந்த நிகழ்ச்சியை அவர் என்னிடம் வெளியிட்ட முறையிலும் மீண்டும் கண்டு கொண்டேன். அவர் தலைக்கட்டுடன் படுத்த படுக்கையாகக் கிடந்த அந்தத் தோற்றம் இன்றும் என் மனக்கண்முன் அப்படியே வருகிறது. குழந்தையுள்ளம் கொண்ட ஒரு மகா புருஷர் படுத்திருப்பதாகவே தோன்றியது, இன்றும் அப்படியேதான் தோன்றுகிறது.

தம்மைக் கீழே தள்ளிய கோவில் யானையைக் குறித்துப் பாரதியார் 'சுதேசமித்திர'னில் 'கோவில் யானை' என்ற தலைப்புடன் ஒரு கட்டுரை எழுதினார். அந்த நிகழ்ச்சி 'சுதேசமித்திர'னில் செய்தியாக வெளிவந்தபோது வாசிக்க மனம் பொறாத நான், பாரதியாரின் கட்டுரையைப் படித்துப் பரவசமானேன்.

## அத்தியாயம் 14

# குருநாதரின் மறைவு

மறைந்து போன எனது குருநாதரின் கடைசிக் கட்டத்தை எழுதும்போது என் உள்ளம் வேதனையடைகிறது. புதுவையிலும், சென்னையிலும் அவருடன் கூடிப் பழகிவந்த நான் அந்திமக் காலத்தில் அவரது திருமுகத்தைப் பார்க்கக் கொடுத்துவைக்கவில்லையே என்று என் நெஞ்சம் துடிக்கின்றது.

நான் சென்னையில் இருந்துவந்த போது அடிக்கடி அவரைச் 'சுதேசமித்திரன்' ஆபீஸிலும், சில சமயங்களில் வீட்டிலும் போய்ப் பார்த்து வருவேன். புதுவைக்குப் போவதாயிருந்தால், முன்னதாகவே அவரிடம் சொல்லுவது வழக்கம். திடீரென்று நான் புதுவைக்குப் போக நேரிட்டது. சுமார் ஒரு மாதம் வரை புதுவையில் இருந்துவிட்டு, மறுபடியும் சென்னைக்கு வந்து, மண்ணடி போஸ்டாபீஸ் வீதி 19-வது எண்ணுள்ள வீட்டில் தங்கியிருந்தேன். நான் இருந்துவந்த வீடு எரபாலு செட்டி வீதிக்கு வெகு சமீபம். நான் சென்னைக்கு வந்த அடுத்த நாள் என் குருநாதரைக் காணச் 'சுதேசமித்திரன்' ஆபீஸுக்குச் சென்று, ஆபீஸ் வேலைக்காரனிடம், 'பாரதியார் மாடியில் இருக்கிறாரா?' என்று கேட்டேன். 'இல்லேங்கோ! அவர் ரொம்பவும் சீக்காக இருக்கிறாராம். ஆபீஸுக்

கும் வருகிறதில்லை' என்றான். அப்போது மாலை சுமார் ஐந்து மணி இருக்கும். 'நாளையதினம் குருநாதரைப் போய்ப் பார்ப்போம்' என்ற எண்ணத்தின் பேரில் பிராட்வே 'டேனிஷ் மிஷன் வாசகசாலை'க்குச் சென்றேன். அங்கு பெஞ்சியில் வீற்றிருந்த ஒவ்வொரு வாசகர் கையிலும் பத்திரிகை இருந்தது. ஒரு நாளாகிலும் நான் பத்திரிகை வாசிக்காமல் இருக்க மாட்டேன். பத்திரிகை வாசிக்கும் பழக்கம் என் குருநாதரால்தான் எனக்கு ஏற்பட்டது. வெகு நேரம் வரையில் அங்கு உட்கார்ந்திருந்தேன். ஒருவராகிலும் பத்திரிகை கொடுப்பதாய்க் காணோம். சுமார் ஏழு மணிக்கு என் பக்கத்தில் உட்கார்ந்திருந்தவர் 'மித்திர'னை என் கையில் கொடுத்துவிட்டுச் சென்றார்—அதுவும் ஒருதாள்தான். சற்று நேரத்திற்குள் அந்தத் தாள் முழுதும் வாசித்துவிட்டு, அன்று வெளிவரும் புதிய 'மித்திர'னுக்காக எதிர்பார்த்திருந்தேன். மணி எட்டடிக்கும் சமயமாக இருந்தது. பத்திரிகை வாசித்துக்கொண்டிருந்த அன்பர்கள் எல்லோரும் போய்விட்டார்கள். வாசகசாலை வேலையாளும் உள்ளே கதவுகளையெல்லாம் சாத்திக்கொண்டு வரும் சப்தம் என் காதில் பட்டது. 'சரி, வீட்டிற்குப் போவோம்' என்று எழுந்திருக்கும் சமயத்தில், பத்திரிகை வினியோகம் செய்பவன் 'சுதேசமித்திர'னை மேஜையின்மீது வீசியெறிந்துவிட்டுப் போனான். மேற்பார்வையாகத் தலைப்புக்களை மட்டும் பார்த்துவிட்டுப் போகலாமென்று அவசரமாகப் பத்திரிகையைப் பிரித்துப் பார்த்தேன். கொட்டை எழுத்தில், 'தென்னாட்டுக் கவிச் சக்ரவர்த்தி சுப்பிரமணிய பாரதியார் காலமானார்' என்று போடப்பட்டிருந்ததைக் கண்டதும், நான் திடுக்கிட்டுப் போனேன்.

பூராவும் வாசித்தபோது அன்று மாலை தகனம் செய்யப்பட்டதாகவும், காலஞ் சென்ற சத்திய மூர்த்தி அய்யர், சக்கரைச் செட்டியார், சுரேந்திர நாத் ஆர்யா முதலானோர் உடலைச் சுமந்து போனதாகவும் கண்டிருந்தது. மறைந்துபோன என் குருநாதரின் திருமுகத்தைக் கடைசி முறையாகப் பார்க்கக் கொடுத்துவைக்காமல் போனதைப்பற்றி அன்று இரவெல்லாம் வீட்டில் எனக்கு இடைவிடாத கவலையும் எல்லையற்ற துக்கமும் ஏற்பட்டிருந்தது.

என் குருநாதர் புதுவையில் தஞ்சம் புகுந்திருந்தபோது வறுமையில் வாடியும், அவர் மனச் சோர்வடையாமல் ஹரிஜன மக்களின் சேவைக்காகத் தியாக சிந்தையுடன் உழைத்ததை நினைத்துப் பார்க்கும் போது அவர் பிரிவால் மனம் திகலடைகிறது. தீண்டாமை வேரோடு நீங்கவேண்டும் என்ற துடிப்பு மிகுந்த நெருக்கடியான இந்தச் சமயத்தில் என் குருநாதர் விண்ணுலகு ஏகியதால் நாட்டிற்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டத்தை அளவிட முடியுமா? காலன் கருணையில்லாமலே கொண்டு போய் விட்டான்.

ஒவ்வொரு சமயத்தில் என் குருநாதரை நினைத்துக்கொண்டால் என் துயரம் அளவுமீறிப் போய்விடும். அவர் மறைந்தாலும், அவருடைய புகழ் நாள்தோறும் வளர்ந்து வருவதைப் பார்க்கிறேன். வீரத் திருவிழிப் பார்வையுடனும், இனிமையான இசையுடனும் அவரே தம் பாடல்களைப் பாடி நான் இனிக் கேட்க முடியாதுதான். ஆனால், இன்று ஆயிரக் கணக்கான குழந்தைகளும், தேச ஊழியர்களும் என் குருநாதர் கீதங்களை வாயாரப் பாடிக் களிக்கின்றார்கள். அவர்களுடைய குரல்

களிலே என் குருநாதரின் குரலை நான் கேட்கிறேன்; அவர்களுடைய இதயத் துடிப்பிலே என் குருநாதரின் இதயத் துடிப்பை நான் உணர்கிறேன். அவர் உருவத்தை மனத்தில் நிறுத்தி இன்றைக்கும் தெய்வம் போல் பூஜித்து வருகிறேன்.

வாழிய செந்தமிழ்!
வாழ்கநற் றமிழர்!

வாழிய பாரத
மணித்திரு நாடு!

வந்தே மாதரம்!
வந்தே மாதரம்!

6192a